பக்கங்கள்: முப்பத்து இரண்டு + 14

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 15 ஞாயிற்றுக்கிழமை (02.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 310




நினைத்ததை நடத்தி முடிப்பவன் நான்

## தொம்பே பொலிஸாரைத் தாக்கியோரில் ஒருவர்கூடக் கைது செய்யப்படவில்லை

கொழும்பு, ஒக். 2

கம்பஹா, தொம்பேயில் பொலிஸாரின் காவலில் இருந்த ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து ஆத்திரமுற்ற பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தி, பொலிஸாரை விரட்டி அடித்த போதும் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. அதே வேளை, காவலில் இருந்தவர் இறந்தமை தொடர்பாக அந்தப் பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 5 பொலிஸார் கொழும்பிலிருந்து சென்ற விசேட பிரிவினரால் கைது செய்யப்பட்டு அழைத்து வரப்பட்டனர்.

குற்றச் செயல்க்ள் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் காவலில் இருந்த போது உயிரிழந்தார். திருட்டுப்போன பொருள்களை மீட்பதற்காகப் பொலிஸார் அவரை அழைத்துச் சென்ற போது தப்பிக்க வாகனத்தில் இருந்து அவர் குதித்ததால் படுகாயமடைந்து உயிரிழந்தார் என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

பொலிஸாரின் விளக்கத்தை ஏற்க மக்கள் தயாராக இல்லை. ஆத்திரமுற்ற அவர்கள் பொலிஸ் நிலையத்தின் மீது கற்களையும் கையில் கிடைத்த பொருள்களையும் வீசி தாக்கியதுடன் நிலையத்தின் ஒரு பகுதிக்கும் தீ வைத்தனர். அங்கிருந்த பொலிஸார் தப்பி யோடிய போது அவர்களையும் விரட்டிச் சென்று தாக்கினர்.

உடனடியாக மேலதிக பொலிஸாரும் படையினரும் சம்பவ இடத்துக்கு அனுப்

பக் 31

## விடுவிக்கப்பட்டோர் வீடு செல்லவில்லை: பெற்றோர் கவலை

வவுனியா, ஒக். 2

இலங்கை ஜனாதிபதியால் நேற்றுமுன்தினம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 1,800 பேரில் எவரையும் தம்முடன் வீடுகளுக்கு அழைத்துச் செல்ல அதிகாரிகள் அனுமதிக்கவில்லை என்று அவர்களது பெற்றோர் குறைப்பட்டனர். எனினும் சட்ட ரீதியான ஆவணங்களை வழங்கி இன்னும் ஓரிரு தினங்களில் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று அதிகாரிகள் கூறினர்.

புனர்வாழ்வின் பின்னர் 1,800 பேர் விடுவிக்கப்படுகின்றனர் என்று அரசு அறிவித்தது. வெளிநாட்டுத் தூதுவர்கள் முன்பாக வெகு விமரிசையாக அலரி மாளிகையில் நடந்த நிகழ்வில் வைத்து முன்னாள் போராளிகள் 30பேர் நேரடியாகப் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டனர். ஆனால், அவர்களில் எவரையும் தம்முடன் அழைத்துவர அதிகாரிகள் அனுமதிக்கவில்லை என்று வடக்கில் இருந்து இந்த நிகழ்வுக்காகச் சென்ற பெற்றோர் கவலை தெரிவித்தனர். ''எங்கள் பிள்ளைகளை அழைத்து வரலாம் என்ற அவாவில் சென்றோம். ஆனால் ஏமாற்றத்துடனேயே திரும்பி வந்தோம். எங்களை ஏன் இன்னும் இப்படி அலைக்கழித்து வதைக்கிறார்கள்?'' என்றார் தாய் ஒருவர்.

விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட அனைவரும் நாளையும் நாளை மறுதினமும் விடுவிக்கப்படுவார்கள் என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் மூத்த ஆலோசகர் சதீஸ்குமார் தெரிவித்தார்.

வவுனியாவில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு நிலையங்களில் வைத்து பெற்றோர்களிடம்

பக் 31




காந்தியின் சிந்தனைகள்

## சிறுவருக்கென கொடி, முத்திரை தனியே வெளியீடு

கொழும்பு, ஒக். 2

சிறுவர்களுக்கெனத் தனிக் கொடி, பாடல் மற்றும் முத்திரை என்பன சிறுவர் தினமான நேற்று அலரி மாளிகையில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

சிறுவர் தினத்தை யொட்டிய அரச நிகழ்வு அலரி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது. பிரதமர் டி.எம்.ஜயரத்ன, அமைச்சுச்

பக் 31

# அரசு – கூட்டமைப்பு பேச்சு ஒத்திவைப்பு

### உள்ளூராட்சித் தேர்தலை காரணம் காட்டியது அரசு

கொழும்பு, ஒக்ரோபர் 2

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான 12ஆம் கட்டப் பேச்சு நாளை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் இப்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 8ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற இருப்பதனால் பிரசாரப் பணிகளில் அமைச்சர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளதன் காரணமாகப் பேச்சு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று உதயனுக்கு அறிய வந்தது. தேர்தல் பணிகளில் அமைச்சர்கள் தீவிரமாக இருப்பதால் அவர்கள் பேச்சுக்கு வரமாட்டார்கள் என்றே நாங்களும் எதிர்பார்க்கிறோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உதயனுக்குத் தெரிவித்தார்.

10ஆவது சுற்றுடன் தடைப்பட்டிருந்த அரசு – கூட்டமைப்புப் பேச்சு கடந்த மாதம் மீண்டும் ஆரம்பமானது. செப்ரெம்பர் 10ஆம் திகதி நடைபெற்ற அந்தப் பேச்சில், இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வு காண்பதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது.

இனப்பிரச்சினைக்கு ஏற்கனவே முன் வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்களான சந்திரிகாவின் தீர்வுப் பொதி, மற்றும் அனைத்துக் கட்சிக் குழுவின் யோசனைகள் என்பவற்றையும் அடிப்படைகளாகக் கொண்டு பேச்சை நடத்தவும் இரு தரப்பினரும் இணங்கி இருந்தனர்.

அந்தப் பேச்சின்போது, தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு ஒரு தீர்வை எட்டலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த யோசனையை அரசு நிராகரித்திருந்தது. தமக்கு வேறு பல பிரச்சினைகளும் இருப்பதால் மெல்லமெல்லவே பேச்சுக்களை நடத்த முடியும்

பக் 31




தப்பினார் சச்சின்

## கனடா மீது அரசு காட்டம்

கனடாவில் உள்ள தமிழர்களின் வாக்கு வங்கிக்காக இலங்கையுடனான இராஜதந்திர உறவை விலையாகக் கொடுக்க கனடா தயாராகி விட்டது என்று சீறி இருக்கிறது இலங்கை அரசு.

போர்க்குற்றச் சாட்டுகள் தொடர்

பக் 31







## மாணவிகள் சாதனை

யாழ்ப்பாணம், ஒக்.2

தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான தடகளப் போட்டியின் இரண்டாம் நாளாகிய நேற்று வடமாகாணம் 3 தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கலம் உட்பட 8 பதக்கங்களையும் ஒரு வர்ண விருதையும் பெற்றுள்ளது.

21வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தலில் 2009 ஆம் ஆண்டு தென்பகுதியைச் சேர்ந்த மாணவி ஒருவர் 2.95 மீற்றர் உயரத்தைக் கடந்து புரிந்த சாதனையை 2 வருடங்களின்

பக் 31

## மின்கம்பத்தைத் தூக்க உதவிக்குச் சென்ற இளைஞர் அது வீழ்ந்து நசியுண்டு சாவு

### பண்ணாகத்தில் நேற்று மாலை பரிதாபம்


யாழ்ப்பாணம், ஒக்.2

மின்சார சபையின் திருத்த வேலைகளின் போது மின்கம்பத்தைத் தூக்கி நிறுத்துவதற்கு உதவிக்குச் சென்ற இளைஞர் ஒருவர் அது சரிந்து விழுந்ததில் சம்பவ இடத்திலேயே நசியுண்டு மரணமானார்.

இந்தப் பரிதாப சம்பவம் பண்ணாகம், பல்லை சுட்டி என்ற இடத்தில் நேற்று மாலை இடம்பெற்

பக் 31

AIR MARK
Travels & Tours
IATA
கொழும்பு சென்னை கொழும்பு 12500/=
கொழும்பு திருச்சி கொழும்பு 13500/=
கொழும்பு மலேசியா கொழும்பு 29000/=
Call 0777727617
No. 05, Stanley Rd, Jaffna.
379 1/2, GALLE ROAD, COLOMBO - 06
94, CHATHAM STREET, COLOMBO - 01



நவீன் செரமிக்
யாழ். நகரில் உலகத் தரம் வாய்ந்த டைல்களைப் பெற்றுக்கொள்ள..
Metro Engineering (Pvt) Ltd
365 Days Open
212, Palaly Road, Jaffna. 021 222 0044 / 021 222 0033
05, Stanley Road, Jaffna. 021 222 4777 / 021 222 4888



உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# மனித உரிமை நிலவரம் தொடர்பாக அமெரிக்க பிரதிநிதி - சம்பந்தன் பேச்சு

கொழும்பு, ஒக்.02

இலங்கையின் தற்போதைய மனித உரிமை நிலவரம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் அமெரிக்காவின் தெற்காசிய மற்றும் மத்திய கிழக்குக்கான காங்கிரஸின் உபகுழுவின் தலைவர் ஸ்டீவன் சபெட் கலந்துரையாடியுள்ளார்.

அமெரிக்க குடியரசுக் கட்சியின் ஓஹையோ மாநிலப் பிரதிநிதியும், அமெரிக்காவின் தெற்காசிய மற்றும் மத்திய கிழக்குக்கான காங்கிரஸ் உபகுழுவின் தலைவருமான ஸ்டீவன் சபெட் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்தார். இதன்போது இலங்கையின் இராஜதந்திர மட்டங்களில் பலரை சந்தித்ததுடன் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்ற இராப்போசன விருந்தின் போதே ஸ்டீபன் சபெட் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இடையே இரண்டு மணி நேரம் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது இலங்கையின் மனித உரிமை விவகாரம் தொடர்பாகவே வெகு நேரம் கலந்துரையாடப்பட்டுள்ளது. இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் தொடர்பான நிலைமைகள் எவ்வாறு இருக்கின்றது மற்றும் மனித உரிமை தொடர்பாக இலங்கை அரசின் போக்கு என்பன தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதே சமயம் இலங்கை அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் தொடர்பாகவும் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாகவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் விடயத்தில் அமெரிக்க அரசு கூடுதல் அக்கறை கொண்டுள்ளதாகவும் சபெட் தெரிவித்தார். (ஒ-15)


# யாழ். நகரில் இன்று கர்நாடக இசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.02

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகமும் இணைந்து நடத்தும் இந்தியாவின் கர்நாடக இசைத் துறையில் முன்னணியில் திகழும் வித்துவான் ரி.எம்.கிருஷ்ணா குழுவினரின் கர்நாடக இசை நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், இந்தியத் தூதரக யாழ். அலுவலக அதிகாரி வி.மகாலிங்கம், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

இதில் ஆர்வலர்கள் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-311)




அனைத்து மாவட்டங்களிலும் வானம் தெளிவாக காணப்படுவதற்கான சாத்தியம் உண்டு.

# ஜப்பான் கண்ணி அகற்றும் பணிக்கு 780 ஆயிரம் அமெ. டொலர் வழங்கியது

## கொழும்பில் ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, ஒக.02

ஜப்பானிய அரசாங்கத்தினால் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுக்கு மானிய அடிப்படையில் 780 ஆயிரம் அமெரிக்க டொலர் முகவர் நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதரகத்தில் நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் ரகாஷி மற்றும் கண்ணிவெடி அகற்றும் முகவர் நிலையமான எவ்.எஸ்.டியின் திட்ட முகாமையாளர் ரொபின்ஸனும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ஜப்பானிய தூதர்; கொடுக்கப்படும் நிதி மூலமாக கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகள் நிகழ்ந்தால் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் 5 ஆயிரம் மக்கள் வரை அவர்களது சொந்த நிலங்களைப் பாவிக்கக் கூடியதாக இருக்கும். அத்துடன் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த நூறு பேருக்கு இந்த கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகளில் வேலை வாய்ப்பும் வழங்க முடியும் - என்றார்.

இங்கு கருத்து தெரிவித்த எஸ்.எஸ்.டியின் திட்ட முகாமையாளர் ரொபின்ஸன்; இப்போது முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் கண்ணிவெடி அகற்ற இன்னும் இரண்டு வருடங்கள் வரை செல்லும். அத்துடன் முன்னுரிமைப்படுத்தப்படாத இடங்களில் கண்ணிவெடி அகற்றி முடிப்பதற்கு ஆகக் குறைந்தது எட்டு ஆண்டுகளாவது தேவை.

மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இதுவரை 32 ஆயிரம் நிலக் கண்ணிகளையே மீட்டெடுத்துள்ளோம். இன்னும் 5 லட்சம் கண்ணிவெடிகள் மீட்கப்பட வேண்டியுள்ளன. எமது நிறுவனத்தில் 22 குழுக்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளன. அவர்களின் கீழ் 750 பணியாளர்கள் இருக்கின்றனர். அத்துடன் எமது குழுக்களில் உள்ளவர்கள் கண்ணிவெடி அகற்றி மக்கள் மீளக்குடியமர்ந்த இடங்களில் விழிப்புணர்வு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர் - என்றார். (ஒ-15)

# விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஒக்.2

மோட்டார் சைக்கிள்- ஐஸ்கிறீம் வான் விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில் இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேலணை துறைமுகச் சந்தியில் நேற்றுமாலை இடம்பெற்ற இந்த விபத்தில் அதே பகுதியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் சதாநந்தன் என்பவரே காயமடைந்தவராவார். (ஒ-323)

# தேர்தல் பிரசாரம்: நாளொன்றுக்கு ரூ. 10 லட்சம் செலவு

கொழும்பு, ஒக்.2

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் சிலர் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக நாளொன்றுக்கு 10 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையைச் செலவிடுகின்றனர்.

இவ்வாறு தேர்தல் பிரசார நடவடிக்கை தொடர்பாக தம்மால் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பின் மூலம் தெரியவந்திருப்பதாக 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

இம்முறை தேர்தல் அரசியல் தரப்புக்களால் உள்ளூராட்சி நிர்வாக மட்டத்துக்கு மேற்கொள்ளப்பட்ட அழுத்தங்கள் மிகவும் அதிகம் எனவும் தெரிவித்துள்ளார். (ஒ)

# தேசிய சுகாதார வார நிகழ்வுகள் நாளை முதல்

## இறுதி நாளன்று நாவலர் கலாசார மண்டபத்தில் விழிப்புணர்வு நாடகம்

யாழ்ப்பாணம், செப்.02

யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் தேசிய சுகாதார வார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. நாளை திங்கட்கிழமை 3 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேசசெயலகத்துடன்இணைந்து பல்வேறு திணைக்களங்கள், நிறுவனங்கள் பொது அமைப்புகள் ஒத்துழைப்புடன் பல்வேறு சுக நல மேம்பாட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

சுகாதார வாரத்தின் நாளான முதல் நாள் திங்கட்கிழமை பிரதேச சுகநல வார ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில், பிரதேச செயலர் தலைமையிலும், பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் தலைமையிலும் இடம் பெறும்.

இரண்டாம் நாளான எதிர்வரும் 4 ஆம் திகதி யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட சகல இடங்களிலும் சிரமதானம் மூலம் சுத்திகரிப்புப் பணிகள் நடைபெறும்.

மூன்றாம் நாளான எதிர்வரும் 5 ஆம் திகதி பாடசாலை சுகநலம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகளை நடைமுறைப்படுத்தல், பாடசாலை மாணவர்களின் போசாக்கு மதிப்பீடு செய்தல், பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களுக்கான சுகநல விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம் பெறும்.

### அரச ஊழியர்களுக்கு மருத்துவ பரிசோதனை

நான்காம் நாளான எதிர்வரும் 6 ஆம் திகதி, 35 வயதுக்கு மேற்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை இடம்பெறும். நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் யாழ்ப்பாண பிரதேச செயலகத்திலும் இந்தப் பரிசோதனை நடைபெறும்.

யாழ். மாநகர பகுதியில் பொது இடங்களையும் வடிகால்களையும் சுத்தம் செய்தல், விசேட தேவைக்கு உட்பட்டவர்களுக்கு உதவி வழங்கல், நோயாளர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### முதியோர்களுக்கான நிகழ்வுகள்

ஐந்தாம் நாளான எதிர்வரும் 7 ஆம் திகதி முதியவர்களுக்கான சுகநல விழிப்புணர்வுத் திட்டம், இலவச மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளல் முதியோர் இல்லத்தில் விளையாட்டுப் போட்டி போன்றவையும் ஆறாம் நாளான எதிர்வரும் 8 ஆம் திகதி வணக்கஸ்தலங்களில் துப்புரவுப் பணியும்-

ஏழாம் நாளான எதிர்வரும் 9 ஆம் திகதி பெறப்பட்ட தரவுகள் அறிக்கைகள் சார்பாக குழுநிலை ஆய்வு மேற்கொண்டு எதிர்கால வேலைத்திட்டத்தைத் தயார்படுத்தலும் இறுதி நாளான எதிர்வரும் 10 ஆம் திகதி நாவலர் மண்டபத்தில் சுகாதார விழிப்புணர்வு நாடக நிகழ்வும் இடம் பெறவுள்ளன. (ஒ-14)

# நிகழ்வுகள்

**ஆன்மீக சஞ்சிகை வெளியீடு**

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சூழலில அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமம் ''சக்கரம்'' ஆன்மீக சஞ்சிகையின் முதலாவது இதழ் வெளியீட்டுவிழா இன்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெறும். ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் இ.அன்னலிங்கம் விழாவுக்கு தலைமை வகிப்பார். (ஒ-236)

**இலவச மருத்துவ முகாம்**

அச்சுவேலி, சுன்னாகம், யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று காலை 8.30 மணிக்கு நவக்கிரி அ.மி.த.க. பாடசாலையில் நடைபெறும். அங்கு இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படும். (ஒ-121)

**ஆன்மீகச் சொற்பொழிவு**

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் இடம்பெற்றுவரும் வாராந்த ஆன்மீக் நிகழ்வு வரிசையில் இன்று ''மகாபாரதம்'' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவை பண்டிதர் பொன்.சுகந்தன் நிகழ்த்துவார். (ஒ-236)

**இறுவட்டு வெளியீடு**

பருத்தித்துறை, சுப்பர்மடம் முனிஸ்வரப் பெருமான் மீது பாடப்பட்ட முனிஸ்வர கானங்கள் இறுவட்டு வெளியீட்டு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில், அச்சுவேலி இலங்கை வங்கிக்கிளை முகாமையாளர் த.புவனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

**நினைவஞ்சலிக்கூட்டம்**

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக மகளிர்குழுவின் முன்னாள் தலைவி அமரர் சுகிர்தலக்ஸ்மி சுப்பிரமணியத்தின் நினைவு அஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் வளர்மதி வேலாயுதபிள்ளை அரங்கில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் அன்னாரின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்துவைக்கப்படும். (ஒ-323)

**பொதுக் கூட்டம்**

ஏழாலை இந்து இளைஞர் சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு மன்றத் தலைவர் மயூரதன் தலைமையில் ஏழாலை சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேஸ்வர ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஒ-323)

**கலந்துரையாடல்**

யாழ். மாவட்ட சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பில் உள்ள அனைத்து அங்கத்தவர்களுக்குமான கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியில் இடம்பெறவுள்ளது. மேற்படி அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் பேராசிரியர் கலாநிதி சாந்தன் அறிவித்துள்ளார். (ஒ-323)

**நவராத்திரி விழா**

மேலைப்புலோலி, தம்பசிட்டி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கனகடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் நவராத்திரி விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நிலையத்தலைவர் லயன் கே.தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-236)

# யாழ். நூலகத்தில் 'கட்அவுட்' டை அகற்றி விட்டால் கொடியவர்களின் அராஜகம் மறைந்து விடுமா?

யாழ்ப்பாணம், ஒக்.02

யாழ். பொது நூலகத்தைப் பார்வையிடச் செல்லும் சிங்கள மக்களால் அவதானிக்கப்பட்ட பின்னர் கொடுக்கப்பட்ட அழுத்தங்களை அடுத்து அங்கு வைக்கப்பட்டிருந்தது. சிங்கள காடையர்களால் எரியூட்டப்பட்டது என்ற வாசகம் அடங்கிய 'கட்அவுட்' நூலக முன்றிலில் இருந்து நூலக அதிகாரிகளினால் அகற்றப்பட்டுள்ளது.

பொது நூலகம் எரிக்கப்பட்ட வரலாற்றை மூடி மறைக்கும் வகையில் திட்டமிட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக புத்தஜீவிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது.-

கடந்த 81 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பொது நூலகம் சிங்களக் காடையர்களால் எரியூட்டப்பட்டது. அந்த வரலாற்றுச் சம்பவத்தை சித்திரிக்கும் புகைப்படங்களை உள்ளடக்கிய பெரிய அளவிலான 'கட்அவுட்' ஒன்று நூலகத்தின் முன்றிலில் வைக்கப்பட்டிருந்தது.

அதில், சிங்களக் காடையர்களால் எரியூட்டப்பட்ட நூலகத்தின் தோற்றம் எனக் குறிப்பிட்டு எரிந்த நூலகத்தின் தோற்றம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

தற்போது அந்த வாசகத்தை மறைத்து இல்லாமல் செய்யப் பட்டுள்ளது. குறிப்பிட்ட அந்த வாசகத்தை மூடி அதற்கு மேல் புனரமைப்புக்கு முன்னைய தோற்றம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வாசகம் மாற்றி எழுதப்பட்டதன் பின்னர் அந்தக் 'கட்அவுட்' தொடர்பாக புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள், நூலகவாசகர்கள் பல்வேறு அபிப்பிராயங்களைத் தெரிவித்ததை அடுத்து தற்போது அது வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளது.




சிங்களக் காடையர்களால் எரியூட்டப்பட்டது என்ற வாசகம் அகற்றப்பட்ட 'கட்அவுட்'

இந்த விடயம் தொடர்பாக நூலகர் திருமதி இமெல்டா கருணாகரனிடம் கேட்டபோது:

வாசகம் மாற்றப்பட்டதற்கும் அரசியலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அதற்கும் அரசியல் காரணம் எதுவும் இருக்கவில்லை. எமது நூலகத்தில் நிர்வாகத்தின் முடிவின் பிரகாரமே அது மாற்றப்பட்டுள்ளது.

தென்னிலங்கையிலிருந்துவரும் சுற்றுலாப் பயணிகள் பலரும் 'சிங்களக் காடையர்கள்' என்ற வாசகத்தால் குழப்பம் அடைந்தனர். தேவையற்ற குழப்பத்தைத் தவிர்க்கும் வகையில் ஆறு மாதங்களுக்கு முன்னரே அந்தக் 'கட்அவுட்'டை வாசகர் பார்வையிலிருந்து அகற்றி விட்டோம்.

நூலகத்தைத் துப்புரவு செய்யும் பணி இடம்பெற்றது. அதன் காரணமாக நூலகத்தினுள்ளே மறைவாக வைக்கப்பட்டிருந்த அந்தக் 'கட்அவுட்'டைத் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் வெளியே வைத்துவிட்டனர். அந்தக் 'கட்அவுட்' டில் வாசக மாற்றத்தை நாமே மேற்கொண்டிருந்தோம். தற்போது மீளவும் அது நூலகத்தினுள்ளே வாசகர் பார்வைக்கு தெரியாமல் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். பொது நூலகத்தைத் தினசரி 500க்கும் அதிகமான தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். அதேவேளை அரச அதிகாரிகளின் கூட்டங்கள் பல நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்று வருகின்றன. அவர் அரசியல்வாதிகள் மற்றும் அமைச்சர்கள் பங்குபற்றி வருகின்றனர்.

இந்த நிலையிலேயே காட்சிப்படுத்தப்பட்ட 'கட்அவுட்' டில் வாசகம் மாற்றப்பட்டிருக்கிறது. (த-14)

# புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள 36 சிறுவர்களுக்கு வங்கிக் கணக்கு

## சர்வதேச சிறுவர் தினத்தில் ஆரம்பிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.02

சர்வதேச சிறுவர் தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களும் இந்தத் தினத்தைக் கொண்டாடினர். அவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டதோடு, 36 பேருக்கு வங்கிக் கணக்குகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலை மண்டபத்தில் இந்தச் சிறப்பு நிகழ்வு வைத்திய நிபுணர் என். ஜெயக்குமாரன் தலைமையில் காலை 9 மணியளவில் ஆரம்பமானது. 42 சிறுவர்கள் இதில் பங்குபற்றியிருந்தனர்.

'செரண்டிப்' சிறுவர் இல்லத்தினர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். நிறுவனத்தின் தலைவர் அ. கந்தசாமி ஐயாயிரம் ரூபா வீதம் வறுமைப்பட்ட சிறுவர்கள் 30 பேருக்கு பணம் வைப்பிலிட்டு வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து வைத்தார்.

### வர்த்தகரின் பெருந்தன்மை

இதுதவிர சங்கானையைச் சேர்ந்த வர்த்தகரான வை. கிருஷ்ணதாசன் வறுமைக்கோட்டுக்குட்பட்ட 5 சிறுவர்களுக்கு இரண்டாயிரம் ரூபா வீதம் பணம் வைப்பிலிட்டு வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து வைத்தார். இதே தொகைப் பணத்தை ஐவருக்கும் மாதந்தோறும் இரண்டு வருடங்களுக்கு அவர்களுடைய வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவதற்கும் ஒப்புக்கொண்டுள்ளார்.

வட பிராந்திய அரிமாக் கழகங்களின் புற்றுநோய் நிதியம் நிகழ்வில் கலந்துகொண்ட சிறார்களுக்கு சத்துமா வழங்கியிருந்தது. ஒவ்வொரு சத்துமாவின் பெறுமதி சுமார் 7 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய நிகழ்வில் வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட சிறார்கள் கலந்துகொண்டிருந்தனர்.

சிறுவர்களுக்கு பணிஸ் சாப்பிடுதல், பலூன் ஊதி உடைத்தல், சங்கீதக் கதிரை, பாட்டு, பேச்சு எனப் பல கலைநிகழ்வுகள் நடத்தப்பட்டன. அவற்றில் வெற்றிபெற்ற முதல் மூன்று சிறுவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அனைவருக்கும் விளையாட்டுப் பொருள்களும் வழங்கப்பட்டன.

சிறுவர் தின நிகழ்வில் புற்றுநோய் பிரிவு வைத்தியர்கள், தாதியர்கள், சிறார்களினதும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



'செரண்டிப்' சிறுவர் இல்லத் தலைவர் அ. கந்தசாமி, சிறுவன் ஒருவனுக்கு வங்கிக் கணக்கு ஆரம்பித்து வைத்து வங்கிப் புத்தகத்தைக் கையளிப்பதையும் வைத்திய நிபுணர் என். ஜெயக்குமாரன் உட்பட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் காணலாம். (ஒ-4)

# கோப்பாய் அதிரடியாக இன்று டெங்கு ஒழிப்பு 40 டிராக்டர்கள் மூலம் கழிவகற்றும் பணி

## ஒத்துழைக்காதவர்கள் குற்றப்பணம் செலுத்த நேரிடும்

யாழ்ப்பாணம், ஒக்.02

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னிட்டு புத்தூர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் கோப்பாய் உப அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் "பூச்சியக் குப்பை" என்னும் கழிவகற்றும் நடவடிக்கைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பருவமழையின்போது டெங்கு காய்ச்சலைப் பரப்பும் ஒடிஸ் நுளம்புகளை அழிக்கும் நடவடிக்கைகளின் முதற்கட்டமாக இந்தப் பணிகள் வலிகிழக்கு பிரதேச சபையினால் மேற் கொள்ளப்படவுள்ளன.

இந்த நடவடிக்கைகளில் 40 உழவு இயந்திரங்கள் குப்பைகளை ஏற்றும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

எனவே பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கி வீட்டுக் காணிகளில் உள்ள குப்பைகள், வெற்றுக் காணிகளில் உள்ள குப்பைகளை அகற்றி வீதிகளில் வைக்குமாறு வலிகிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் அறிவித்துள்ளார். அத்துடன் வியாபார ஸ்தாபனங்கள், பாடசாலைகள், திணைக்களங்கள் ஆகியவற்றுக்கு இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை பூச்சியக் குப்பை எனும் கழிவகற்றும் திட்டத்தில் ஒத்துழைப்பு வழங்காமல் சம்பந்தப்பட்டசுற்றாடல்களில் நாளை திங்கட்கிழமை குப்பைகள் காணப்பட்டால் குற்றப்பணம் செலுத்த நேரிடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-313)

# காயங்களுடன் ராணுவம் அனுமதித்த நபர் நேற்றுச் சாவு

விபத்தில் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டு கடந்த 22ஆம் திகதி இராணுவத்தினரால் அழைத்து வரப்பட்டு, சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் 9 நாள்களின் பின் நேற்று மரணமானார்.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த நடேசு சந்திரகாந்தன் (வயது - 36) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

பிரஸ்தாப நபர் புன்னாலைக் கட்டுவனிலிருந்து கிளிநொச்சிக்கு தொழில் நிமித்தம் '49 சிசி' ரக மோட்டார் சைக்கிளில் சென்று வருபவர். கடந்த 22ஆம் திகதி கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும்போது முகமாலைப் பகுதியில் மாலை வேளை விபத்துக்குள்ளாகியுள்ளார். காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்த்த இராணுவத்தினர், பன்றி குறுக்கே சென்று மோதுண்டதால் விபத்தில் காயமடைந்தார் என்று தெரிவித்தனர்.

அன்றைய தினமே மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு செயற்கை சுவாசம் வழங்கப்பட்டு வந்தது.

தலையில் பலமாக அடிபட்டிருந்தமையினால் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் அவர் உயிரிழந்தார். இவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஒ-15)

# மாதகல் ஜே/150 பிரிவில் அடுத்த வாரம் மீள்குடியமர்வு

## கடற்படை அதிகாரிகள் உறுதி

சண்டிலிப்பாய், ஒக்.02

மாதகல் பிரதேசத்தில் ஜே/150 கிராம சேவையாளர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் அடுத்த ஒரு வார காலத்துக்குள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர் என சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்ட கடற்படை அதிகாரிகள் இந்த உறுதிமொழியை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாதகல் பிரதேசத்தில் ஜே/150 கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த 70 குடும்பங்கள் சொந்த இடங்களில் மீள் குடியமர்வதற்கு கடற்படையினர் கடந்த மாதம் அனுமதி வழங்கி யிருந்தனர்.

இதைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட குடும்பங்கள் தங்கள் காணிகளுக்குச் சென்று துப்புரவு செய்து குடிசைகளையும் அமைத்து வந்தனர். ஒரு வாரத்துக்குப் பின்பு இவர்கள் அங்கு செல்வதற்கு கடற்படையினர் தடை விதித்தனர். இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பிரதேச செயலர் மற்றும் சம்பந்தப்பட்டவர்களின் உதவியை நாடினர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது குறித்து பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மீள் குடியமர அனுமதி மறுக்கப்பட்ட குடும்பங்கள் ஒரு வாரத்துக்குள் மீள் குடியமர அனுமதிக்கப்படுவர் எனக் கூட்டத்தில் கலந்து கொண்ட கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

(த-115)

**கார் விற்பனைக்கு**

HYUNDAI, STELLAR-GSL MODE2, WHITE COLOUR 14 SRI நல்ல நிலையில் உள்ள கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779184603

**தேவை**

செட்டிகுளத்தில் இருக்கும் தோட்டக்காணியில் தங்கியிருந்து தோட்ட வேலை செய்வதற்கு நம்பிக்கையான தமிழ்க்குடும்பம் தேவை.

தொடர்பு: 0778481972

# வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் இன்று இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.02

கோண்டாவில் கிழக்கு ஹரி இளைஞர் மன்ற பத்தாவது அகவையை முன்னிட்டு இரத்ததான முகாம் இன்று முற்பகல் 10.30 மணிக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான ஆலய சூழலில் அமைக்கப்பட்டுள்ள மேற்படி மன்றத்தின் பந்தலில் இடம்பெறும். யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிப் பிரிவுடன் இணைந்து நடத்தும் இந்த முகாமில் அனைவரையும் கலந்து கொண்டு உயிர் காக்கும் உன்னத பணியாகிய இரத்ததானத்தை வழங்குமாறு மன்றத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஒ-323)

**வீடுகள் விற்பனைக்கு**

தெகிவளையில் Galle Road இற்கு மிக அருகில் அமைதியானதும், பாதுகாப்பானதுமான சூழலில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள Apartment இல் 3 B/R, 2 B/R, 1 B/R வீடுகள் 44 லட்சத்தில் இருந்து விற்பனைக்குண்டு. முன்பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்க:

**0777368764.**

## Be a part of the team of the Largest International Educational Institute Network in Sri Lanka!

We need experts from all 9 provinces.

(WESTERN, CENTRAL, SOUTHERN, NOTHERN, EASTERN, NORTH CENTRAL, NORTH WESTERN, UVA, SABARAGAMUWA)

If you are a professional with a sound background and a proven track record, to be a competent personality to achieve the set objectives of an International Educational Institute; we would like to welcome you aboard!

We invite experienced experts from all 9 provinces for following positions.

- Regional Managers
- Branch Managers
- Marketing Executives
- Student Counselors

We also need qualified, skilled personnel with warm personalities as.

- Trainers / Facilitators – IT
- Trainers / Facilitators – English Language

Selected candidates will receive overseas training opportunities in addition to the attractive package on offer for your proven capabilities.

*Please forward your Resume, stating the qualifications and experience together with the complete contact details within 5 working days.*

via Email – info@srmlanka.com
or addressed to

CEO,
SRM Lanka (Pvt.) Ltd.,
329 - 1st Floor,
Galle Road, Colombo 04
Info : 011 2592323

SRM

## ஆசிரிய தின நிகழ்வு

சித்தன்கேணி சுப்ரா (14) கல்வி நிறுவனத்தில் ஆசிரியர் தின விழாவும் வாணி விழாவும் இன்று பிற்பகல் 3 மணிக்கு கல்வி நிறுவன மண்டபத்தில் கு.சுவர்ணன் தலைமையில் இடம் பெறும். (ஒ-311)

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் டிப்போவுக்கு அருகில் உள்ள வீதியில் 24 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777062009

**வீடு, காணி விற்பனைக்கு**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில் பிரதான வீதியில் **Attached Bathroom** உடன் **Terrazo** பதித்த தனியார் ஸ்தாபனங்களுக்கும் ஏற்ற 8 பரப்பு நிலத்துடன் வீடும். **Technical College** இற்கு அருகில் வயல் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 011-2729855 / 0777217132

**காணி விற்பனைக்குண்டு**

திருநெல்வேலி **Farm School** க்கு அண்மையில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0722690686**
(பி.ப. 2 மணிக்குப் பின்னர்)

## கண்ணீர் அஞ்சலி

### வீரகத்தி நாகமுத்து

*(ஓய்வுபெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)*



*பாசமெனும் கூட்டில் - நாம்*
*பாசப்பறவைகளாய் வாழ்ந்தோம் - இன்று*
*பாதிவழியில் எம்மை விட்டுவிட்டு*
*விண்ணுலகம் சென்று விட்டீர்*
*தூரத்தில் இருந்து கொண்டு*
*துடிக்கிறோம் அன்பு அப்பா*
*மண்ணுலகு உள்ளவரை - உங்கள்*
*அன்பு மறைந்திடாது*
*இறைஞ்சுகின்றோம் இறைவனை - நாம்*
*உங்கள் ஆத்ம சாந்திக்காய் !*
*ஓம் சாந்தி !*

இளங்கோ குடும்பம்,
இத்தாலி.

**கொக்குவில் வளர்மதி முன்பள்ளி**
**ஆண்டு-5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011**

மேற்படி முன்பள்ளியில் கல்வி கற்று ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2011 இல் தோற்றி முடிவுகள் கிடைக்கப்பெற்ற மாணவர்கள் தங்கள் பெறுபேறுகளை எமது நிலையத்தில் 04.10.2011 இற்கு முன்னர் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில். நிர்வாகம்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



*திருமதி கணபதிப்பிள்ளை சிவபாக்கியம்*

கடந்த 02.09.2011 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு இல்லம் வந்து எமது துயரில் பங்கெடுத்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோருக்கும், கடிதம், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், இறுதிக் கிரியைகளில் பங்கெடுத்தோருக்கும் எங்கள் உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (02.10.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி யளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

குடும்பத்தினர்

*அதிகார செல்லமுத்து வீதி,*
*மானிப்பாய்.*

**DIPLOMA COURSES**

அனிமேஷன்




Web Development
Cartoon Animation
Video Production
Graphic Design
Adobe Applications
Desktop Publishing
3D Studio Max

CSC-ASIAN
COMPUTER EDUCATION

யாழ்.நகர்- 2G ஸ்ரான்லி வீதி, 021 2225677
நெல்லியடி - கொடிகாமம் வீதி, 021 2262399
சாவகச்சேரி- 230, கண்டி வீதி, 021-2270267

## மரண அறிவித்தல்

### நடராசா சச்சிதானந்தன்



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட (Retired Manager Housing Authority English Lecturer, Jaffna Technical College) நடராசா சச்சிதானந்தன் 30.09.2011 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பசேகரம் நடராசா (Teacher)-பாக்கியவதி நடராசா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற O.A. இராமநாதன்-சிவகாமி அம்மாள் தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற நடராசா பாலசுப்பிரமணியத்தின் (Former Ambassider of Sri Lanka) அன்புச் சகோதரனும், இரங்கநாயகியின் அன்புக் கணவரும், வானதி (Accountant), ஞானக்குமரன் (Doctor) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசிகனின் (Hatton National Bank) பாசமிகு மாமனும், சஷ்வினின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Mahinda Funneral Floural, Mount Lavania வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
இரங்கநாயகி சச்சிதானந்தன்.
(மனைவி)

1A, 6/2, Ebennizer Place,
Dehiwala.

## விநியோகஸ்தர் (விற்பனை முகவர்) தேவை

இலங்கையின் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றான ஹேலீஸ் கொன்ஸ்யுமர் (*Hayleys Consumer*) நிறுவனத்தின் பொருள்களை யாழ். மாவட்டத்தில் சந்தைப்படுத்த தகுதி வாய்ந்த

★ **விநியோகஸ்தர் (விற்பனை முகவர்)**
★ **மொத்த விற்பனையாளர்** தேவை.

விண்ணப்பிக்க விரும்புவோர் 05.10.2011(புதன்கிழமை) காலை 9.00 மணி தொடக்கம் **"ஹேலீஸ் காட்சியறை"** *(The World of Hayleys)* இல. 51, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம் எனும் முகவரியில் **ஹேலீஸ் கொன்ஸ்யுமர்** விற்பனைப் பிரிவுத் தலைவரை நேரில் சந்திக்கவும்.

**தொ.பே : 077 7328463, 021 2221292**

**குறிப்பு :**
கீழே தரப்படும் தகைமைகள் விரும்பத்தக்கது
★ வங்கிப் பிணை
(BANK GUARANTEE) Rs. 1, 000, 000.00
★ களஞ்சிய, விநியோக வசதி

Hayleys
CONSUMER

## மனதார வாழ்த்துகின்றோம்

யா/கைதடி கலைவாணிப் பாடசாலையின் முதல்வரும், மணிவிழா நாயகனுமாகிய

உயர்திரு
**ப.செல்லத்துரை (J.P)**
அவர்கள்



இந்த நாளில் சீரும் சிறப்புடன் வாழ மனநிறைவான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

வாழ்த்துவோர்:
திரு. திருமதி சிறிதரன்-நிர்மலா

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மற்றொரு வடிவத்தில் வந்துள்ள ஆபத்து: மரபுரிமைப் பறிப்பு!

தமிழர்கள் இந்த நாட்டின் சிறுபான்மை இன மக்களே. அதனால் அவர்களின் அரசியல் உரிமைகளில் மட்டுமன்றி, அவர்தம் வாழ்வியல் மற்றும் வரலாற்றியல், பண்பாட்டியல் உட்பட்ட சகல துறைகளிலும் கைவைக்கும் உரிமை தமக்கு உண்டு என்று அரசினரும் அதன் அதிகாரிகளும் கொட்டம் அடிக்கும் காலமாக இப்போது மாறியுள்ளது.

தமிழ் மக்கள் மீதான அரசியல் அடக்குமுறை அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. அந்த அடக்குமுறையின் இரண்டு பிரதான அங்கங்களாக மொழி உரிமை மறுப்பும், நிலப் பறிப்பும் முதன்மை வகித்தன.

இப்போது அது முற்றிப் பழுத்து எல்லாத் துறைகளையும் அரித்தெடுக்க ஆரம்பித்துள்ளது. அவற்றில் ஆகப்பிந்தியது தமிழ் மக்களின் தேசிய மரபுரிமைகளை அழித்துப் புரட்டி விடுவது அல்லது சீர்கெடுத்து விடுவதாகும். ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து பின்னர் மனிதனைக் கடிப்பது என்ற நிரைவரிசை, இப்போது தொல்லியல் சின்னங்களைச் சிதைத்தல் அல்லது அழித்தல் என்றாகிவிட்டது!

அதன் ஆரம்ப அங்கமே நூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த யாழ்ப்பாணப் பழைய பூங்காவை அழித்து உருமாற்றம் செய்யும் செயற்பாடு. எல்லா நாடுகளிலும் தொல்லியல் அடையாளங்களும் ஆவணங்களும் காலாதிகாலமாகப் பேணிக்காக்கப்படுவது உலகளாவிய வழமையாகிவிட்டது. ஆனால் இலங்கையில் தமிழர் பிரதேசங்களுக்கு அது அரசினால் விதிவிலக்காக்கப்பட்ட நிலைமை தோன்றிவருகிறது.

எமது பிரதேசத்தின் மரபு ரீதியான வகை சார்ந்து கட்டப்பட்ட கச்சேரி வளாகத்தில் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட யாழ்ப்பாண வரலாற்று எச்சங்கள் மறைந்திருக்கும் என நம்பப்படுவது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

ஒல்லாந்தர்களால் அடையாளப்படுத்தப்பட்ட நிலையங்களாகக் கருதப்பட்ட கோட்டைகளும் கொத்தளங்களும், முன்னர் ஒரு காலத்தில், யாழ்ப்பாணத் தமிழர்களின் பூர்வீக குடிமனைகளாகவும் அரசு சார்ந்த செயல்களை நடைமுறைப்படுத்தும் பகுதிகளாகவும் விளங்கியதாக தொல்லியல் ஆதாரங்கள் கிடைத்துவரும் காலமிது.

யாழ். கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வுகள் மேற்கூறிய உண்மைகளை வெளிக்கொணர்ந்ததாக அறியப்படுகிறது. ஆனால் விடயம் வெளிச்சத்துக்கு வந்ததும் பரீட்சார்த்தமான ஆய்வுகூட நிறுத்தப்பட்டுவிட்டது.

மரபு ரீதியான வழிமுறைகளில் நிறுவப்பட்ட பழைய கச்சேரி வளாகத்தில் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட யாழ்ப்பாணத்து வரலாற்று எச்சங்கள் மறைந்திருக்கும் என்று நம்பப்படுகிறது.

இவற்றை முற்கூட்டியே அறிந்து கொண்டுதான், அரசாங்கம் யாழ். பழைய (கச்சேரிப்) பூங்காவை உருமாற்ற முனைகிறது என்ற தேற்றம் ஒன்று வகுக்கப்பட்டால் தவறன்று.

இதற்கு மத்தியில், இன்னோர் உலக வழமை அல்லது வழக்காறு கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். உலகில் வாழும் எந்த ஓர் இனமும் பேணிக்காக்கும் நூறு வருடங்களுக்கு மேற்பட்ட எந்தப் பொருளும் அந்த இனத்தின் மரபுரிமைச் சின்னம் என்று கொள்ளப்படுகிறது. இதனை, ஐ.நா. கல்வி, விஞ்ஞான, கலாசார அமையம் (யுனெஸ்கோ) பிரகடனப்படுத்தியுள்ளது.

அதாவது, நூறு வருடங்களாக ஒரு பிரதேசத்தில் வாழ்ந்து வரும் மனிதக்குழுமம் - இனம் - அதன் பூர்வீக குடிகளாகக் கருதப்பட்டு, அவற்றின் கலாசார அடையாளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது சர்வதேச விதியாகிவிட்டது.

இதனை உள்மனதில் வைத்து, தமிழர்களின் தொல்லியல் மற்றும் கலாசார அடையாளங்களை அழிக்கும் சதியின் ஓர் அங்கமே யாழ்ப்பாணப் பழைய பூங்காவைச் சிதைத்து மாற்றும் அல்லது புதிதாக அமைக்கப்போகிறோம் என்ற பம்மாத்து.

இலங்கையில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களை மரபுரிமைச் சின்னங்களாக அறிவித்து, தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் வைத்திருக்கும் அரசு, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள் தமது மரபுரிமை எதனையும் சொந்தம் கொண்டாடாமல் தடுப்பதே, அவ்வாறு எதுவும் இல்லாமல் துடைத்து எறிவதன் - துவம்சம் செய்வதன் ஓர் அங்கமே - ஆரம்பமே யாழ். பழைய பூங்காவின் இடித்துடைப்பு அநியாயம்.

இத்தனைக்கும் அது குடாநாட்டில் வாழும் மக்களின் நம்பிக்கைச் சொத்து. அது அரச சொத்தல்ல. பழைமை வாய்ந்த புராதன இடங்கள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டியவையே அன்றி, அழித்தோ அன்றிச் சேதமாக்கப்பட வேண்டியவைகளோ அல்ல.

யாழ்ப்பாணப் பழைய பூங்காவில் உள்ள மாவட்டச் செயலகமும் அதனுடன் இணைந்த நீர்த் தடாகமும் தொல்லியல் சின்னங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் அமைப்பியலில் மாற்றம் செய்வதோ அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதோ புனரமைப்பு வேலைகளை இயற்றுவதோ தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியுடனேயே மேற்கொள்ளப்பட முடியும்.

ஆனால் எத்தகைய நெறிமுறைகளுக்கும் உட்படாது, குடாநாட்டின் புரதான மையம் ஒன்று, ஆபத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தனத்தின் மெத்தனப் போக்குக்கு விலை போவோர் எமது இனத்தின் எதிர்கால ஆபத்தைப் பகுத்துணரத் தவறுவது ஏன்?

இதனைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு மக்கள் பலத்துடன் செயலில் இறங்க வேண்டியவர்கள், "நித்திரை" கொள்வது ஏன்? தமது பதவிகளைத் தக்க வைப்பதற்கு எல்லா விவகாரங்களிலும் கோலம் போட்டுக் குளிர்காய முனையும் இவர்கள், மக்கள் சேவையின் அகரத்தைக் கூடப் பகுத்தறிய முடியாதவர்களா? அவர்களுக்கும் பதில் சொல்லும் காலம் ஒன்று, சந்தர்ப்பம் ஒருமுறையேனும் வந்து சேரும் என்பதனை அவர்கள் மறந்தால், நட்டம் அவர்களுக்கே!

# உள்ளூராட்சிச் சபைக் கூட்டங்களில் செய்தியாளர்களுக்கு அனுமதி இல்லை

## தகவல் அறியும் உரிமையை சபைகள் உறுதிப்படுத்தவேண்டும்

வடமராட்சி, ஒக். 2

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் உள்ளூராட்சிச் சபைகளின் கூட்டங்களில் கலந்து கொண்டு செய்திகள் சேகரிப்பதற்குப் பிரதேச செய்தியாளர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை.

யாழ்.மாநகர சபை தவிர்ந்த, யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய உள்ளூராட்சிச் சபைகளுக்கு தேர்தல் நடைபெற்று, புதிய தலைவர்கள், உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு முதலாவது மாதாந்தக் கூட்டங்களும் நடைபெற்று முடிந்துவிட்டன. சிலசபைகள் இரண்டாவது, மூன்றாவது கூட்டங்களையும் நடத்தி முடித்துவிட்டன.

உள்ளூராட்சி சபைகளான நகரசபைகள், பிரதேச சபைகளில் என்னென்ன நடக்கின்றன, அபிவிருத்தி கருதி சபைகள் எடுக்கும் தீர்மானம், உறுப்பினர்களின் வாதப்பிரதிவாதம், அவர்களின் செயற்பாடுகள், உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக நகர, பிரதேச வாசிகள் தகவல்களை அறிய வருகின்றார்கள். ஆனால் இவ்வாறான தகவல்கள் தமக்கு வாக்களித்த நகர, பிரதேச வாசிகளைச் சென்றடைய வேண்டும் என்பதில் இவற்றின் தலைவர்கள், உறுப்பினர்கள் எந்தவித அக்கறையோ, கரிசனையோ காட்டுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெறுமனே தீர்மானங்களை நிறைவேற்றி இவற்றை தாம் பத்திரிகைகளுக்கு அனுப்பி அவை பிரசுரமானால் போதும் என்ற சித்தாந்தத்துடன் சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை யாழ். மாநகர சபை, பருத்தித்துறை நகர சபை, வலி.தென்மேற்கு பிரதேச சபை ஆகிய மூன்று சபைகளும் சபைக் கூட்டங்களில் பத்திரிகையாளர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கின்றன. பருத்தித்துறை நகர சபை சபா மண்டபத்தில் போதிய வசதிகள் இல்லாத போதிலும் உங்களுக்கு வசதி போதுமா என சபைத்தலைவர் பத்திரிகையாளர்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்வார்.

யாழ்.மாநகரசபையின் தற்போதைய நிர்வாகம் பதவி ஏற்றபோது ஆரம்பத்தில் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை.

பின்னர் உறுப்பினர்களின் அழுத்தத்தால் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் போதிய வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றம் போல நகர, பிரதேச சபைகள் அந்தந்த மட்டங்களில் அதிகாரங்களைக் கொண்டுள்ளன. முன்னைய காலங்களில் நகர சபையை நாடாளுமன்றம் என்றும், இப்போதைய பிரதேச சபைகள் அப்போது கிராம சபைகளாக இருந்தபோது கிராமமாளு மன்றம் என்றும் அழைக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் நகர, பிரதேச சபைக் கூட்டங்களில் பிரதேச செய்தியாளர்கள் சுயாதீனமாகச் செய்திகளைச் சேகரிக்கச் சபைக் கூட்டங்களுக்கு அனுமதிக்க வேண்டும் என்ற தகவல். சுகந்திரம் தெரியாத நிலையில் யாழ்.மாவட்டத்தில் செயற்படும் உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் இருப்பது வேதனையளிக்கும் விடயம் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (த-236)

# ஊடகத்துறையின் வளர்ச்சிப் போக்கு அது சார்ந்தோரின் கைகளில் தங்கியுள்ளது

## கலைப்பீடாதிபதி ஞானகுமாரன் தெரிவிப்பு

வலி.வடக்கு, ஒக்.2

ஊடகத்துறையின் வளர்ச்சி அந்தத்துறை சார்ந்தவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

இவ்வாறு குறிப்பிட்டார் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ஞானகுமாரன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வள பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற புலனாய்வு அரசியல் சம்பந்தமான இருவார காலப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் ரி. தேவானந் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஊடகத்துறையின் வளர்ச்சி ஊடகத்துறை சார்ந்தவர்களின் கைகளில் தங்கியுள்ளது. நல்ல ஊடகவியலாளர்களை உருவாக்க சிறந்த விரிவுரையாளர்கள் காணப்பட வேண்டும்.

எமது பல்கலைக்கழகத்தில் ஊடகத் துறைக்கு நிரந்தர விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்படாமை கவலைக்குரிய விடயமாகும்.

ஒப்பந்த அடிப்படையில் விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்படுவதன் மூலம் அவர்கள் முழுமையான மனத் திருப்தியுடன் கடமையாற்றமுடியாத நிலை காணப்படுகிறது.

நிரந்தரமாக அவர்கள் நியமிக்கப்படும் போது அது சிறந்த பெறுபேறுகளைப் பெறவழி ஏற்படுத்தமுடியும் - என்றார். (த-86)

# வல்வெட்டித்துறை நகர சபையின் கூட்டத்தில் சிவாஜி, குலநாயகம்

## சுமூகமாக தீர்மானங்கள் எட்டப்பட்டன

வடமராட்சி, ஒக்.2

வல்வெட்டித்துறை நகரசபைக் கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது, ஆளும் கட்சியைச் சேர்ந்த அதிருப்திக் குழுவினரும் கலந்துகொண்டதுடன் கூட்டம் சுமுகமாக நடைபெற்றுத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இந்தச் சபையின் முதலாவது கூட்டம் கடந்த மாதம் சபைத் தலைவர் ந. ஆனந்தராஜ் தலைமையில் நடைபெற்றபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எம்.கே. சிவாஜிலிங்கம், எப்.எக்ஸ்.குலநாயகம் ஆகியோரைக் கொண்ட குழுவினர் உட்பூசலால் கலந்து கொள்ளவில்லை.

இரண்டாவது கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சபைத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் எம்.கே. சிவாஜிலிங்கம், எப்.எக்ஸ். குலநாயகம் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த அதிருப்தியாளர் குழுவினரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த இரு உறுப்பினர்களுமாக அனைவரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டம் மிகச் சுமூகமாக நடைபெற்றதையும், உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையாக முன்வைக்கப்பட்ட யோசனைகளையும், தீர்மானங்களையும் பரிசீலித்ததையும்ஒருசில நிமிடங்கள் கூட்டத்தை அவதானித்த போது காணக் கூடியதாக இருந்தது.

(த-236)

**கிறீன்பேள் இன்ஸ்ரிரியூட்**
பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான (மாலைநேர) சிறப்புப்பிரிவு புதன்கிழமை ஆரம்பம் 05.10.2011 (மாலை 5 மணி)

**A/L இரசாயனவியல்**
J.J கொலின்ஸ்
(மீட்டலுடன்-வினாவிடை)

# மரண அறிவித்தல்



## வீரகத்தி நாகமுத்து

(ஓய்வு பெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி நாகமுத்து 29.09.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் யாழினி (சமுர்த்தி உத்தியோகத்தர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), கமலினி (இத்தாலி), வாசுகி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயகாந்தன் (மக்கள் வங்கி, யாழ். பிராந்தியம்), இளங்கோவன் (இத்தாலி), உதயராஜ் (கிராம சேவை யாளர், வேலணை பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமனும் சாகித்தியா, சரணுஜா, இலக்கியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, சண்முகலிங்கம் மற்றும் அருளானந்தசிவம், காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும் குமரகுருபரன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சண்டிலிப்பாய் மத்தி,*
*சண்டிலிப்பாய்.*

தகவல்:
குடும்பத்தினர்.

# திருத்தப்படாத வீதியால் சிரமம்

யாழ்ப்பாணம், ஒக்.2

வலிகாமம் மேற்கு பிரதேசத்திற்குட்பட்ட வறுத்தோலை கிராம வீதி கடந்த 40 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுவதால் வீதியில் பயணிப்போர் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டது.

இறாத்தலடி சந்தியிலிருந்து வறுத்தோலை ஊடாக திருவடிநிலை கடற்கரைக்குச் சொல்லும் இரண்டு கிலோ மீற்றார் தூரம் வரையான வீதியே திருத்தப்படாமல் உள்ளது.

இந்தக் கடற்கரை பறாளாய் முருகன் ஆலயம், பிள்ளையார் ஆலயம் இறாத்தலடி ஐயனார் ஆலயம் ஆகியவற்றின் பெருந்திருவிழாக் காலத்தில் தீர்த்தக் கரையாகப் பயன்படுத்தப் பட்டு வருகிறது.

இவ் வீதியை புனரமைக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பலதடவை முறையிட்டும் கவனிக்கப்படாது உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

(ம-207)

# மரண அறிவித்தல்



## குமரையா இராஜலிங்கம் (சக்தி)

[ஓய்வுபெற்ற அரச ஊழியர்-கச்சேரி]

யாழ். சுண்டுக்குளி சந்தனமாதா கோயில் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமரையா இராஜலிங்கம் 29.09. 2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் 04.10.2011 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். என்பதை அறியத் தருகின்றோம்.

கச்சேரியடி,
சந்தனமாதா கோயில் வீதி,
சுண்டுக்குளி.

தகவல்:
குடும்பத்தினர்.

**திசைகாட்டி**
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்

- கல்விக்காக
- தொழில் வாய்ப்புக்காக
- நிரந்தர குடியமர்வுக்காக

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு பொருத்தமான
- சட்டத்தரணிகளால் வழங்கப்படும் இலவச சட்ட ஆலோசனைகள்.
- விசா தொடர்பான குறைந்த கட்டண ஆலோசனைகள்.
- ஆங்கிலக் கற்கைநெறிகள் இலங்கையிலேயே மிகக் குறைந்த கட்டணங்கள்.

வறிய மாணவர்களுக்கு இலவசம்

| | | |
|---|---|---|
| ✓ | Student Visa மூலம் வெளிநாடு செல்வதற்கான ஆங்கிலப்பாட நெறி | IELTS-10000 |
| ✓ | Student Visa மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கு மிகவும் இலகுவான பாடத்திட்டம் | B1-10000/- B2-10000/- |
| ✓ | Sponsor மூலம் U.K. செல்பவர்களுக்கான மிகவும் விளக்கமான பாடத்திட்டம் | A1-10000/- |
| ✓ | Spoken English அனைவருக்கும் உகந்தது | 2000/- |
| ✓ | Diploma in English | 5000/- |
| ✓ | Advanced Diploma in English | 10000/- |

எமது நிறுவனத்தால் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி,
(Expo முன்பாக) யாழ்ப்பாணம்
☎ 021 491 4527

**DANISH REFUGEE COUNCIL**

# Danish Refugee Council (DRC)

Rehabilitation and Capacity Building Program in Sri Lanka

## LOCAL OPEN TENDER

**Tender Ref. No.DRC /VA3593, VA3600/OLT/02/25092011**
**SUPPLY OF Hardware Items**
**Program: ECHO - European Commission of Humanitarian Aid**

The Danish Refugee Council - Head of Office Situated at No.77, 1st Floor, 1st Cross Street, Vavuniya, an International Non Governmental Organization operating in Sri Lanka since 1998, is calling for local open tender per lots for the supply of the following items:

Tenders must be submitted using the standard tender form included in the Tender Dossier. The format and instructions must be strictly observed.

| Lot | Item Description | Other Details | Unit | Quantity |
|---|---|---|---|---|
| 01 | GI Pipe, 1.25" dia., 2.0 mm thick | 18' length Good quality. | Bars | 1,530 |
| 02 | GI Pipe, 1" dia. 2.0 mm thick | 18' length Good quality. | Bars | 1,785 |
| 03 | GI Pipe, 0.75" dia. 1.8 mm thick | 18' length Good quality. | Bars | 2,652 |
| 04 | GI Pipe, 0.5" dia. 1.8 mm thick | 18' length Good quality. | Bars | 3,187.5 |
| 05 | 3" wire nails | Good quality | kg | 255 |
| 06 | 4" wire nails | Good quality | kg | 510 |
| 07 | Binding wire | 18 Gage | kg | 1,020 |
| 08 | Sollignam for timber members | Good Quality | liters | 1,020 |
| 09 | 4" Tower bolt with steel screws | Oxidized | Nos. | 3,060 |
| 10 | 6"x4" butt hinge for door with screws | Oxidized | Nos. | 1,530 |
| 11 | 4"x3" butt hinge with screws for windows | Oxidized | Nos. | 4,080 |
| 12 | Hasp & staples with screws. | 6" size | Nos. | 510 |
| 13 | Window Hooks (top & bottom for each sash) | 4" Brass Heavy Duty | Nos. | 4,080 |
| 14 | 6" door handle with screws. | Good quality | Nos. | 510 |
| 15 | Zn Al Corrugated roofing sheet - 10 ft length | 10' long, 32 gage | Nos. | 8,160 |
| 16 | Ridge Tiles | standard size | Nos. | 6,120 |
| 17 | Tarsheet for Ridge | Good quality-(Linear Feet) | l.ft | 7,140 |
| 18 | J- Hooks with diamond and rubber washers | For fixing roof sheets | Nos. | 25,500 |
| 19 | 1.5" Cap Nail | Good quality | kg | 127.5 |
| 20 | Cement (50kg Bags) with SLS107 | Ordinary Portland SLS107 | Bags | 2805 |

In order to participate in the tender, the companies/suppliers should be legally registered in Sri Lanka.

The Tender Dossier will be made available for collection from 03.10.2011 to 13.10.2011, Monday through Friday (both days inclusive) from 09 am to 04 pm at the **following DRC offices:**

**VAVUNIYA** : No.77, 1st Floor, 1st Cross Street,Vavuniya, Sri Lanka. Tel - 024 222 4442 Fax - 024 222 4009
**COLOMBO** : No.30/90, Malalasekara Mawatta,Colombo - 07. Tel - 011 436 2444 Fax - 011 420 9496
**TRINCOMALEE** : No.40, Sivan Street,Trincomalee. Tel - 026 2222336
**KILINOCHCHI** : AKR Farm,Karadipokku Junction, Uruthrapuram, Kilinochchi. Tel - 021 228 0006
**JAFFNA** : No. 456, Main Street, Chundukuli, Jaffna. Tel - 021 222 8496 Fax -021 222 7986

All offers must be clearly marked DRC /VA3593, VA3600/OLT/02/25092011 on the top left corner of the envelop. The deadline for submission of the bid is 14.10.2011, 02 pm Sri Lanka time and all bids must be sealed and delivered to the any of above DRC office. All late offers will be rejected and returned to the supplier unopened.

Any questions regarding the tender should be forwarded in writing to:
**E-mail:** tender2011@drc-lk.org or **Postal Address:** No.77, 1st Floor, 1st Cross Street, Vavuniya.

**Tender Opening Session**
**Date:** 17.10.2011 **Time:** 02 pm **Location:** Vavuniya DRC Office

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் Dr. (திருமதி) இலட்சுமி மகாலிங்கம்





பிறப்பு
28.12.1935

இறப்பு
12.10.2010

ஓராண்டு ஓடி விட்டது
எங்களை விட்டு நீங்கள் பிரிந்து.
சிரித்த முகம் மறக்கவில்லை
எங்கள் மனதில்.
தினமும் எம் கனவில் வந்து
எம்முடன் வாழ்கின்றீர்கள்.
உங்களை நாம் உயிர்
உள்ளவரை மறவோம்.

திதி: பஞ்சமி

40/2, கோயில் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

இரண்டு வருட முழு உத்தரவாதத்துடன் இந்தியன் நீர் மோட்டர்களை சிறந்த விலையிலும் கட்டடப்பொருள்கள் (சீற், சிமெந்து, கம்பி வகைகள்), பெயின்ற் வகைகள் (25% விலைக் கழிவு) மின்சாரப் பொருள்கள், நீர்க்குழாய்கள் போன்றவற்றை மலிவு விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.



**தக்ஷா ரேடிங்**

பருத்தித்துறை வீதி, கட்டைப்பிராய். TP: 021 223 0202

# குடாநாட்டில் சிறுவரை மையப்படுத்தி பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்

### சிறுவர் பாதுகாப்பு நிதிய இணைப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக.2

சிறுவர்களை மையப்படுத்திய பல அபிவிருத்தித் திட்டங்கள் யாழ்.மாவட்டத்தில் அமுல்படுத்தப்படவுள்ளதாகச் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பிராந்திய இணைப்பாளர் எஸ். சிவசங்கர் தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறுவர் அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எமது பகுதியில் சிறுவர்களுக்கான உரிமைகள், பாதுகாப்புக்கள், வாய்ப்புக்கள் எந்தளவுக்கு கிடைக்கின்றன என்பது கேள்விக்குரிய விடயமாகும். சிறுவர்களின் பிரச்சினைகள் பல இருக்கின்றன. அவற்றில் அரச சார்பற்ற நிறுவனங்கள் சில பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளன. அந்த வகையில் கணிசமான பங்களிப்பைச் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையமும் வழங்கி வருகின்றது.

சிறுவர் அபிவிருத்தித் திட்டங்கள் மேலும் பல அமுல்படுத்தப்படவுள்ளன. அவற்றுக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன-என்றார்.

இந்த நிகழ்வில் ஆரம்ப உரை நிகழ்த்தும் போது சிறுவர் அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தவை வருமாறு:

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு புலம்பெயர்ந்த உறவுகளின் உதவிகள் கிடைத்து வருகின்றன. அவர்களது உதவிகள் மூலம் எமது நிறுவனம் உதவித் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

பெற்றோரை இழந்த கல்வியைத் தொடரும் சிறுவர்களுக்கு உதவி வருகின்றோம். அடுத்த வருடம் மேலும் 50 சிறுவர்களுக்கு உதவவுள்ளோம். என்றார். (த-14)

## கைதடி நவீல்ட் ஆண்டு நிறைவு விழா

கைதடி,ஒக்.2

கைதடி நவீல்ட் செவிப்புல னற்றோர் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் தலைவர் வீமோகனதாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கனடாவில் வசிக்கும் திருமதி நடராஜா கதிர்மணி மேற்படி நிகழ்வுக்கு அன்பளிப்பு வழங்கியுள்ளார். (த)

மனமகிழ்வுடன்...



சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று சர்வதேச சிறுவர் தின நிகழ்வு இடம்பெற்றது. இதில் வடமராட்சி கிழக்கு சிறுவர் கழக சிறுவர்களின் கிராமிய நடனத்தின் ஒரு காட்சியையும், சிறுவர் தின நிகழ்வை தலைமை தாங்கி நெறிப்படுத்திய காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய மாணவி செல்வி சிந்துஷா பாலசிங்கத்தை சிறுவர் அபிவிருத்தி நிறுவனத்தின் உத்தியோகத்தர் செல்வி தயாணி மலர் மாலை அணிவித்துக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (த-14)

# கைத்தொலைபேசி ஒளியில் போட்டிகளின் பரிசளிப்பு

### மின்பிறப்பாக்கி இல்லாமையால் இந்த நிலை

வலி.வடக்கு, ஒக்.2

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டுத்துறை மின்பிறப்பாக்கி இல்லாமையால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் போட்டிகளின் பரிசளிப்பு வைபவங்கள் இரண்டு கைத்தொலைபேசி ஒளியில் இடம்பெற்றன.

பல்கலைக்கழக விளையாட்டுத் திணைக்களம் இந்த வாரத்தில் இரண்டு போட்டிகளை நடாத்தியது. இந்தப் போட்டிக்கான பரிசளிப்பு நடைபெறும் நேரத்தில் மின்வெட்டு இடம்பெற்றமையால் கையடக்கத் தொலைபேசிகளின் வெளிச்சத்தில் பரிசளிப்பு நிகழ்வை நடாத்தும் பரிதாப நிலைமை ஏற்பட்டாளர்களுக்கு வந்தது.

அண்மையில் இடம்பெற்ற பளு தூக்கும் போட்டி மற்றும் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஹொக்கிப்போட்டி ஆகியவற்றின் பரிசளிப்பு நிகழ்வுகள் கையடக்கத்தொலை பேசிகளின் வெளிச்சத்திலேயே நடைபெற்றன.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத் திணைக்களத்திடம் ஒரு சிறு மின்பிறப்பாக்கி கூட இல்லாமையால் போட்டிகளையோ பரிசளிப்பு வைபவங்களையோ இரவில்நடத்த முடியாதநிலை உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதற்கான தேவையை நன்குணர்ந்து இந்த வசதியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-86)

# பிள்ளைகளுக்குப் பாதுகாப்பான இடம் சிறுவர் இல்லம் அல்ல; குடும்பங்களே

### பெற்றோருக்கு சிறுவர் நன்னடத்தை அதிகாரி அறிவுரை

யாழ்ப்பாணம்,ஒக்.2

பிள்ளைகளின் பாதுகாப்புக்குப் பொருத்தமான சூழல் அவர்களது குடும்பத்திலேயே உள்ளது. எனவே உங்கள் பிள்ளைகளை உங்களுடனேயே வைத்திருங்கள். சிறுவர் இல்லங்களில் இணைத்து விடாதீர்கள்

இவ்வாறு பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்கினார் யாழ். மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் எஸ். சிவகரன்.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று சர்வதேச சிறுவர் தின நிகழ்வு இடம்பெற்றது.

வடமாகாண சிறுவர்களை பிரதிநிதித்துவப் படுத்தி இடம் பெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சிறுவர்களின் உரிமைகள், அவர்களது பாதுகாப்புத் தொடர்பாகப் பல்வேறு சட்டங்கள் இருந்தாலும் வீட்டுக்குள்ளேயே பல துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த விடயத்தில் பெற்றோர்கள் விழிப்பாக இருந்து அவற்றைத் தடுக்க வேண்டும். ஆசிரியர்களுக்கும் இந்த விடயத்தில் பொறுப்புள்ளது. பிள்ளைகளுக்கு உரிமை உள்ளதைப்போல் அவர்களுக்கு நன்நடத்தையுடன் செயற்படும் கடமையும் உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 33 சிறுவர் இல்லங்களில் சுமார் 2000 சிறுவர்கள் உள்ளனர். இவர்கள் சிறுவர் இல்லங்களில் வசிக்க வேண்டிய தேவை என்ன?.

சிறுவர் இல்லங்களிலிருந்து குடும்ப சூழலுக்குப் பிள்ளைகள் வரும்போது பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

எனவே பிள்ளைகளை உங்களுடனே வைத்திருக்கவேண்டும். பிள்ளைகளின் பாதுகாப்புக்குப் பொருத்தமான சூழல் குடும்பத்திலேயே உள்ளது - என்றார்.

இந்த நிகழ்வு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலய மாணவி தலைமையில் அவரது நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

இதில் வடமாகாணத்திலுள்ள சிறுவர் கழகங்களைச் சேர்ந்த சிறுவர்களின் கிராமிய கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (த-14)

# சுகாதாரமற்ற முறையில் கழிவு அகற்றல் பணிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.2

யாழ்.மாநகர சபையின் கழிவு அகற்றும் செயற்பாடுகள் சுகாதாரமற்ற முறையில் இடம்பெறுவதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

யாழ்.மாநகர சபையின் கழிவு அகற்றும் பிரிவினரால் மாநகர சபை எல்லைக்குள் அகற்றப்படும் கழிவுப் பொருள்கள் திறந்த வாகனங்களில் எடுத்துச் செல்லப்படுகின்றன.இதன்போது இந்தக் கழிவுகள் சிந்தப்படுவதால் வீதிகளில் பயணிப்பவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மூடப்படாத உழவு இயந்திரங்களில் ஏற்றிச்செல்லப்படும் இந்தக் கழிவுப் பொருள்கள் வாகனங்கள் வேகமாகச் செலுத்தப்படுவதால் காற்றில் பறந்து வீதிகளில் விழுகின்றன.

அத்துடன் கழிவுப் பொருள்களைக் கொண்டுசெல்லும் வாகனங்களிலிருந்து பெரும் துர்நாற்றமும் வீசுகின்றது. இதனால் வீதியால் பயணிப்பவர்கள் மூக்கைப்பிடித்தபடியபணம்செய்வதையும் அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான நடவடிக்கைகளால் நோய்த் தொற்றும் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளமையால் சம்பந்தப்பட்டவர்கள் இதில் உடனடியாகக் கவனம் செலுத்தி இதனைத் தடுத்து நிறுத்திப் பாதுகாப்பான முறையில் கழிவுகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-26)

# கரையோரப் பகுதிகளில் தொடர்ந்தும் குடி தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.2

யாழ்.மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட கரையோரப் பகுதிகளில் தொடர்ந்தும் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு நீண்டதூரம் அலைய வேண்டிய நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குருநகர், பாசையூர், கொழும்புத்துறை, நாவாந்துறை ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் குடி தண்ணீரைப் பெறமுடியாமல் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். தமது தேவைக்கான குடிதண்ணீர் இல்லாமல் இவர்கள் நீண்ட தூரத்துக்குச் சென்று அதனைப் பெறுகின்றனர்.

இந்தப் பகுதியில் உள்ள நிலத்தடிக் குழாய் மூலம் குறிப்பிட்ட நேரத்துக்கே யாழ்.மாநகர சபை குடிதண்ணீர் விநியோகித்து வருகின்றது. சில வேளைகளில் அதுவும் தடைப்படுகின்றது.

இந்தக் குடிதண்ணீரைப் பெறுவதற்காக மக்கள் அதிகாலையிலேயே முண்டியடித்துக் குழாய்களுக்கு முன்னால் வரிசையில் நின்று குடிதண்ணீரைப் பெற்று வருகின்றனர். அத்துடன் நன்னீர் கிணறுகளில் குடிதண்ணீரைப் பெற்று வருகின்றனர். (த-26)

## திடீர் மரணவிசாரணை அதிகாரி நியமனம்

சாவகச்சேரி நீதி நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிக்கு மேலும் ஒரு திடீர் மரண விசாரணை அதிகாரி நீதி அமைச்சின் செயலாளினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தாவளை - இயற்றாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி ஸ்ரீ இளங்கீரன் என்பவர் கடந்த 30 ஆம் திகதி சாவகச்சேரி நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் திடீர் மரண விசாரணை அதிகாரியாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இந்தப் பகுதியில் ஏற்கனவே கொடிகாமத்தைச் சேர்ந்த செல்வி இ.தவமலர், கைதடியைச் சேர்ந்த செல்வி நா.சசிகலா ஆகியோர் திடீர் மரண விசாரணை அதிகாரிகளாகப் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (த-207)

## இலக்குக்கான வேலை வாய்ப்பு

தன்னம்பிக்கையுடன் குறுகிய கால இலவசப் பயிற்சி நெறியினால் அடையாளப்படுத்தி வெற்றியடையச் செய்த GDM Management பயிற்சி நிறுவனம் இப் போது உங்களுக்கும் அந்த வாய்ப்பை வெற்றிகரமாக யாழ். நகரில் வழங்கி வருகின்றது.

* நீங்களும் உங்கள் இலக்குகளை அடைய விரும்புகிறீர்களா?
* பூரணமான மனிதனாக ஆசைப்படுகிறீர்களா?
* நீங்களும் அதிகமாக பணம் சம்பாதிக்க விரும்புகிறீர்களா?

அடிப்படைத் தகைமை: O/L, A/L. சித்தி
வயதெல்லை 18-30.

சுயவிவரக் கோவையுடன் நேர்முகப் பரீட்சைக்கு நாளை (2011.10.03)ஆம் திகதியும் நாளை மறுதினம் (2011.10.04)ஆம் திகதியும் சமுகமளிக்கவும்.

தொடர்புகளுக்கு: 0777968485 (8811)
86/2, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (ஆரியகுளம் சந்திக்கு அருகில்).

## விற்பனைக்கு

LH -xxxx இலக்கமுடைய புதிய ரக டாட்டா கன்ரர் 1109 உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0775044115

## தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள கொம்பியூட்டர் ரைப்பிங் / பிறின்ரிங் நிலையத்துக்கு தமிழ் / ஆங்கிலம் ரைப்பிங் தெரிந்தவர்கள்தேவை. (ஆண் / பெண்) முன் அனுபவம், ஆங்கில அறிவு விரும்பத்தக்கது. தொடர்பு: 0775935294

## கார் விற்பனைக்கு

TOYOTA HSXXXX (FULL OPTION)
கார் விற்பனைக்குண்டு.
(சி/4480) T.P:0777759205

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு மிக அண்மையில் 2¼ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 321 8777

## சர்வதேச திருமண சேவை

மகா நவராத்திரி பூசையையொட்டி பதிவுக் கட்டணம் இலவசம், பழைய பதிவுகளைப் புதுப்பிக்கவும் இந்து, கிறிஸ்தவர், அனைத்து இனத்தவர்களிலும் உள்நாடு, வெளிநாடு, பட்டதாரிகள், அரச, தனியார், சைவ போசனம், மணமக்களின் விவரங்களுக்கு அணுகவும்.

S.K. சிவாகரன் (அமைப்பாளர்)
சிவாலயா சர்வதேச திருமண நிலையம்
கெனடி லேன், இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 0750741451, 0750741452, 0215681126 (8842)

# Wanted-Part time Teachers

**St.John's College and Chundikuli Girls' College of Jaffna are seeking Part time Teachers who are passionate about working with orphan and needy children. The applicant will be a hardworking and enthusiastic teaching professional with excellent subject knowledge, and a keen interest in encouraging and inspiring students to love learning and excel in the subject area.**

**Subjects: Mathematics, Science and Sinhala**
**Working time: After school and week-ends**

**If you think you can make a profound difference in the lives of the Internally Displaced Children then, please send your application to St.John's College by post or email on or before 8th October, 2011.**

The Principal,
St.John's College,
Main Street,
Jaffna.

Tel /Fax No.0212222432
Email:stjohns@sltnet.lk

(சி/4801)

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

**PARA MEDICAL DEGREE PROGRAMME**

University of Jaffna will entertain applications from qualified persons for the Post of **Demonstrator (on contract) in Pharmacy upto 21.10.2011.**

**Salary Scale**

Demonstrator (on contract) Rs.20,755/-(fixed) p.m

Note: Candidates who are awaiting for the results of the final degree examination may also apply for the above post.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
30.09.2011

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் இலட்சுமிகாந்தன்

முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் கருவேலன் கண்டலை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வன் இலட்சுமி காந்தன் 29.09.2011 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் சந்திரரூபன், சந்திரமாலா, சாந்தரூபி, சாந்தி, தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைச்செல்வன், ஜெயச்செல்வன், றெஜி, இதயகோபன் ஆகியோரின் அன்பு மாமனும் ஐதுஷிகா, கோபிகா, சுபா, சற்குரு, தர்மிதா, பபிதன், எழில்மதி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 30.09.2011 பிற்பகல் 3 மணிக்கு கருவேலன்கண்டல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருவேலன் கண்டல்,
ஒட்டுசுட்டான்.

(சி/4606)

தகவல்:
குடும்பத்தினர்.

# நினைத்ததை நடத்தி முடிப்பவன் நான்...!

**கோத்தபாயவின் சிறப்புச் செவ்வி**

**சர்வதேசத்தின் அழுத்தங்கள், கொழும்பில் தேர்தல் நெருக்கடி போன்ற பரபரப்பான சூழ்நிலையிலும் மற்றும் அவசரமான அலுவல்களுக்கு மத்தியிலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ எமது சகோதர பத்திரிகையான 'சுடர் ஒளி'க்கு வழங்கிய செவ்வி இது.**



**'கொரியா' என்று நாம் சேரிப்புறங்களைக் கூறுகிறோம். ஆனால் இன்று கொரியா எப்படி முன்னேறி இருக்கிறது என்று பாருங்களேன்...!**

கே- கொழும்பு மாநகரசபைத் தேர்தல் குறித்து உங்களின் கருத்து என்ன? யார் இந்தப் பந்தயத்தில் வெற்றி பெறுவார்கள் என நினைக்கிறீர்கள்?

பதில்:- முதலில் நான் ஒன்றைக் கூறிக் கொள்ளவிரும்பு கிறேன். நான் ஓர் அரசியல்வாதி அல்ல. நான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர். அரசியல் பற்றிய கேள்விகளைத் தவிர வேறு கேள்விகளைக் கேட்டால் பொருத்தமாக இருக்குமென கருதுகிறேன். அப்படிச் செய்வோமா?

கே- சரி செயலாளர் அவர்களே! கொழும்பிலிருந்து புடைவை மற்றும் நகை வர்த்தக தொகுதிகள், உணவு மொத்த விற்பனை நிலையங்கள் இருக்கும் பகுதிகளை வெளிநகருக்கு கொண்டுசெல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறிகிறோம். இதனால் சிறுபான்மை வர்த்தகர்கள் மிகுந்த அச்சம் கொண்டுள்ளனர். இதன் உண்மை நிலையைச் சற்று சொல்லுங்கள்?

ப:- முதலில் நகைக்கடைகளை எடுத்துக்கொள்வோம். அந்தத் தரப்பினருடன் நாம் பேச்சு நடத்தியுள்ளோம். அவர்களை கொழும்புக்கு வெளியில் கொண்டுசெல்லாமல் அவர்களுக்கு சிறந்த வர்த்தக நிலையத் தொகுதிகளை இங்கேயே ஏற்படுத்தி கொடுப்பதற்காக அவர்களுடனேயே பேசியுள்ளோம். முழு செட்டியார் தெருவையும் மாற்றி வடிவான ஒரு வர்த்தக அங்காடியை அங்கே அதே இடத்தில் உருவாக்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் முன்பு மீன் விற்பனை செய்யப்பட்ட மீன் கடை எனப்படும் சென். ஜோன்ஸ் மீன் விற்பனைக் கட்டடத்தின் கீழ்த்தளத்தை நகை வியாபாரிகளுக்கு வழங்குவது குறித்து நாம் பேசியிருக்கிறோம். செட்டியார் தெருவிலும் பழைய மீன் சந்தையின் கீழ் தளத்திலும் நகை வியாபாரிகளுக்கு போதியளவு இடவசதிகளை செய்துகொடுப்பதற்கு இப்போது பேச்சு நடத்தப்பட்டு வருகிறது. அதை நாம் அவர்களுடன் பேசித்தான் செய்வோம். அது அவர்களுக்குத் தெரியும். நூற்றுக்கு நூறு வீதத்தில் இதனை, இந்தத் திட்டத்தை அவர்கள் விரும்புகிறார்கள்.

அடுத்ததாக மீன் சந்தையை நாங்கள் கொழும்புக்கு வெளியே எடுத்துச் சென்றோம். அது வெற்றிகரமான ஒன்றாகியது. இன்று மீன் சந்தைக்கு செல்பவர்கள் சந்தோசமாக உள்ளனர். அன்றுபோல் கப்பம் எடுப்பவர்கள் இல்லை. சுத்தமாகவும், வசதியாகவும் இருக்கிறது மீன்சந்தை. இப்போது மரக்கறி சந்தையை அப்படி கொண்டுசெல்ல முடியுமா என்பது பற்றித்தான் நாம் சிந்தித்துக்கொண்டு வருகிறோம். மீன்சந்தைக்கு அருகில் மரக்கறிச் சந்தையும் இருந்தால் மிகவும் இலகு என்று பலர் கருதுகின்றனர். எனவே மீன்சந்தைக்கு அருகில் மரக்கறிச் சந்தையை கொண்டுசெல்வது குறித்து சிந்தித்துக்கொண்டிருக்கிறோம். சரியான, நவீன வசதிகளையுடைய மரக்கறிச் சந்தையை அமைப்பது குறித்து ஆராயப்பட்டு வருகிறது. இவை இரண்டும்தான் இப்போதைய பொதுத் திட்டங்கள். மரக்கறிச் சந்தையைத்தான் பேலியகொடைக்கு அருகில் கொண்டுசெல்லப் பார்க்கின்றேன். செட்டியார் தெருவை பொறுத்தவரை அந்தத் தெருவை சர்வதேச நாடுகளின் நகைக்கடைகள், அங்காடிகளின் தரத்திற்குக் கொண்டு செல்வதுதான் எமது திட்டம்.

கே- குப்பைகளை அகற்றுவதில் காலாகாலமாக பிரச்சினை இருப்பது ஏன்?

பதில்- அது உண்மைதான்.அப்படியொரு நிலைமை இருந்ததுதான்.செல்லும் இடமெல்லாம் துர்நாற்றம் வீசிய நிலைமை இருந்ததுதான். ஆனால் இந்த இரண்டு வருடங்களில் நாம் பிரச்சினைகளைத் தீர்த்தோம்.மாநகர சபையின் கீழிருந்த இந்த செயற்பாட்டை நாம் சீர்செய்தோம். இதற்காக நாம் விசேடமாக செலவு எதனையும் செய்யவில்லை. அதே நிதி, அதே ஒப்பந்தக்காரர்கள் தான் இதிலும். இதற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. சில இடங்களில் அதிகாலை 5 மணிக்கு பொலிஸார் செல்கின்றனர். அங்கு குப்பைகளை அகற்ற எவரும் இல்லாத பட்சத்தில் உடனடியாக குப்பைகளை அகற்றும் நிறுவனங்களுக்கு பொலிஸார் அறிவிக்கின்றனர். இது நாள்தோறும் நடக்கின்றது. இப்படி நேரடியாக தினந்தோறும் நடப்பதால்தான் குப்பைகளை அகற்றும் பணி சீராக நடக்கிறது. இப்போது முக்கியமான விடயம் என்னவெனில் எங்களுடன் ஒத்துழைத்து செயற்பட முடியாத ஒருவர் மேயராக வந்தால் அவர் எப்படி குப்பைகளை அகற்றுவார்? குப்பைகளை அகற்றும் நிறுவனங்களின் ஊழியர்கள் நேரத்திற்குச்சென்று குப்பைகளை அகற்றுவார்களென்ற உத்தரவாதத்தை இவர்களால் மக்களுக்கு வழங்க முடியுமா? இதுவரை இருந்த ஆணையாளர்கள் அல்லது அதிகாரிகளால் இதனைச் செய்ய முடியாமற்போனது தான் உண்மை.பொலிஸார் நேரடியாகத் தலையிட்டுச் செய்வதால்தான் இவை ஒழுங்காக இடம்பெறுகின்றன. இதனை மக்கள் நன்கு புரிந்து கொள்ளவேண்டும். இந்தப் பிரச்சினைகளை மக்கள் எதிர்காலத்தில் சிந்திக்கவேண்டும்.இது எல்லோராலும் உணரப்படும் பிரச்சினை. இனிவரும் மேயர் இதனை எப்படி செய்யப்போகின்றார் என்பதற்கு உத்தரவாதம் இருக்கவேண்டும்.

கே- மத்திய அரசுடன் இணைந்து பணியாற்றக் கூடிய ஒரு மாநகர நிர்வாகத்தைத் தான் நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள். அப்படித்தானே?

பதில்: நிச்சயமாக. இதுவரைகாலம் இருந்த மாநகர நிர்வாகங்களின் செயற்பாடுகளை பாருங்கள் பிரயோக ரீதியில் அவர்களுக்குச் செய்ய முடியாத சிலவேலைகள் உள்ளன. அது எங்களுக்குத் தெரியும். அதனால் தான் வேலைகளும் கிரமமாக நடைபெறவில்லை. கடந்த இரண்டரை வருடங்களில் நாம் பலவேலைகளைச் செய்து காட்டியிருக்கிறோம்.

கேள்வி:- வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு காணிகளைக் கொடுப்பதற்காகத்தான் கொழும்பில் மக்களின் வாழ்விடங்கள் பறிக்கப்படுவதாக எதிர்க் கட்சி குற்றஞ்சாட்டுகிறதே!

பதில்:- இப்போதைக்கு நாம் என்னென்ன இடங்களைக் கொடுத்திருக்கிறோம் என்று பாருங்கள். ஹோட்டல் ஒன்றை அமைக்க விரும்பும் முதலீட்டாளர்கள் இதோ இந்த இராணுவத் தலைமையகம் இருக்கும் இடத்தைப் போன்ற இடங்களைத்தான் விரும்புகின்றனர். கொமர்ஷல் கம்பனி இடம் போன்றவற்றையே அவர்கள் விரும்புகின்றனர். மக்கள் வாழும் பிரதேசங்களை அல்ல முதலீட்டாளர்கள் விரும்புவது. அரசாங்கமானது இந்த முக்கியமான காணிகளை முதலீட்டுக்கு வழங்கி அந்த வருவாயை வேறு எதற்காவது பயன்படுத்தலாமல்லவா? ஏன் மக்களுக்கு வீடுகளை கட்டிக்கொடுக்க வேண்டுமென அரசு நினைக்கிறது. சேரிப்புறங்களில் வீடுகள் உள்ள பகுதிகளில் முதலீடு செய்ய எந்த முதலீட்டாளர்கள் விரும்புகின்றனர்? ஆனாலும் சேரிகளை அகற்றினாலே ஒரு காலத்தில் கொழும்பு மாறலாம். முன்னர் கொழும்பில் சேரிப்புறங்களை கொரியா என்று கூறினோம். இன்று கொரியா நாடு எப்படி இருக் கிறது. கொரியா மாறிவிட்டது. நாம் கொரியாவை சோமாலியாவாக மாற்றிவிட்டோம் (சிரிக்கிறார்). இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். நாம் சோமாலியாவை இப்போது கொரியா நாடு போல் மாற்றவேண்டும். இதுதான் உண்மை நிலைமை. நாம் எம்மால் முடிந்ததை இதுவரை செய்து காட்டியிருக்கிறோம். செய்துகொண்டிருக்கிறோம். ஒவ்வொரு நபர்கள் கூறும் கதைகளை மக்கள் நம்பக் கூடாது. யார் என்ன செய்தார்கள் என்று மக்கள் எண்ண வேண்டும். கொழும்பில் மாற்றம் இல்லை என்று இப்போது யாரால் சொல்ல முடியும். இதுவரை செய்யாத மாற்றங்களை இனியும் முன்னெடுக்க வேண்டும். போதை வஸ்து, பாதாள உலகம், குற்றச்செயல்களை இதனூடாக நாம் கட்டுப்படுத்த முடியும். நோய்களைக் கட்டுப்படுத்த முடியும். பாருங்கள் குப்பைகள், வாவிகளை சுத்தப்படுத்துவதற்காக நாம் கடற்படையினரை ஈடுபடுத்தும் போது அவர்களை நாம் மணிக்கு ஒரு தடவை சேவையிலிருந்து மாற்றிக்கொண்டிருக்க வேண்டியுள்ளது. இதிலிருந்து வரும் மீத்தேன் வாயுவால் அவர்கள் பாதிக்கப்படும் நிலை உள்ளது. எமது திட்டங்கள் வருமானால் இப்படியான நிலைமை ஏற்படாது.

பேரை வாவிக்கருகில் உள்ளவர்களை அகற்றுகிறோம் என்றால் அந்த இடங்களையா முதலீட்டாளர்களுக்கு வழங்கப் போகிறோம்? சரி ரயில் பாதையின் இரு மருங்கிலும் இருக்கும் மக்களுக்கு வீடு ஒன்றை வழங்கிவிட்டு அந்த இடத்தை எந்த முதலீட்டாளர்களுக்கு நான் வழங்க முடியும்? பேரை வாவிக்கருகில் உள்ளவர்களை அகற்றிவிட்டு அந்த இடத்தை முதலீட்டாளர்களுக்கு வழங்க முடியுமா? இல்லை. அப்படியான இடங்களில் மலர்பூங்காக்களைத் தான் அமைக்க முடியும். மக்களுக்கு தான் நாம் தரும் பலன்கள் செல்கின்றன. முதலீட்டாளர்களுக்கு கொமர்ஷல் கம்பனி இடமும், இராணுவ தலைமையக இடமும், சாமர்ஸ் இடமும் தான் தேவை. மாடி வீடுகளை நாம் அமைக்கும் போது உள்ளூர் வர்த்தகர்கள் அந்த இடங்களில் வியாபாரம் செய்யத் தேவைய்ான வசதிகளையும் நாம் செய்வோம். யாரும் ஏமாற்றுவதற்காக எதையும் சொல்வார்கள். மக்கள் நன்கு சிந்திக்கவேண்டும்.

கேள்வி:- கொழும்பு பல்லினங்கள் வாழும் ஒரு நகரம். இந்த தேர்தலில் வாக்குகள் இன அடிப்படையில் பார்க்கப்படுவதை நீங்கள் என்ன கண்ணோட்டத்தில் நோக்குகிறீர்கள்?

பதில்:- நாம் அனைவரும் இலங்கையர் என்ற ரீதியில் சிந்திக்கவேண்டும். இலங்கையராக வாழ்வதே எமது நோக்கமும் கூட. கொழும்பில் வாழும் மக்கள் தங்களுக்குச் சேவையாற்றக்கூடிய, தகுதியுள்ள ஒரு குழுவினரைத்தான் தெரிவு செய்யவேண்டும். கொழும்பு மாநகர சபையின் ஊழல், மோசடியற்ற ஒரு நிறுவனமாக கையாளக்கூடிய ஒரு குழுவினருக்கு ஒப்படைப்பது மக்கள் முன் உள்ள முக்கிய பொறுப்பு.

கேள்வி :- கொழும்பு மாநகர சபையின் மிகப் பெரிய குறைபாடு என்று நீங்கள் கருதும் விடயம் என்ன?

பதில்:- செயலற்ற தன்மை, மாநகர சபையினால் செய்யப்படவேண்டிய வேலைகள் செய்யப்படாமை தான் பெரிய குறைபாடு. கடந்த ஒருவருட காலத்திற்கும் மேல் நாம் எம்மால் முடிந்தவற்றைச் செய்கின்றோம். இன்னும் பல வேலைகளை செய்யவேண்டியுள்ளது. புதிதாக நியமனமாகும் மேயர், உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து வேலைகளை செய்ய வேண்டிய நிலை இருப்பதை நான் சுட்டிக்காட்டினேன். எனவே தமக்கு இருக்கும் பொறுப்புக்களை இவர்கள் முதலில் இனங்காண வேண்டும். பொதுச் சுகாதாரம் இங்கு முக்கியவிடயம். நான் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களை அனுப்பி சில உணவகங்களை சோதித்தேன். மிருகங்கள் கூட சாப்பிட முடியாத அளவில் மோசமான நிலையில் உணவுகள் இருப்பதை கண்டுபிடித்தேன். இந்த நிலைமை மாற வேண்டும்.

பாதுகாப்பு செயலர் பதவியில் இருந்துகொண்டு நான் கடந்த இரண்டரை ஆண்டுகளுக்குள் கொழும்பு நகர மேம்பாட்டுக்கு எவ்வளவோ வேலைகளைச் செய்துள்ளேன். பதவிக்கு வரும் மேயர் தலைமையிலான குழாம் எம்முடன் இந்த பணியைத் தொடரக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். கட்சி பேதம் இங்கு பார்க்கக்கூடாது. நபர்கள் குறித்து பார்க்கக்கூடாது. இவ்வளவு காலம் யார் அதிகாரத்தில் இருந்தார்கள் என்று பார்க்கக்கூடாது. சீரழிந்திருந்த நிர்வாகத்தை சீர்செய்த ஒரு தரப்புடன் இணைந்து செல்லக் கூடிய ஒரு குழுவினரைத் தேர்ந்தெடுக்க வேண்டியது புத்திசாலித்தனமாகச் சிந்திக்கும் மக்களின் பொறுப்பாகும்.

**பாதுகாப்புச் செயலாளரின் செவ்வி**
**நாளையும் வரும்.**
**சூடான கேள்விகளுக்கு**
**சூடாகவே பதில்கள்.... நாளை...!**

# ஒரு லட்சமாவது மிதிவெடியை மீட்ட பெருமையுடன் ஹலோரஸ்ட்

■ சோபனா

போர்க் காலச் சூழலின் போது பொது மக்களின் வாழ்விடங்களையும், உயிர்களையும் தின்று ஏப்பம் விட்ட குண்டுகள், எறிகணைகள், மிதிவெடிகள் யாவும் தற்போதும் உயர்பாதுகாப்பு வலயங்களில் முற்றுகை போட்டுக் கொண்டே இருக்கின்றன.

இதனை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபடும் ஹலோரஸ்ட் நிறுவனம் தற்போது நாகர் கோயில் பிரதேசத்தில் பரவலாக மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றது.

வெளி நாடுகளின் நிதியுதவியுடன் செயற்படும் இந்த நிறுவனத்தில் 300 இற்கும் மேற்பட்டவர்கள் நாகர் கோயில் பிரதேசத்தில் குழுக்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

1010 இற்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் இணைந்து மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் பெருமையை இந்த நிறுவனமே பெற்றுக் கொள்கிறது.

கடந்த இரு மாதங்களுக்கு முன்பாக ஒரு லட்சமாவது மிதிவெடிகளை அகற்றிச் சாதனை படைத்துள்ளது.

நாகர் கோயில் பிரதேசத்தில் மிதிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடும் ஹலோரஸ்ட் நிறுவனத்தின் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் சிலரை சந்தித்த போது அவர்கள் கூறிய கருத்துக்கள்

**முரளிதரன் மேகலதா**
**அரியாலை**



பெண்களின் சுய முன்னேற்றம் யாழ். மாவட்டத்தில் இன்று வளர்சியடைந்து சென்றாலும் கணவனை இழந்தோ அல்லது பிரிந்தோ வாழும் பெண்களின் குடும்பச் சுமையைப் போக்குவதற்கு உறவினர்களாக இருந்தாலும் யாருமே முன்வரமாட்டார்கள்.

''தன் கையே தனக்குதவி'' என்பது போல் எனது குடும்பத்தைக் கொண்டு நடத்த வேண்டிய பெறுப்பு என்னிடம் உள்ளது. ஏனெனில் எனது கணவர் காணாமல் போய்விட்டார். இதனால் எனது பிள்ளைகளையும் அம்மாவையும் கவனிக்க வேண்டிய பெறுப்பு என்னிடம் இருந்தது.

அதனால் நான் செய்யும் வேலை கஷ்ரமானதாக இருந்தாலும் அதனை மிகவும் விருப்புடன் செய்து வருகிறேன்.

என்னுடைய இந்தப் பணியால் எனது குடும்பம் மட்டுமல்லாது கிராமத்தைச் சேர்ந்த மக்களும் இதன் மூலம் பயன் பெறுகிறார்கள்.

முன்பெல்லாம் மிதிவெடி என்றாலே மிகவும் பயமாக இருக்கும். ஆனால் ஹலோரஸ்ட் நிறுவனத்தால் தகுந்த பயிற்சிகள் வழங்கப்பட்டுப் களப் பணிக்கு அமர்த்தினார்கள்.

களப் பணியின் போது ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் ஒன்றிணைந்து செய்யும் கடமையில் கண்ணும் கருத்துமாக உள்ளோம். சம்பளத்தில் வேறுபாடும் கிடையாது. இது ஓர் உயிர் ஆபத்தான தொழில் என்றாலும் மனதுக்குத் திருப்தியாக உள்ளது.

போரின் விளைவாகப் பலர் தமது சொந்த இடங்களில் மிதிவெடி பயத்தால் மீளக்குடியமராமல் உள்ளனர்.

ஹலோரஸ்ட் நிறுவனப் பணியாளர்கள் மிகவும் துடிதுடிப்புடன் செயற்படுவதால் அதிகமான இடங்களில் மீள்குடியமர்வு அகற்றும் பணியில் ஈடுபடுகின்ற பெருமையைக் ஹலோரஸ்ட் நிறுவனம் தான் பெற்றுக் கொள்கிறது.

பொதுவாகவே பெண்கள் பயந்த சுபாவம் கொண்டவர்கள் என்பார்கள். ஆனால் அந்த நிலை தற்போது மாறி விட்டது.

**எஸ்.அனுஷாந்தன்**
**குருநகர்**



படித்தவர்கள் எல்லாம் வேலை பெறுதில்லை என்று பொதுவாகக் கூறுவது உண்டு. ஒருவரின் திறமைக்கு மட்டுமே முன்னுரிமை கொடுத்து ஹலோ ரஸ்ட் நிறுவனம் வேலை வாய்ப்பை வழங்கி வருகின்றது.

இந்த நிறுவனத்தில் அதிகமானவர்கள் படித்த இளைஞர்கள். வேலையில்லாப் பிரச்சினையில் கிடைத்த வேலையைச் செய்வோம் என்று வந்தவர்கள். அதில் நானும் ஒருத்தன். குருநகரில் இருந்து வேலைக்கு வாறன். கடந்த 5 வருடமாக வேலை செய்கிறேன்.

அதிகூடிய மிதிவெடிகள் உள்ள பிரதேசங்களிலும் கடமையாற்றியுள்ளேன். இதுவரை காலமும் கடவுள் துணையுடன் எனக்கு எந்தவித பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

மிதிவெடிகள் அகற்றும் பணியில் ஈடுபடும் போது மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். எமது மனம் சற்றுத் தடுமாறினாலும் ஒரு செக்கனுக்குள் எதுவானாலும் நடக்கலாம்.

நான் 5 வருடமாகக் கடமையாற்றுவதால் மிகவும் அனுபவம் கொண்டவனாக உள்ளேன்.

குறித்த நேரத்துக்குள் மிகவும் விரைவாக எனக்குத் தரப்பட்ட கடமைகளை முடித்து விடுவேன்.

அத்துடன் குழுவாகச் செயற்படுவதால் இந்தப் பணியைச் செய்ய மிகவும் உற்சாகமாகவுள்ளது. ஒரு பிரதேசத்தில் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் முடிவடைந்தவுடன் அந்தப் பிரதேசத்தில் மக்கள் மீள்குடியமர வரும் போது அவர்களின் முகங்களில் காணும் சந் தோசம் மேலும் எம்மை உற்சாகப்ப டுத்துவதாக உள்ளது.

இன்னுமொரு கவலையான விடயம் அதிகமான மக்களுக்கு எமது சேவையின் தார்ப்பரியம் தெரியாது.

அவர்களது கிராமத்தை எதிர்கொள்ளக் கூடிய அழிவுகளில் இருந்து மீட்டுக் கொடுத்த பெருமையையும் நாமே அடைகிறோம்.

**வி.சுயன்,** குருநகர்



தமிழ் மக்களின் வாழிடங்களை மிதிவெடி அபாயத்தில் இருந்து மீட்டுக் கொடுக்கும் பெருமையை ஹலோரஸ்ட் நிறுவனம் செய்து வருகின்றது.

அந்த நிறுவனத்துடன் நானும் இணைந்து பணி யாற்றுவதில் பெருமையடைகிறேன்.

முதன் முதலாக மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபட்ட போது மிகவும் பயந்த உணர்வு இருந் தது. கை கால்கள் மிகவும் படபடப்பாக இருக்கும்.

ஆனால் தற்போது அது பழகி விட்டது. விளையாட்டு உபகரணங் களைப் பார்ப்பது போல் உள்ளது.

மிதிவெடியகற்றும் போது அதிகமான மிதிவெடிகளை அகற்றவேண்டும் போல் இருக்கும். இளைஞர்கள் அதிகமானோர் வேலை செய்வதால் சோம்பல் இருக்காது. அத்துடன் வேலை நாள்கள் மிகவும் சந்தோசமாக இந்த வேலையைச் செய்கின்றேன்.

தற்போது பல இடங்களில் வேலைக்கு ஏற்ற ஊதியம் கிடைப்பது கிடையாது. ஆனால் இங்கு குறைந்த வேலை நேரத்தில் அதற்கேற்ற ஊதியத்தையும் வழங்குகின்றார்கள்.

தற்போது நாகர் கோயில் பிரதேசத்தில் மிதிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ளோம். அதிகளவான மிதிவெடிகள் இந்தப் பிரதேசத்தில் உள்ளதால் குழுவாக இணைந்து இங்கு பணியாற்றுகின்றோம். வெயில், மழையாக இருந்தாலும் எமக்கு கொடுக்கப்பட்ட கடமைகளை முடித்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு உள்ளது.

பொது மக்கள் பலர் எம்முடன் ஒத்துழைத்து எமக்குச் சில உதவிகள் செய்வார்கள். இது ஒரு பொதுச் சேவை என்பதால் எமது நலன்களை கருத்தில் எடுப்பது கிடையாது.

**எ.வினோதன்,** குருநகர்



குருநகர் பிரதேசத்தில் அதிகமானோர் கடற்றொழில் செய்வ தால் இளைஞர்கள் தமது பரம்பரைத் தொழிலையே மேற்கொள்கிறார்கள்.

எனினும் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட வேண்டும் எனும் ஆர்வம் எனக்கு இருந்தது. எனது நண்பர் ஒருவரின் துணையுடன் நானும் இந்த சேவையில் இணைந்து கொண்டேன். கடந்த 5 வருடங்களாக மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

இதனை நான் ஒரு தொழில் வாய்ப்பாக கருதுவதுடன் பொதுச் சேவையாகவும் கருதுகிறேன்.

போரால் பாதிப்படைந்த அதிகளவான மக்கள் மிதிவெடி அபாயத்தால் தமது சொந்தக் காணிகளில் மீளக் குடியமர முடியாமல் வாடகை வீடுகளில் தங்கியுள்ளனர்.

இவர்களின் வாழிடங்களை மீட்டுக் கொடுப்பதற்காகச் செய்யும் பணியில் நானும் இணைந்து கொண்டதை நினைத்துப் பெருமைப்படுகிறேன்.

முற்று முழுதாக மிதிவெடி அபாயத்தில் இருந்து மீண்டெழுவது கடினம். என்றாலும் ஓரளவேணும் பொது மக்கள் எமது பணி மூலம் திருப்தி அடைகின்றார்கள்.

தற்போது நாகர் கோயில் பிரதேசத்தில் தான் எமது பணிகள் இடம் பெற்று வருகின்றன. இது முற்று முழுதாகப் பொது மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளுக்காகவும் அவர்களின் உயர்பாதுகாப்புக்காகவும் நடைபெற்று வருகின்றது. ஹலோரஸ்ட் நிறுவனத்துடன் இணைந்து தொடர்ந்து சேவை யாற்றுவேன். ✱



## வீடு விற்பனைக்கு

ஆனைக்கோட்டை, சங்கரப்பிள்ளை வீதியில் 4 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்க்கலாம்.
தொடர்பு: 0715505489

## மரண அறிவித்தல்

### நடேசு சந்திரகுமார்



வளலாய் கிழக்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் திடற்புலம், வசாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு - நாகரத்தினம் தம்பதியரின் புதல்வன் நடேசு சந்திரகுமார் 30.09.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.10.2011) ஞாயிற்றுக்கிழமை மு.பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வசாவிளான் பிள்ளையான் இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ.தனிகாசலம் (தனம்)
குடும்பத்தினர்.

திடற்புலம்,
வசாவிளான். (6806)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அரியாலை திருமகள் வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:0777897795

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1966, சுவாதி, கிரகபாவம் 30, பதிவுத் திருமணத்தோடு விவாகரத்துப் பெற்ற வியாபாரத்துறையில் உள்ளவருக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 0776180675 (8835)

## காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை துண்டி வீதியில் (ஐயனார் கோயிலுக்கருகில்) 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
0776617168,
0771387272 (8841)

## SHAMROCK

Paper Class
A/L 2012& Repeat
★ செழியன் R. அருணன் B.Com
Thurs 5, Fri 4.30 p.m
★ கணக்கு S.தவா B.Com (Hons) (Acc. Spl.)
Sat, Sun 10 a.m
★ அரசியல் S.S.செந்தூரன் B.A (Poli.Sc.Spl.)
Wed 5 p.m. Sun 12.00 N

## காணி விற்பனைக்கு

கச்சேரி கிழக்கு, 2 ஆம் ஒழுங்கையில் (கவர்னர் அலுவலகத்துக்கு அருகில்) 1¼ பரப்புக்காணி நியாய விலையில் விற்பனைக்குண்டு. T.P:0752126703

## தேவை

கொழும்பில் வெள்ளவத்தையில் இருக்கும் வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய் வதற்கு நம்பிக்கையான பெண் தேவை. வயது 30-50 உட்பட்டவர்கள் நன்று. தொடர்பு:0778481972



### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம் நினைவுப் பேருரை**

Sri Lankan Post - Colonial Society depicted in Nanthi's Fiction

நந்தியின் புனைகளில் ஈழ பின்-காலனிய சமூகம்

| | |
|---|---|
| பேருரை வழங்குநர்: | கலாநிதி வி.அரசு, பேராசிரியர்/ தலைவர், தமிழ் இலக்கியத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம். |
| இடம்: | கைலாசபதி கலை அரங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| திகதி: | 03.10.2011 |
| நேரம்: | பிற்பகல் 3.00 மணி |

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-பதிவாளர்-

## - தபால் மூலம் - ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

22

SEPT. 2011 TO FEBRUARY 2012

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
- வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
- ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.ailmas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.10.2011

## அருள் முருகன் திருமண சேவை

அரச மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள், Doctors, Engineers வெளிநாடு மணமக்கள் உட்பட எத்தகைய மணமக்கள் தேவைக்கும் ஓய்வுநிலை ஆசிரியரது கௌரவ சேவையை நாடலாம் (தரகரல்ல).
T.P 0718475114
இல.03,யாழ்.வீதி, சிறாம்பியடிலேன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## SCOOTER விற்பனைக்கு

தனிப்பாவனையில் இருந்த LML SELECT II NPHB - XXXX விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: T.P 0773583763
P.Easwaradasan,
180/2, Sir Pon Ramanathan Road,
Thirunelvely.

## வாடகைக்கு உண்டு

கண்டி வீதி, பிரதேச செயலகம் அருகே, சாவகச்சேரி நகரில் 600 சதுர அடி கொண்ட களஞ்சிய அறை வாடகைக்கு கொடுக்கப்படும். தேவையானோர் தொடர்புகொள்ளவும்.

0777722180/ 0776222993

## விசுவமடு றெட்பானா புனித பேதுருவானவர் ஆலய அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | |
|---|---|---|
| 1 ஆம் பரிசு | - | இல. 10133 |
| 2 ஆம் பரிசு | - | இல. 25654 |
| 3 ஆம் பரிசு | - | இல. 02464 |

ஆறுதல் பரிசுகள்

| | | |
|---|---|---|
| 1. 01362 | 5. 16047 | 9. 03995 |
| 2. 14363 | 6. 20633 | 10. 10831 |
| 3. 24563 | 7. 09262 | |
| 4. 04057 | 8. 08978 | |

எதிர்வரும் 10.10.2011 இற்கு முன்னதாக பரிசுகளை பற்றுச் சீட்டுடன் வந்து பெற்றுக்கொள்ளவும்.

சாயினி வீடியோ சென்ரர்
றெட்பானா சந்தி, விசுவமடு.
T.P 0217903633

## பிற்போடப்பட்டுள்ளது

குமரகுருவின் "தங்க வேட்டை இன்பத்திட்டத்தின்" 30.09.2011 குலுக்கல் தினமானது தவிர்க்க முடியாத காரணத்தினால் தீபாவளி தினமான 26.10.2011 அன்று முற்பகல் 10 மணிக்கு குமரகுரு மல்ரிசொப் முன்றலில் குலுக்கல் நடைபெறும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்,
குமரகுரு மல்ரிசொப்,
கிளிநொச்சி.

## STUDY IN UK, CANADA, USA, New Zealand CYPRUS, POLAND & GERMANY

| | |
|---|---|
| UK | → பல்கலைக்கழகத்தில் குறைந்த கட்டணம் + 20 Hrs. PT + Paid Internship |
| USA | → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே. IELTS -5.0 |
| CANADA | → IELTS / Sponsor தேவையில்லை,No Age limit. விசா கிடைத்த பின்னர் கட்டணம் செலுத்தவேண்டும் |
| POLAND | → IELTS தேவையில்லை, Work Permit Available,பகுதி நேர தொழில் வாய்ப்பு, |
| GERMANY | → பகுதி நேர தொழில் வாய்ப்பு + PR + With / Without IELTS |
| CYPRUS | → IELTS தேவையில்லை, பகுதி நேர தொழில் வாய்ப்பு விசா கிடைத்த பின்னர் கட்டணம் செலுத்தவேண்டும் |
| AUSTRALIA | → IELTS தேவையில்லை, Visa Guaranteed Transfer Program, G.C.E.(O/L) |

Next Intake: Oct.2011

**UKRAINE** - Aerospace ,Aeronautical Eng, MBBS, Nursing, Telecommunication, Bio Medical Science at lower cost ஒரு வருட தங்குமிடம் இலவசம். Sponsor & IELTS தேவையில்லை.

யாழ்ப்பாணத்தில் - புதிய பஸ் நிலையம், கொடிகாமம் | பஸ்னா - 0778 438403

READ International
E-mail: read.int@gmail.com
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

## வேலை வாய்ப்பு

★ உயர்தரப் பரீட்சை எடுத்து விட்டீர்களா?
★ வெளிநாட்டு பயணம் சரிவரவில்லையா?
★ அதிகம் சம்பாதிக்க ஆசைப்படுகிறீர்களா?
★ பிரபல்யமான கம்பனியில் வேலை செய்ய விருப்பமா?

உங்கள் தொலைபேசி இலக்கத்துடன் சுயவிவரக் கோவையைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

வி.இ-4179, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## வீடு வாடகைக்கு தேவை

அரச உத்தியோகத்தர் குடும்பமொன்றுக்கு யாழ். நகருக்கு அண்மையான (நகரிலிருந்து 5 Km தூரத்துக்கு உட்பட்ட) பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு: 0776916176,0750468508

## பிறீசர் விற்பனைக்கு

சில மாதம் பாவித்த புதிய டீப் பிறீசர் விற்பனைக்குண்டு. கடைப்பாவனைக்கு ஏற்றது.
(8836) தொடர்பு: 0776180675

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 31.10.1978
ஆண்டவன் அடியில் 23.09.2009

திதி: பஞ்சமி (02.10.2011)

### அமரர் கந்தசாமி பிரபாகரன்

*வருடம் இரண்டு ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்*
*ஆயிரம் உறவுகள் இங்கிருந்தாலும் அப்பாவை போலாகுமா?*
*உங்கள் இரண்டு பிள்ளைகளும் அப்பா எங்கே எனக் கேட்கின்றனரே*
*நாதர் முடிமேல் இருப்பதுவும் நாசம் செய்யு மென்று யாருக்குத் தெரியும்*
*பால் என்று நினைத்து உங்கள் கையில் இரத்தத்தை அல்லவா குடித்தது*
*வைத்தியசாலையில் உங்கள் மனைவி கைப்பற்றி*
*எனக்கு ஒன்றும் ஆகாது என்று கூறினீரே...*
*அந்த ஆண்டவனுக்கும் பொறுக்கலையோ...*

நித்திய புன்னகை நிலவே! அன்பினில் விளைந்த ஆரமுதே! – நீ பிரிந்து
ஆண்டுகள் இரண்டது சென்றதையா இன்னும் உன் நினைவுகள் – எம் மனதில்
நிழலாய் நின்று ஆடுதையா ஈன்றெடுத்த தாயவளும் – உன் இனிய
மனைவி, பிள்ளைகளும், உறவுகளும் கலங்கிப் போய் நிற்குதையா
உன்னருகில் நாம் வாழ எமக்கு விதியில்லை என்றாலும்
எமக்கு கனவாய் வந்து கதைப்பாயெனக் காலமெல்லாம் காத்திருப்போம்
எம் வேதனை நீங்கிட – நீ விண்ணைத் தாண்டி வருவாயா?

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், அப்பா, அம்மா, சகோதரர்கள்.

குடமியன், வரணி.

## ஆண்டொன்று சென்றாலும் அகலாத நினைவலைகள்



### அமரர் வேலுப்பிள்ளை வரதராஜா

(கச்சாய் வீதி, கொடிகாமம்)

நேற்று வரை எம்மோடு நீரிருந்த நினைவலைகள்
காலனவன் வீசிய கயிற்றினால் பிரிந்ததுவோ உந்தனுயிர்
உமது உருவம் எமது கண்ணில் கண்ணீராய் வழிகிறது
நாடுகின்றோம் உமது வழியில் உமதுரையில் நாம் செல்ல
உற்றவரும் ஊரவரும் உம் நினைவு பேசுகிறார்
கற்றவரும் மற்றவரும் உம் பெருமை உரைக்கின்றார்
அமரரடி நீரிருந்து எமக்கு ஆசிகள் கூறுகின்றீர் - அதனால்
ஆல விருட்சம் போல் உம் சந்ததிகள் தளைத்திடுமே
நூறாண்டு சென்றாலும் அப்பா
குன்றாது உம் நினைவு

அன்னை மடியில் 26.04.1950
ஆண்டவனடியில் 12.10.2010

இல.57, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## பதவி வெற்றிடம்
### பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் - வவுனியா

**சாயி சிறுவர் இல்லக் காப்பாளர் (ஆண்கள் பகுதி)**
**கூமாங்குளம், வவுனியா.**

வவுனியா கூமாங்குளத்தில் அமைந்துள்ள சாயி சிறுவர் இல்லத்தின் ஆண்கள் பகுதிக்கு மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

1. 40 வயதுக்குக் குறையாமலும் 65 வயதுக்கு மேற்படாமலும் இருக்கும் ஆண்
2. ஆண் காப்பாளராக கடமையாற்றிய (Male Warden) அனுபவம் உள்ளவருக்கு முன் உரிமை வழங்கப்படும்
3. சிறந்த நல்லொழுக்கமும் தேக ஆரோக்கியமும் இரக்க சுபாவமும் சேவை மனப்பான்மையும் உடையவராக இருத்தல் வேண்டும்.
4. ஆங்கில அறிவு விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.
5. சிறுவர் இல்லத்தில் நிரந்தரமாக தங்கியிருந்து கடமையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்
6. சத்ய சாயி நிலையங்களின் ஒழுக்க விதிகளைக் கடைப்பிடிக்க கூடியவராக இருத்தல் வேண்டும்
7. அதிபர் அல்லது ஆசிரியர் ஆக இருந்து ஒய்வு பெற்றவர் விரும்பத்தக்கது.
8. சாயி அடியவராக இருத்தல் விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.

சம்பளம்: பேசித் தீர்மானிக்கப்படும்.

அஞ்சல் உறையின் இடதுபக்க மேல் மூலையில் *'சாயி சிறுவர் இல்லம், கூமாங்குளம் ஆண்காப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம்'* எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். தயவுசெய்து சுயவிவரங்களுடன் கூடிய விண்ணப்பத்தை (Bio Data) 10.10.2011 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

தொ.பே: 024 2222492

தலைவர், பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம்
பிரசாந்தி வீதி, வவுனியா.

## VACANCY (பதவி வெற்றிடங்கள்)

**பிரபல ஆங்கில நிலையங்களில் பணிபுரிவதற்கு பின்வருவோர் உடன்தேவைப்படுகின்றனர்.**

1. English Teacher
2. Trainee English Teachers
3. Marketing Executive/Field Officer
4. Secretary /Office Assistants

**எமது கிளை நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்கள்**
**( யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வடமராட்சி)**
**விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் உடன் (0775301299) தொடர்பு கொண்டு நேர்முகப் பரீட்சைக்குப் பதிவு செய்யவும்.**

Oxford English Language Centre.
46, 6th Lane, Colombo - 13

## Galaxy Cabs

Call us 021 - 3201201
35/= Per Km.

## வீடு விற்பனைக்கு

கைலாசப்பிள்ளையார் கோயில் சந்திக்கு அருகில் கோயில் வீதியில் 1 ¾ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு :- 0776146434

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், திருவாதிரை 2 ஆம் பாதம், செவ்வாய் தோசம் அற்ற, உயரம் 5' 5", 1977ஆம் ஆண்டு கிரகபாவம் ல-8 மூன்று சுற்று 16¼, லண்டன் கணக்கியல் பட்டதாரியாக வேலை செய்பவர் லண்டனில் PR உள்ளவர். தகுந்த மணமகள் தேவை. லண்டன் PR or students visa விரும்பத்தக்கது. வெகு விரைவில் இலங்கை வரவுள்ளார்.
தொடர்பு:- T.P NO: 0779352987

## காணியுடன் வீடு வாடகைக்கு தேவை

**சகல விதமான வசதிகளுடன் கூடிய நல்ல நிலையில் உள்ள வீடு வாடகைக்ககோ அல்லது குத்தகைக்கோ தேவை. யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட வீடு விரும்பத்தக்கது.**
தொடர்புகளுக்கு : 0773504340
0775149900

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 30.10.1982 இல் பிறந்த ரேவதி 1ம் பாதம் கிரக பாவம் 49, Australia இல் Engineer PR உள்ள 5'7'' பட்டதாரி 5'2''- 5'4'' உயரமுள்ள Fair, Slim, Beauty மணமகள் தேவை.
*தொடர்பு:-0772964178*

## ஓட்டோ SALE

**புத்தம் புதிய TVS ஓட்டோ பச்சை நிறம் தனிப்பட்ட சொந்தப் பாவனையில் உள்ளது. விற்பனைக் குண்டு.**
**தொடர்பு:-0777032757**

## மணமகள் தேவை

திகதி: 23.10.1975
நட்சத்திரம்: கார்த்திகை 4 ஆம் பாதம்
இராசி:இடபம்
பாவம்:28 (நட்பு பெற்ற 7இல் செவ்வாய்)
H.N.D.A, B.Com, M.Com, 1St Year France வதிவிட உரிமை, லண்டன் ஸ்ருடன் விசா உள்ள பெண் பிள்ளை தேவை. அல்லது P.R உள்ள பெண் பிள்ளை தேவை.
(8610)
T.P:0750394152, 0214925887

## பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்

*வாகனங்களின் பிளாஸ்ரிக் ஒட்டுவேலைகள், கண்ணாடிவகைகள்-பொலிசிங், பைவர் மோல்டிங், பிளேற்றிங் (மொப்பிங் வேலை), ஸ்பிறேபெயின்ரிங் என்பன சிறந்த தொழில் நுட்ப முறையில் செய்து கொடுக்கப்படும்.*
வரலட்சுமி பிளாஸ்த்திக் ஒட்டுத் தொழிலகம்,
இல.286/2, அரசடி வீதி,நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel:0773512591

## வேலையாள்கள் தேவை

தொழில் நிறுவனத்தை நிர்வகிக்கக்கூடிய மின்னியலாளர்உடன் தேவை. (மின்னியல், மின்னியந்திரங்கள் வைண்டிங், சமையலறை மின்சார சாதனங்கள் திருத்துதல் போன்றவற்றில் சிறப்புத்தேர்ச்சி உடையவராயிருத்தல்வேண்டும்) தமது தகுதியை நிரூபிக்க தேவைப்படின் 3 மாதங்கள் தரப்படும். மற்றும் தமது சம்பள பெறுவனவினை இந்த நிறுவன மதிப்பீட்டுப் படிவத்தின் மூலம் கணிப்பிட்டுக் கொள்ளலாம்.
தகுதியான ஆவணங்களுடன் காலை 9 மணிக்கு நேரில் சமூகம் தரவும்.
அதிதீரன் மின்சார தொழில் நுட்ப நிலையம், இணுவில் வீதி, மானிப்பாய். (பாமசி லேன்

## முதலாம் ஆண்டு நினைவு நாள் அழைப்பு

அமரர் **பொன்னுச்சாமி இராசரத்தினம்**
**(வெள்ளைத்தம்பி)**
(மட்டுவில் ஆச்சியின் கணவர்)



தோற்றம்
*17 ★ 06 ★ 1927*

மறைவு
*12 ★ 10★ 2010*

**அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று (02.10.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

573, பொன்நகர்,
விநாயகபுரம் (ஒட்டன்குளம்),
துணுக்காய்.
(சி/4604)
குடும்பத்தினர்.

## பணியாளர் தேவை

கொழும்பில் இயங்கிவரும் பெயின்ற் உற்பத்தி தொழிற்சாலைக்கு ஆண் தொழிலாளர்கள் தேவை.
வயது 35 இற்கு உட்பட்டவர்கள்.
தங்குமிட வசதி செய்து தரப்படும்
கிராமசேவகரின் நற்சான்று பத்திரத்துடன் தொடர்புகொள்ளவும்.
**0112960970, 0777421442**

## வீடு திருத்த வேலைகளுக்கு

கொழும்பில் இருந்து வரவழைக்கப்பட்ட சிறந்தவேலையாள்கள் மூலம் மாபிள் பதித்தல், Plumbing, Pantry Cupboard, Electric Work, Colour Washing, மேசன், தச்சுவேலை மிகத் தரமான முறையில் குறித்த கால எல்லைக்குள் மலிவாக செய்துகொடுக்கப்படும்.
**தொடர்பு கொள்க : 0777556244**

## காணி விற்பனைக்கு

யாழ்.நகரில் சுபாஸ் ஹொட்டலுக்கு அண்மையில் 46/4, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
**தொடர்புகளுக்கு: 0777556244**

## நினைவலைகள்

### 2ஆம் ஆண்டு நினைவு



தோற்றம்:
*22.02.1942*

மறைவு:
*16.07.2009*

**அமரர் சிறீ அகிலாண்டதரநாதன்**
**திருஞானசுந்தரம்**

ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம் - அம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திகிரி, புலோலி வடகிழக்கு, பருத்தித்துறை.

### முதலாம் ஆண்டு நினைவு

தோற்றம்:
*10.11.1976*

மறைவு:
*02.10.2010*



அமரர்
சிறீ அகிலாண்டதரநாதன்
சிறிஞானகதிர்காமநாதன்
*(ராஜன் கனடா)*

ஆறாத் துயரில் ஆண்டோன்று ஆனாலும்...
விழிதனில் உந்தன் நினைவுகள் கண்ணீராய் வழிந்தோட
பாசம் எனும் கூட்டில் பாசப் பறவைகளாய் நாம் வாழ்ந்தோம்
சொந்தங்களை அரவணைத்து அன்போடு வாழ்ந்தீர்கள் சித்தப்பா
விதியின் விளையாட்டோ இல்லை காலனின் சூழ்ச்சியோ?
காலையில் பூத்து மாலையில் வாடிவிடும் பூவைப்போல்
எங்களை விட்டு நீங்கள் பிரிந்தபோது நடுநிசியில் தனிக் காட்டில்
தவிக்கவிட்ட பேதைகள் போல் தவித்து நிற்கின்றோம் சித்தப்பா
நிஜமாய் கண்ட உருவத்தை நிழற்படமாய் பார்க்கும்போது
நெஞ்சம் விம்முகிறது சித்தப்பா எத்தனை ஆண்டுகள் சென்றாலும் - எங்கள்
உள்ளங்களில் நீங்கள் வாழ்ந்திருப்பீர்கள் சித்தப்பா
மீண்டும் ஒருமுறை உம் அன்புக்காகவும் அரவணைப்புக்காகவும்
ஏங்கித் தவிக்கின்றோம் ஈரவிழிகளுடன்

இந்திரன் குடும்பத்தினர்

## உதவி தொழில்நுட்ப வல்லுனர் (Assistant Technician)
### பதவி வெற்றிடம் - கிளிநொச்சி

THE HALO TRUST

*ஹலோடிரஸ்ட் பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட அரசியல், சமயத் தொடர்பற்ற ஒரு அரச சார்பற்ற நிறுவனமாகும். விசேடமாக வடமாகாணத்தில் 2002 ஆம் ஆண்டிலிருந்து கண்ணிவெடிகளையும் வெடிக்காத வெடி பொருள் களையும் அகற்றிக்கொண்டிருக்கிறது. தற்பொழுது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் பணிபுரிகின்றது.*

*உதவி தொழில்நுட்ப வல்லுனரின் பொறுப்புக்களாக பிரதம தொழில் நுட்ப வல்லுனரின் மேற்பார்வையின் கீழ் உலோக உணர் கருவிகள் (Metal Detectors) றேடியோக்கள் மற்றும்அனைத்து இலத்திரனியல் சாதனங்களையும் பழுதுபார்த்து பராமரிக்கக்கூடியதாக விருக்கும்.*

எதிர்பார்க்கப்படும் ஆகக்குறைந்த தகுதிகள்
★ இலத்திரனியல் சாதனங்களை பழுது பார்க்கக்கூடிய முறைப்படியான பயிற்சி அல்லது அனுபவம்
★ ஆங்கிலம் எழுத, பேச தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.

விருப்பமுள்ளவர்கள் சுயவிவரக்கோவையுடன் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பவும்.

ஹலோ டிரஸ்ட்,
450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.
மின்னஞ்சல்: recruitment@halosrilanka.org

விண்ணப்பங்கள் ஒக்டோபர் 10 ஆம்திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

# வடக்கு கிழக்கில் சிறுவர்களின் உரிமைகள் யாவும் மறுக்கப்பட்ட நிலையில் சிறுவர் தினக் கொண்டாட்டம்

## வவுனியா உப தலைவர் எம்.எம்.ரதன்

வவுனியா, ஒக்.2

சர்வதேச சிறுவர் தினம் இன்றாகும். உலகம் முழுவதும் சிறுவர்களைக் கௌரவித்தும் அவர்களது உரிமைகளை மதித்தும் சிறுவர் தினத்தைப் பல நாடுகள் கொண்டாடும் சூழ்நிலையில், இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கு இணைந்த எமது தாயகப் பிரதேசத்தில் சிறுவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு துஷ்பிரயோகங்கள் அதிகரித்த சூழ்நிலையில்தான் சர்வதேச சிறுவர் தினத்தை நாம் கொண்டாடுகின்றோம். இவ்வாறு வவுனியா நகர சபையின் உப தலைவரும் விபுலானந்தாக் கல்லூரியின் பழைய மாணவ சங்கச் செயலாளருமாகிய எம்.எம். ரதன் தெரிவித்தார்.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்த நிகழ்வுக்கு பாடசாலையின் அதிபர் வே.இந்திரன் தலைமை தாங்கினார்

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இன்றைய நாள் சர்வதேசத்தின் மிக முக்கியமான நாளாகும். சிறுவர்களைக் கௌரவித்தல், போற்றுதல், உரிமைகள் வழங்குதல் எனப் பல நிகழ்வுகள் நடக்கின்றன. நாமும் இன்று எமது மண்ணிலும் சிறுவர் தினத்தை மிக விமரிசையாகக் கொண்டாடுகின்றோம். 'இன்றைய இளைஞர்களே நாளைய நாட்டின் தலைவர்கள்' என சிறுவர்களுக்குரிய உரிமைகளை நாம் மதித்து எதிர்கால நோக்குப் பற்றி விளக்குகின்ற போதுதான் சிறுவர்கள் கிளர்ந்தெழுந்து நாளைய சமூகத்தை வளப்படுத்துவார்கள். ஆனால் போர் முடிவுற்றாலும் எமது தேசத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இன்னும் குறைந்தபாடில்லை. அண்மையில் கிறீஸ் மனிதன், பூத மனிதனை உருவாக்கி சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டார்கள். ஆபாச உணர்வை ஏற்படுத்தி எமது இனச் சிறுவர்களைச் சீரழிக்கிறார்கள். இவற்றை எல்லாம் உணர்ந்து நாம் எமது சிறுவர்களுக்கான உரிமைகளை வழங்க வேண்டும். ஐக்கிய நாடுகள் தாபனம் 1989 ஆம் ஆண்டிலிருந்து 18 வயதுக்கு உட்பட்டவர்களைச் சிறுவர்களாக வரையறுத்துள்ளது. எனவே இந்தச் சிறுவர்களுக்குச் சகல அந்தஸ்துக்களையும் வழங்கி அவர்களைச் சுதந்திர புருஷர்களாக மாற்ற இந்த நாளில் திடசங்கற்பம் பூணுவோம். இதற்காக இந்த நிகழ்வுக்கு வந்திருக்கின்ற பிள்ளைகளின் ஒவ்வொரு பெற்றோர்களும் உறுதி கொள்ள வேண்டும்.

வவுனியாவில் விபுலானந்தாக் கல்லூரி கல்வியில் வேகமாக வளர்ந்து நிற்கின்ற பாடசாலை ஆகும். கடந்த நான்கு வருடங்கள் தொடர்ச்சியாக புலமைப்பரிசில் பரீட்சையில் மாகாண, மாவட்ட ரீதியில் முதலிடத்தை இந்தக் கல்லூரி மாணவர்களே பெற்றனர். இந்தாண்டும் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தில் வரா விட்டாலும் விகிதாசார அடிப்படையில் உயர்ந்த புள்ளிகளை மாணவர்கள் பெற்றுள்ளனர். 189 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றினர். இவர்களில் 61பேர் சித்தியடைந்துள்ளனர். 118 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். எனவே புலமைப் பரிசில் பரீட்சையில் உயர்ந்த நிலையிலேயே இந்தப் பாடசாலை காணப்படுகின்றது. கொடூரமான யுத்த சூழ்நிலையில் வாழ்ந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த முல்லை நெத்தலியாறு மாணவன் ப.சேதுராகவன் போல் ஒவ்வொரு மாணவனும் கல்வியில் சாதிக்க முன்வர வேண்டும்.

இந்தப் பாடசாலையைப் பொறுத்தவரையில் கடந்த ஐந்து வருடங்களாக விளையாட்டுப் போட்டி நடைபெறவில்லை. விளையாட்டு மைதானம் இன்மையே இதற்கான காரணமாகும். ஆயினும் அடுத்த ஆண்டு இந்தப் பாடசாலைக்கு அருகிலுள்ள சீர்திருத்த விளையாட்டு மைதானத்தில் இந்தப் பாடசாலையின் விளையாட்டுப் போட்டியை நாம் நடத்தியே தீருவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (க)

# தேசிய வீடமைப்பு அதிகார சபையால் மன்னாரில் பல்வேறு நிகழ்ச்சிகள்

மன்னார், ஒக்.2

உலக குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மன்னாரில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மன்னார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கடன் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குடியிருப்புக்களும் தேச சுவாத்திய மாற்றங்களும் என்னும் தொனிப்பொருளில் இந்த வருடம் மேற்படி நிகழ்ச்சி அமுல்படுத்தப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகளுக்குக் கடன் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மன்னார் மாவட்ட முகாமையாளர் திருமதி ருக்ஸா. சுவர்னராஜா, வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சின் இணைப்பாளர் கே.எச்.வி.ஜகபால பண்டார உட்படப் பயனாளிகள் பலரும் கலந்து கொண்டனர். (க-601)

# நெல் கொள்வனவு நடைமுறைகளால் ஒட்டுசுட்டான் விவசாயிகள் அலைச்சல்

முல்லைத்தீவு, ஒக்.2

ஒட்டுசுட்டான் விவசாயப் பகுதியினர் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்கின்றபோதிலும் சில நடைமுறைகள் காரணமாக விவசாயிகள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது ஒரு மூடை நெல் ஆயிரத்து 950 ரூபாவாகக் கொள்வனவு செய்யப்படுகின்றது. ஆனால், நெல்லின் தரத்தைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கென மாங்குளத்துக்கே நெல்லைக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. சிலவேளை தரம் குறைவாக இருந்தால் மாங்குளத்திலிருந்து நெல்லை வீட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலையே உள்ளது. இதனால் விவசாயிகள் அதிக பணத்தையும் நேரத்தையும் இழக்க வேண்டியுள்ளது.

மேலும், மேலதிக சிரமங்களுக்கும் இவர்கள் ஆளாகி வருகின்றனர்.

எனவே தமது சொந்த இடங்களில் வைத்து நெல்லின் தரத்தைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கென ஏற்பாடுகளை மேற்கொண்டால் தமது அலைச்சலும் பண விரயமும் தவிர்க்கப்பட்டு விடுமென இவர்கள் கூறுகின்றனர்.

மேலும் தமது நெல்லை நியாயமானதொரு விலையில் கொள்வனவு செய்துவரும் விவசாய இலாகாவினருக்கு நன்றி கூறும் விவசாயிகள் தமது வேண்டுகோள் ஏற்கப்பட்டால் தமது சிரமங்களும் குறைந்துவிடுமென நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (க-500)

# செம்மலை வைத்தியசாலை புனரமைப்பு

முல்லைத்தீவு, செம்மலைப் பகுதிக்கான பொது வைத்தியசாலைக் கட்டடத்தின் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. யுத்தத்தின்போது சேதமடைந்திருந்த இந்த வைத்தியசாலைக் கட்டடங்கள் தற்சமயம் புனரமைக்கப்பட்டு வருவதால் அந்தப் பகுதி மக்கள் நன்மை அடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. தற்பொழுது மேற்படி வைத்தியசாலை செம்மலை இரண்டாம் ஒழுங்கையில் உள்ள ஒரு தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

வைத்தியசாலையின் கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதால் ஒரு சில மாதங்களில் மீளவும் பழைய இடத்தில் வைத்தியசாலைப் பணிகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க-எ-421)

## திறமைக்குப் பாராட்டு...



பெருமை படைத்த மாணவன்: அகில இலங்கை ரீதியில் தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ்மொழி மூலம் இரண்டாவது இடத்தைப் பெற்ற நெத்தலியாறு தமிழ் வித்தியாலய மாணவன் பரமேஸ்வரன் சேதுராகவனை அவரது வீட்டுக்குக்குச் சென்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், வவுனியா நகர சபையின் உப தலைவர் எம்.எம்.ரதன் ஆகியோர் பாராட்டிய பின் பாடசாலை அதிபர், மாணவன், மாணவனின் தந்தை ஆகியோருடன் காணப்படுகின்றனர். (601)

# சூடு பிடிக்கும் இரும்பு வியாபாரம்

முள்ளியவளை, ஒக்.2

புதுக்குடியிருப்பில் பழைய இரும்பு வியாபாரம் என்றுமில்லாதவாறு உச்சக் கட்டத்தை எட்டியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

பழைய இரும்புகளைச் சேகரிப்பவர்கள் அதிக வருமானத்தை ஈட்டி வருவதால் வேறு கூலி வேலைகளுக்கு ஆள்களைப் பிடிக்க முடியாத நிலையே காணப்படுகின்றது.

இதற்கிடையில் யுத்தத்தின் போது பொதுமக்களால் கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிள்களும் மலிவு விலையில் விற்கப்படுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்குச் சீருடை தரித்தவர்களின் ஆசிர்வாதமும் இருப்பதாகக் கூறப்படுகின்றது. மாத்தளன், வலைஞர்மடம் பகுதிகளுக்கு களவாகச் செல்லும் சிலர் மோட்டார் சைக்கிள்களைத் தடியில் காவிக்கொண்டு வருகின்றனர். பின்னர் வியாபாரம் சூடு பிடிக்கிறது. லட்சக் கணக்கில் பெறுமதியான இத்தகைய பொருள்கள் சில ஆயிரங்களுக்கு விற்பனையாவதைக் காண முடிகின்றது.

இதைவிட வீட்டு நிலை, ஜன்னல், கதவுகள், மரங்கள் என்பனவும் தாராளமாகக் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன. (க-433)

# மிக மோசமான வீதி

தனங்களப்புச் சந்தியில் இருந்து பூநகரி வாடியடிச் சந்தி வரையான சங்குப்பிட்டிப் பாலம் ஊடாகச் செல்லும் வீதி மோசமாகப் பாதிக்கப்பட்டு மணற் பாங்காகக் காணப்படுகின்றது. 20 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இந்த வீதியால் தினமும் பயணிக்கும் அரச பணியாளர்கள், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள், பஸ் ஓட்டுநர்கள் எனப் பலரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த வீதியின் அவல நிலையால் வீதி விபத்துக்கள் இடம்பெறும் வாய்ப்பும் காணப்படுகின்றது. சங்குப்பிட்டிப் பாலம் பாவனைக்கு விடப்பட்டு ஆறு மாதங்களைக் கடந்த நிலையிலும் இந்தப் பாதை புனரமைக்கப்படாதமை பயணிகள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-406)

# முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலையில் முதன் முதலாக மூன்று மாணவர்கள் புலமைப் பரிசில் சித்தி

யாழ்ப்பாணம், ஒக்.2

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் கோட்டத்துக்கு உட்பட்ட முத்துஐயன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் முதன் முதலாக மூன்று மாணவர்கள் 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தது பெருமைக்குரியதும் - பாராட்டுக்குரியதும் ஆகும்.

மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் தனியார் ரியூசன் வகுப்புக்கள், பெற்றோரின் விசேட கவனிப்பு எதுவும் இன்றி பாடசாலைக் கல்வியூடாக இந்த மூன்று மாணவர்கள் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

இவர்களை முல்லை மாவட்ட மக்களும் அரச உத்தியோகத்தர்களும் கௌரவித்து வருகின்றனர். இவ்வாறு முத்துஐயன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 5ஆம் தரப் புலமைப்பரிசில் ஆசிரியர் துரைராசா சசீகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: அதிகஷ்டப் பிரதேசத்தில் உள்ள மேற்படி முத்து ஐயன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை மாணவர்களுக்குக் கல்வி வழங்கி வருகின்றது. பாடசாலை அதிபர் க.பஞ்சலிங்கம் மாணவர்களின் கல்வி ஊக்குவிப்புக்கு சகல உதவிகளையும் மனமுவந்து வழங்கி வருகின்றார்.

இதனால்தான் பெற்றோரின் பங்களிப்பு இல்லாத நிலையிலும் புலமைப்பரிசில் பரீட்சையில் டிசாந்தன் 156, நிகிலா 155, தாரணி 149 ஆகிய புள்ளிகளைப் பெற்றுச் சாதனைபடைத்துள்ளனர்.

பல்வேறுபட்ட துன்பங்கள், பொருளாதார ரீதியான கஷ்டங்கள், இடப்பெயர்வுகள், வறுமை நிலை ஆகியவற்றுக்கு மத்தியில் ஒரே தடவையில் மூன்று மாணவர்கள் சித்தியடைந்து துணுக்காய் கல்வி வலயத்துக்கும், ஒட்டுசுட்டான் கோட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர். இவ்வாறு துரைராசா சசீகரன் மேலும் தெரிவித்தார். (302)

# காணிப் பதிவில் முரண்பாடுகள்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் காணிகளைப் பதிவு செய்வதில் முரண்பாடுகள் தோன்றியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

தற்போது இங்குள்ள மக்கள் கிராம அலுவலர்களிடமிருந்து படிவங்களைப் பெற்றுத் தமது காணிகளைப் பதிவு செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். ஆனால் முத்து ஐயன்கட்டுப் பகுதியில் நாட்டின் கெடுபிடிகளால் தமது காணிகளை விட்டுச் சென்றவர்களும் ஆவணங்களுடன் வந்து காணிகளைப் பதிவதில் ஈடுபட்டுள்ளனர். இதனால் பல ஆண்டுகளாக இந்தக் காணிகளில் குடியிருந்து வருபவர்கள் செய்வதறியாது திகைத்து நிற்பதுடன் அவர்களுடன் முரண்படுவதையும் காண முடிகின்றது. (க-500)

## வீடு விற்பனைக்கு

ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் 3½ பரப்புக் காணியில்அமைந்த வீடு விற்பனைக்குண்டு (காணி பிரித்தும் கொடுக்கப்படும்)
தொடர்பு: 0776146434

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளிப் பாடசாலைக்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட மூன்று பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776146434.

## யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவச் செல்வங்கள்




2011 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவச் செல்வங்களை மனதார வாழ்த்துகின்றோம். அத்துடன் கற்பித்தலில் வழிகாட்டிய அனைத்து ஆசிரிய பெருந் தகைகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர்கள் கல்வியில் மேலும் பல வெற்றிகளைப் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுபோதினி சிவகுமார் — புள்ளி - 167

வைஷ்ணவி ஜங்கரன் — புள்ளி - 156

இராமராஜ் குடும்பம்,
369/1, K.K.S. Road,
Jaffna.

மனதார வாழ்த்துவோர்:
பெற்றோர், அப்பப்பா, அப்பம்மா, சகோதரர்கள், மச்சாள்மார்கள்.


## விழிப்புணர்வுக் கூட்டம்

தென்மராட்சி, ஒக.2

டெங்கு நோய் தொடர்பாக விழிப்புணர்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

நகரசபை தவிசாளர், உறுப்பினர்கள், நகர சபை உத்தியோகத்தர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், மாவட்ட தொற்று நோயியல் நிபுணர் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் சிவகணேஸ், மாவட்ட மேற்பார்வை, பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ்.திவ்வியகுமார் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் உரையாற்றினர்.

(ம-207)


## தேவை

யாழ்.நகர் K.K.S வீதியில் அமைந்துள்ள LANKA TILES PLC காட்சி அறையில் பணியாற்றுவதற்கு க.பொ.த (உயர்தரம்) சித்தியும் கணினி அறிவும் கொண்ட ஆண், பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் சுய விவரக்கோவை அடங்கிய தமது விண்ணப்பத்தை 06.10.2011 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். முகாமையாளர்,

நாராயணா கட்டடப்பொருள் வர்த்தகர்,
இல 115, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(4430) தொலைபேசி: 021 222 5390

ஆகக்குறைந்த அனுமதிக்கட்டணம் (Admission Fees) முதல் வருடத்திற்கு மட்டுமே!

# விஜயதசமி அன்று BBS இன் அனைத்து பாடசாலைகளிலும் வித்தியாரம்பம்.

**விஜயதசமியன்று (Oct.06) BBS இன் அனைத்துவளாகங்களிலும் காலை 9.00 மணியளவில் வித்தியாரம்பம் செய்து வைக்கப்படும்**

* 10 வருடமாக சர்வதேச தரத்திலான BBS இன் ஆங்கிலக்கற்கை நெறிகளால் யாழ்குடாநாட்டில் ஆயிரக்கணக்கான சிறார்கள் பயன் பெற்றுள்ளார்கள்
* இதுவரை BBS இன் வளாகங்களில் கல்வி கற்ற ஆயிரக்கணக்கான சிறுவர்களில் 95 வீதமானோர் யாழ்குடாநாட்டின் அதிசிறந்த பாடசாலைகளில் கற்பதற்கு அனுமதி பெற்றிருப்பதுடன் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசிலிலும் சித்தியடைந்துள்ளார்கள்
* உங்கள் வசதி கருதி யாழ்குடாநட்டின் பல்வேறு இடங்களிலும் சர்வதேச தரத்திலான தனியார் பாடசாலை.

## BBS இன் சர்வதேச பாலர் பாடசாலைகள் → Dr.Maria Montessori & Canadian Early Learning Method
ஆங்கில மொழிமூல பாடசாலை செயற்பாடுகள்

* Play Group (2+சிறார்களுக்கு) * Montessori (3+சிறார்களுக்கு) * Pre-School (4+சிறார்களுக்கு)

### BBS இன் 10 வளாகங்கள்

| | |
|---|---|
| நல்லூர் | - 140, கோயில் வீதி, நல்லூர் |
| கோப்பாய் | - பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி |
| நீர்வேலி | - 1ம் கட்டை, இராசவீதி, நீர்வேலி. |
| சாவகச்சேரி | - சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை அருகாமை |
| மானிப்பாய் 1 | - 252, ஆலடிசந்தி, யாழ்வீதி, மானிப்பாய். |
| மானிப்பாய் 2 | - சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். |
| சுன்னாகம் | - Lakshmi (புதியநீதிமன்றம் அருகாமை) K.K.S.வீதி மல்லாகம் |
| புலோலி | - ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை. |
| அச்சுவேலி | - அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை |
| சங்கானை | - நிகர வைரவர் கோயிலடி, A.G.A Office அருகாமை |

### BBS இன் முத்தமிழுக்கோர் முத்தாரம்

**மானிப்பாய் I II சுன்னாகம் சங்கானை வளாகங்களில்**
முத்தமிழ்விழா எதிர்வரும் 11ம் திகதி காலை 8.30 மணிக்கு சுன்னாகம் கதிரமலை சிவன் கோயில் மண்டபத்தில் நடைபெறும்.

அனைவரையும் அழைக்கின்றோம்.

சிற்றி நல்லூர், கோப்பாய், சாவ கச்சேரி, நீர்வேலி, அச்சுவேலி, பருத்தித்துறை முத்தமிழ்விழா எதிர்வரும் 9ம் திகதி காலை 8.30 மணிக்கு இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெறும்.

## புலமைபரிசில் பரீட்சையில் சிற்றி கிளையில் சித்தியெய்திய BBS இன் பழைய மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்


R. Nithusika


S. Vimarshan


A.Banusha


S.Brunthavan


J.Kajanan


R.Monalisan


S.Sivapujan


J.Anogious


T.Givashanth


G.Sagana


J.Marin Rojes


J.Jayadancy


G.Dayansica


S.Kuhapiriyan

British BUSINESS SCHOOL
Where Students Come First

# BRITISH BUSINESS SCHOOL



The Peninsula's Premiere English Academy

140, கோயில் வீதி, நல்லூர். Contact : 021 2225796, 0776646357

# இல்லறக் காதலர் வாழ்க்கையில் பிரிவுத் துயரம்

இலக்கியக் காட்சி – 104

கணவனும் மனைவியுமாக இல்லறத்தில் இணைந்து நல்லறமாக அறநெறியில் வாழ்ந்த காதலர் வாழ்க்கையில், போருக்குப் போகும் போதும் பொருள் தேடப் போகும் போதும் தலைவன், தலைவியைப் பிரிந்து செல்ல வேண்டிய தேவை ஏற்படுகின்றது. போக்கு வரவு வசதியோ, செய்திகளை உடனுக்குடன் அறியும் வசதியோ இல்லாத அந்தக் காலத்தில், இவ்வாறான பிரிவு என்பது பெரிய துன்பம் நிறைந்த நிகழ்வாக இருந்து வந்தது. இங்கு, பொருள்வயிற் பிரிதல் பற்றி ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

நாட்டுப் பற்றுடன் சாவுக்குப் பயமின்றிப் போர்க் களம் போகும் தலைவன், போரில் வீரச்சா அடை தலில் ஒரு மகிழ்ச்சி காண்பான். ஆனால் பொருளீட்டுவதற் காக வணிகமுயற்சியில் வீட்டை விட்டு நாட்டை விட் டுப் பிரிந்து செல்வார்க்கு அந்த வாய்ப் பும் இல்லை; பொருள் தேடி முடித்து இடையூறின்றி வீடு வந்து சேர்ந்தால் தான் மகிழ்ச்சி உண்டு. அதுவரையில் கணவனைப் பற்றி மனைவியும் மனைவியைப் பற்றி கணவனும் எண்ணி எண்ணி ஏங்குவதே பெரிய துன்பமாகிவிடும்.

வறியார்க் கொன்றீதலும் விருந்து எதிர் கோடலும் இயற்றி வாழ்ந்த அந்தக் காலத் தமிழ்த் தலைவனும் தலைவியும், ''பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை'' என்னும் வள்ளுவன் கூற்றை அறிந்துதான் இருந்தனர்!

*''நயனுடையான் நல் கூர்ந்தான் ஆதல் செயும் நீர் செய்யாது அமைகலா ஆறு''* [குறள் 219] என்று நல் லார் கைப்பட்ட வறுமையைப் பற்றி வள்ளுவர் கவ லைப்பட்டது போல அவர்களும் கவலைப்பட்டனர்.

*''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை''* [குறள் 43] அதனால் அந்தத் தலைவர் தலைவன் பொருள் தேடப்புறப்படுகிறான்.

*''தம் நயந்து உறைவோர்த் தாங்கித்*
*தாம் நயந்து*
*இன்னமர் கேளிரொடு ஏமுறக் கெழீஇ*
*நகுதல் ஆற்றார் நல் கூர்ந்தோர் என*
*மிகு பொருள் நினையும் நெஞ்சமொடு...''* [அக.151]

பிரிவு நிகழ்கிறது.

கணினியும் கைத்தொலைபேசியும் கடுகதி நெடுஞ்சாலையும் மோட்டார், ரயில் விமானம் செய்திச் சேவையும் இன்னபிற வசதிகளுமுடைய இந்த நூற்றாண்டுக்கு முந்திய நூற்றாண்டினைப் பார்த்தாலே அந்தக் காலத்தில் எப்படி மக்கள் வாழ்க்கை முறை இருந்திருக்கும் என்பதனை உணரமுடியும்!


எனவே, பொருள்வயிற் பிரிந்து சென்ற தன் கணவனை எண்ணி வருந்திய தலைவியை அவளது தோழி தேற்றுகிறாள். ஆனால் அந்தத் தலைவியோ, ஆதிமருதி என்பவள் கணவனைப் பிரிந்த துன்பம் பொறுக்க இயலாமல் பைத்தியம் பிடித்து அலைந் தமையை நினைத்து வருந்துகிறாள்.

*''யானே*
*காதலற் கெடுத்த சிறுமையொடு நோய் கூர்ந்து*
*ஆதிமருதி போலப் பேதுற்று*
*அலந்தனென் உழல்வன் கொல்லோ?''* [அகம் 45]

ஆனால், ''அறம் தவறாத நல்வாழ்க்கையும் மற்றவரி டம் சென்று இரக்காத மானமும் ஆகிய இரண்டும், பொருளால் கை கூடும் என்று என் கூந்தலைத் தடவிச் சென்ற என் கணவர், தம் முயற்சியை முடிப்பாராக; தோழி! நாம் துயரத்தால் வாடி வருந்தினாலும் கவலை இல்லை'' என்று சொல்லி, மனத்தின் தன்னலமற்ற தூய்மையை வெளிப்படுத்துகிறாள் தலைவி.

*''அறன் கடைப்படாஅ வாழ்க்கையும், என்றும்*
*பிறன் கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்*
*பொருளின் ஆகும் புனையிழை!''என்று நம்*
*இருள் ஏர் ஐம்பால் நீவி யோரே*
*நோய் நாம் உழக்குவம் ஆயினும்,*
*தாம்தம்*
*செய்வினை முடிக்க தோழி!* [அகம் 155]

தோழி என மேலும் தொடர்ந்து, ''அவர் நெடுநாள் தங்கியிருக்கமாட்டார். விரைந்து திரும்புவார்; அவருக்காக வருந்த வேண்டாம்'' என்கிறாள். அப்பொழுது தலைவி, ''அவர் சென்ற வழியோ கொடிய பாலைவனம். ஆறலை கள்வர் (வழிப்பறி கள்வர்) அவ்வழியில் வருவோரை அவர்களிடம் பொருள் இல்லாவிடினும்-தமது அம்பின் வீரம் காட்டக் கொன்று கழுகுக்குப் போடுகிறார்களாம். அத்தகைய வழியில் சென்றவர் ஒரு துன்பமும் இன்றித் திரும்பி வருவது தெரிந்தால் என கண்கள் இவ்வாறு கண்ணீர்



சிந்தி அழமாட்டா என்கிறாள்.

*''சென்று நீடுநர் அல்லர்; அவர் வயின்*
*இனைதல் ஆனாய்'' என்றிசின் இருளை!*
*அம்பு தொடை அமைதி காண்மார் வம்பலர்*
*கலன் இலர் ஆயினும் கொன்று புள் ஊட்டும்*
*கல்லா இளையர் கலித்த கவலை...*
*அஞ்சுவரு மரபின் வெஞ்சுரம் இறந்தோர்*
*நோயிலர் பெயர்தல் அறியின்*
*ஆழல மன்னோ தோழி! என் கண்ணே!''* [அகம் 375]

(இறந்தோர்=சென்றோர்)

நா. நல்லதம்பி, மட்டுவில்.

நாடுகடந்து பிரிந்து சென்றது அவளுக்கு அவ்வளவு துன்பம் தரவில்லை. ஏன்? அக்காலத்தில் பொருள் வயிற் பிரிதல் என்பது இயல்பான வாழ்க்கை. ஆயின், அவர் சென்ற பாலை வனப் பாதையில் ஒரு துன்பமு மின்றி மீண்டு வருவார் ..

(20 ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்பார்ப்பு

''ஏன் அபி, நீ அவனை ஏற்க மறுக்கிறாய்; அவ னுக்கு என்ன குறை; அழகிலையும் சரி, அறிவிலையும் சரி ஏன் அந்தஸ்திலும் கூட எந்தவிதத்தில குறைஞ்சவனா அவனை நினைக்கிறாய்'' ...''நீ சொல்றமாதிரி அழகில, அந்தஸ்தில, அறிவில இதில எல்லாம் அவன் குறைஞ்சவன் எண்டு நான் உன்னட்ட ஒருபோதும் சொன்னதேயில்லையே தீபா''

''அப்ப அவன் காதலை ஏற்றுக்கொள்ளவேண்டியது தானே; ஏன் இப்படி அவனை நாயா உன் பின்னாடி அலைய வைக்கிறாய்'' .... ''அப்ப அவன் நாயா அலையிறான் எண்டிறதை நீ ஒத்துக்கிறாய் அப்படித்தானே தீபா''

''என்ன ஜோக்கா; ஏன் அபி நீ இப்படி கொஞ் சங்கூடப் பொறுப்பே இல்லாம பேசி றாய் இது கொஞ்சங்கூட நல்லாயில்லை; மற்ற வங்க மனநிலையைக் கொஞ்சமாவது புரிஞ்சுக்க முயற்சிக்கவேணும்.

.....''நான் எல்லோரையும் நல்லாத்தான் புரிஞ்சு வைச்சிருக்கிறன். உங்களெல்லாரால யும் தான் என் உணர்வுகளை புரிஞ்சுக்க முடியலை

''அபி........?

...''ம் உன்னாலகூடத்தான் என்னைப்புரிஞ் சுக்க முடியலை பரவாயில்லை. '' இல்லை அபி; நான் உன் நல்ல எதிர்காலத்துக்காகத் தான் சொல்றன்'' நீ அவனின் காதலை ஏற்றுக் கொண்டால் ரொம்ப நல்லா அமையும் உன் வாழ்க்கை''


...''என்ன அறிவுரையா? உனக்கொண்டு தெரியுமா, அறிவுரை என்பது விளக்கெண்ணமாதிரி. ஜெயிக்கிறது ரெம்ப ஈசி; குடிக்கிறதுதான் ரொம்பக் கஸ்டம்''

''இப்ப என்னதான் சொல்ல வாறாய்?''

''அவனையும் அவன் காதலையும் பற்றிக் கதைக்கி றதை இதோட விட்டுவிடு தீபா''

''இல்லை.... முடியாது எனக்கு இண்டைக்கு ஒருபதில் தெரிஞ்சாகணும். அவன் என்னடான்னா பின்னால முன்னால திரியிறான். நீ பாட்டுக்கு எதுவும் பேசாம மௌனமா திரியுறாய் அவனின் நண்பர்கள் என்னடான்னா அவன் பெயரைச் சொல்லி உன்னைக் கூப்பிடுறாங்க; இங்க என்ன நடக்குது அபி..? அபியின் கண்களில் இருந்து மிக வேகமாக புறப்பட்ட கண்ணீர் திவலைகள் அவள் கன்னங்களை நனைத்துக் கொண்டிருந்தது.

''அபி என் ணாச்சு? என்னை மன்னிச்சிடு; இங்க பாரு நான் உன்மேல் இருக்கிற அக்கறையிலதான் இப்பிடி





யெல்லாம் சொல் லீற்றன்; தயவு செய்து உன் மனசில என்ன இருக்கு சொல்லு; என்னட்டத் தயங்காமைச் சொல்லு அவனைப்பற்றி, அவன் காதலைப்பற்றி நீ நினைக்கிறது என்ன? சொல்லு அபி சொல்லு.

...''தீபா அவன் என்னை காதலிக்கிறானா இல்லை என்னை வருத்திறானா? எண்டே சில நேரங்களில் புரியேல்லடி''

''என்ன! அபி என்ன சொல்லுறாய் நீ''

''ஆமா... உண்மைதான் சொல்றன்; நீ சொன்னியே முன்னாலை, பின்னாலை அலையிறான் எண்டு உண்மைதான். அப்படி அலையிறதாலதான் எனக்கு அவன் மேல வெறுப்பு கூடிக்கொண்டே இருக்கு.

நான் எதிர்பார்க்கிறதெல்லாம் அவன் நினைக்கிற மாதிரியும் இப்பெல்லாம் அநேகமான பெண்கள் எதிர்பார்க்கிற மாதிரியுமான புதியவனாக அவனைப் பார்க்க முடியல்ல'' கண்ணில எந்தப் பிரச்சினையும் இல்லாம இருந்தும் போலித்தனமான அந்தக் கண்ணாடி யோட கழுத்தில செயினும் கையில மொபைல் போனையும் கொண்டு புதுமையான ஆடையணி யோட ஸ்ரைலா மோட்டார் சைக்கிள் ஓடினால்த்தான் எனக்கு அவன்மேல் காதல் வருமா? இல்லை இதெல்லாம்தான் அவனோட காதலுக்கும் வாழ்க்கைக் கும் உதவிற விசயங்களாக சொல்லு?

இதெல்லாம் பார்க்கிறப்போ எனக்கு அவன் மட்டு மில்லை அவன் காதல் கூட வெறும் போலித்தன மானது எண்டுதான் தோணுது.

அதுமட்டுமில்லை.... நீ சொன்னியே அவன்ர நண்பர்களெல்லாம் அவன் பெயரைச் சொல்லி என்னை கூப்பிடுறாங்கள் எண்டு; உண்மைதான் இவ்வளவு நாளும் ரொம்ப கண்ணியமா நடந்து கொண்ட எத்தனையோ பேர் இப்ப என்னைப் பார்க்கிற விதமே வேற. கண்ட கண்ட இடங்களிலை எல்லாம் அவன் பேரைச் சொல்லி என்னைக் கூட்பிடுறாங்க; இதெல்லாம்தான் அவன் என்னைக் காதலிக்கிற லட்சணமா சொல்லு.....?

அபியின் ஒவ்வொரு வார்த்தைகளும் அவள் ஆழ்மனதில் இருந்து அர்த்தமாய், ஆத்மார்த்தமாய்,

யோ.ரம்யா, புலோலி.

உண்மையாய் உதித்து தீபாவை நோக்கி உதிர்ந்து கொண்டிருந்தன.

தீபா மௌனமானாள்

அபி மீண்டும் தொடர்ந்தாள்.....

''காதல் எண்டா என்ன? அவன் எழுதிற கட்டுரை மாதிரியா? நண்பர்களிடமெல்லாம் காட்டிக் கருத்துக்கள் கேட்க.. அவன் எழுதிற டயறி மாதிரி அவன்தான் அதை எழுதணும்,வாசிக்கணும்....

அழகு, அறிவு, அந்தஸ்து, நாகரீகம் இதெல்லாம் கட் டாயம் தேவையில்லை ஒரு பெண்ணோட மனசுக்குள்ள இடம்பிடிக்க. அன்பும், அக்கறையும் ஒழுக்கமும் இருந்தாலே போதும்.......

......இது அவன் மேல் மட்டும் தப்பில்லை இப்ப அனேகமானோர் அவங்க காதலை வெளிப்படுத்திற விதமே இதுதான். அதுதான் பெரும்பாலும் அவங்க காதலெல் லாம் வெறும் நேரவிரயத்தோட முடிஞ்சு போயிடுது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 02.10.2011 முதல் 08.10.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்



சில விடயங்களில் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பம் அடையலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். தேக பராமரிப்பு விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அரசு தொடர்பான காரியங்கள் தடங்கலின்றி அனுகூலமாக முடியும். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கி, பாசம் அதிகரிக்கும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். நீண்ட நாள்களாக சந்திக்காத ஒருவரைச் சந்திக்க நேரிடலாம். அதே நேரத்தில், போட்டி, எதிர்ப்புகளைச் சந்திக்கலாம். பிள்ளைகள் உடல் நலன் தொடர்பான விடயங்களிலும் கவனம் அவசியம். பெண்கள் தொடர்பாண விடயங்களில், பட்டும் படாமல் நடந்து கொள்ளவேண்டும். தேவையற்ற செலவுகளால் பணப் பற்றாக்குறை உருவாகலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதிலும் சிரமம் நேரும். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். கவனம் அவசியம்.

### இடபம்



ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு, சில காரியங்களில் இறங்கி விட்டு அவதிப்படுவீர்கள். உறவினர்கள் வழியில், அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். மந்தம், மறதி, கவனக் குறைவு, சோர்வு, சோம்பல், உடல் உபாதை போன்றவற்றால் அவதிப்படலாம். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். எந்த வழியிலாவது பணம் கரைந்து கொண்டிருக்கும். ஒரு வரவு வரும் முன்னரே, செலவுகள் உருவாகிக் கொண்டிருக்கும். அதேநேரத்தில், எந்த வேலையையும் நினைத்த வேகத்துக்குச் செய்ய முடியாமல், பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். உறவுப் பெண்கள் சிலரின் சந்திப்பு நிகழும். பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். விடயங்களிலும், சகோதரர்கள், பங்காளிகள் வகையிலும் அனுகூலம் உண்டு. பணி புரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கை நிறைவேறும். பணவரவுகளைப் பெறலாம். அலைச்சல் இல்லாமல், சுலபமாக சில வேலைகளை முடிப்பீர்கள்.

### மிதுனம்



மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். திட்டமிட்ட காரியங்களில் மட்டுமின்றி, திட்டமிடாத சில காரியங்களிலும் வெற்றி காணலாம். சிலரிடம் கடனாக, கைமாத்தாக கொடுத்த பணம் திரும்ப வரும். பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில், எதுவும் கிடைக்காமல் போகலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடலாம். தேக ஆரோக்கியம், தெம்பு உற்சாகம் தரும். நினைத்த காரியங்களை எளிதாக முடித்துக் கொள்ளும் வாய்ப்பும் கிட்டும். நீண்ட தூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். உறவினர்கள், நண்பர்களுடன் ஏற்பட்ட பகை விலகி, பாசம் அதிகரிக்கும். இழுபறியாக இருந்த பத்திரப் பதிவுகள் நடக்கலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். தாயார் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். அல்லது விலை உயர்ந்த பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். யாரிடமும் பேசும் முன், ஒன்றுக்குப் பலமுறை யோசித்துப் பேசவும், அதேபோல், மற்றவர்களை நம்பி உத்தரவாதம் கொடுப்பதையும் தவிர்க்க வேண்டும். எதிர்பாராத திடீர் பணவரவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

### கடகம்



குடும்பத்துக்குத் தேவையான பொருள்கள் வாங்கவோ அல்லது குடும்ப உறுப்பினர்களின் ஆசைகளை நிறைவேற்றி வைக்கவோ, கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். சோர்வு, சோம்பலால் திட்டமிட்ட வேலைகளில் மாற்றம் செய்யலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பல நாள்களாக சந்திக்காத சிலரை, சந்திக்கும் வாய்ப்புக் கிட்டும். தொழில், வழக்கு விவகாரங்கள் அனுகூலமாகும். மருத்துவச் செலவுகள் குறைந்து, நிம்மதி பெறுவீர்கள். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த அரசு காரியம் ஒன்று, திடீரென முடிவுக்கு வரும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால், சந்தோஷம் அடைவீர்கள். சில விடயங்களில் அவசரப்பட்டு முடிவெடுத்துவிட்டு அவதிப்படலாம் என்பதால், முன்னெச்சரிக்கை அவசியம். கோபம், வேகத்தையும் குறைக்க வேண்டும். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு. புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கும். குழப்பம், தடுமாற்றம், வீண் பயம் உண்டாகும். தடுமாற்றம் நேரும். பணம் வரும். உற்சாகம் கூடும்.

### சிங்கம்



உத்வேகம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். அதேநேரத்தில், சக ஊழியர்கள், குடும்ப உறுப்பினர்கள் சிலரின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால், எரிச்சல் அடையலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். வழக்கமாகச் செய்யும் வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதம் ஏற்படலாம். பண வசதிகளுக்கு குறைவிருக்காது. தேவையான பணத்தை எந்த வகையிலாவது புரட்டிக் கொள்வீர்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். தொழில் ரீதியான ஆதாயங்கள் அதிகரிக்கும். வீட்டுக்காக வாங்க நினைத்த சில பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால், சந்தோஷம் அடைவீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வழியில், எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். அவர்கள் மூலம் கணிசமான ஆதாயம் பெறவும் வாய்ப்பு உண்டு. அதேநேரத்தில், குதர்க்கமான பேச்சுக்களை, கொஞ்சம் குறைத்துக் கொள்வது நல்லது. தேக ஆரோக்கியத்துக்காகவும், தாயாரின் தேவைகளை நிறைவேற்றவும், கணிசமான பணத்தைச் செலவிடலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களும் நேரும். சகோதரர்கள் வழியில் தொல்லைகள் உருவாகலாம். பணவரவுகளைப் பெறலாம். திட்டமிட்ட காரியங்கள் நடக்கும். அலைச்சல், திரிச்சல் உண்டு.

### கன்னி



குறைந்த செலவில் முடியும் என நினைத்த காரியங்களுக்கு, அதிகமாகச் செலவாகலாம். தர்ம, புண்ணிய காரியங்களில், நாட்டம் செல்லும். தெரியாமல் சில தவறுகளைச் செய்துவிட்டு, பின்னர் கவலை அடைவீர்கள். சந்தோஷமான அனுபவங்களால் சங்கடங்களை மறக்கலாம். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்கு கிடைக்கலாம். நிலம், பூமி தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். சகோதரர்கள் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். கடன் பிரச்சினைகளால் ஏற்பட்ட கவலைகள் மாறும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். உங்களின் ஊக்கம், உற்சாகத்தைக் குறைக்கும் சம்பவங்கள் அடிக்கடி நடக்கலாம் என்பதால், பொறுமை அவசியம்.பகட்டான ஆடை, ஆபரணங்கள் வாங்குவது, அணிவது, மற்றவர்கள் மத்தியில் உங்களை முக்கியஸ்தர்கள் போல காட்டிக் கொள்வதில் நாட்டம் செல்லும். செலவு கூடும். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். பணவரவுகளைப் பெறலாம்.

### துலாம்



ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பால், உள்ளம் மகிழ்வீர்கள். உங்களுக்குப் பிடித்தமான பொருள்களை, நண்பர்கள், சக ஊழியர்கள் கொடுக்கலாம். போட்டி, எதிர்ப்புகளைச் சந்திக்கலாம். திட்டமிட்டதைவிட, சில விடயங்களுக்கு அதிகமாகச் செலவாகலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். தந்தை, தாயார், மணைவி வழி உறவுகள், மாமன், மைத்துனர்கள் போன்ற வகையில் செலவுகளைச் சந்திக்கலாம். வாகனங்கள் வழியிலும் செலவுகள் உருவாகலாம். உங்களைப் பயன்படுத்தி மற்றவர்கள் காரியம் சாதிக்கலாம். அரசியல்வாதிகள் தேவையற்ற அலைச்சல்களுக்கு ஆள்படலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் நெருக்கடிகளுக்கு ஆட்படலாம்.பத்தாம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், வேலைப்பளுவுக்கு குறைவிருக்காது. சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நிலம், பூமி தொடர்பான விடயங்கள் இழுபறிக்குப் பின்னர் முடிவுக்கு வரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில் இழுபறிகள் நேரும். அவசரப்பட்டு யாருக்கும் உத்தரவாதம் தர வேண்டாம். ஊக்கம், உற்சாகம் கூடும். பணம் வரும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும்.

### விருச்சிகம்



வழக்கத்துக்கு மாறாகக் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். சிலரிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்ப வரலாம்.உறவினர்கள் சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். மலையாக இருந்த சில பிரச்சினைகள் எளிதில் முடிவுக்கு வரும். பணவரவுகளைப் பெறலாம். தொழில், வியாபார ரீதியான வருமானம் அதிகரிக்கும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். பழைய நண்பர்கள் மூலம், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறைகாட்ட வேண்டியது அவசியம். நிலம், பூமி தொடர்பான விடயங்கள் எளிதில் முடிவடையாமல் இழுத்தடிக்கலாம். இருப்பினும், தந்தை உடல் நலன் தொடர்பான விடயங்கள், பூர்வீக சொத்துக்கள் தொடர்பான வகையில் பிரச்சிணைகள் வராமல் இருக்க எச்சரிக்கை அவசியம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மருத்துவச் செலவுகள் நேரும். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். உதிரி வரவுகள் வரலாம்.

### தனுசு



சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். குடும்ப உறுப்பினர்கள் வழியில் மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். உங்களுக்கு வேண்டிய காரியத்தைச் சாதிக்க நண்பர்களை நச்சரிப்பீர்கள். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். நல்ல செய்தி கேட்கலாம். எந்த வேலையையும் பின்னர் செய்யலாம் எனத் தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். மற்றவர்களுக்காக சில காரியங்களை ஏற்றுச் செய்வீர்கள். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி அவர்கள் மூலம் ஆதாயம் பெறலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். அவர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். இருந்தாலும், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள் போன்றவற்றால் பணம் கரையலாம். வாகனங்கள் வழியில் செலவுகள் நேரும். சகோதரர்கள், பங்காளிகள், சகலைகள் தொடர்பான வகையில் எச்சரிக்கை அவசியம். பிள்ளைகள் வழியிலும் திடீர் செலவுகள் நேரும். வாகனங்களில் செல்லும் போது அதிக வேகத்தைத் தவிர்க்க வேண்டும். லாபகரமான பணவரவுகளைப் பெறலாம். விருந்து, விசேடங்களால் சந்தோஷம் உண்டு. திடீர் பயணம் செல்லலாம்.

### மகரம்



திட்டமிட்ட வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சிலர் உங்களின் மனம் நோகும் வகையில் பேசலாம். புதிய அனுபவங்களைப் பெறலாம். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம். உடல்நலம் இல்லாமல் இருக்கும் உறவினர்கள் சிலரைப் பார்க்கலாம். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். கணவன் மனைவி உறவில் அடிக்கடி சிறு, சிறு சச்சரவுகள் உண்டாகலாம். கோபம், வேகத்தை அதிகரிக்கும் சம்பவங்கள் அடிக்கடி நடக்கலாம். எந்த வேலையையும் எளிதாக முடிக்க முடியாமல் சிரமப்படலாம். நிலம், பூமி தொடர்பான விடயங்களில் இழுபறிகள், அதிருப்தி காணப்படும். சகோதரர்கள் வழியில் தண்டச் செலவுகள் நேரலாம். உடல் ரீதியான உபாதைகளைத் தவிர்க்க, உடல் நலத்தில் கவனம் அவசியம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால், சந்தோஷம் அடைவீர்கள். பெண் பிள்ளைகளின் நீண்ட நாள் கோரிக்கை ஒன்றை, நிறைவேற்றி வைப்பீர்கள். தடைப்பட்ட பணவரவுகள் வரலாம். பெரிய மனிதர்கள் நல்ல யோசனை சொல்வர். காரிய வெற்றி உண்டு. குடும்பத்தில் குதூகலம் குடிகொள்ளும். பணம் வரும். கடன் வசூலாகும்.

### கும்பம்



அடுக்கடுக்காகப் பல வேலைகள் குவிந்தாலும், அனைத்தையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். சிலருடன் சேர்ந்து கூட்டாக மேற்கொண்ட முயற்சிகளில், வெற்றி கிடைக்கும். எந்தக் காரியத்தைச் செய்யும் முன்னரும், ஒன்றுக்குப் பலமுறை யோசித்துச் செய்ய வேண்டும். வீண் பிடிவாதங்களால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் வரும். சகோதரர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். அவர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். மற்றவர்கள் செய்யத் தயங்கும் சில வேலைகளை, நீங்கள் துணிச்சலாகச் செய்வீர்கள். தந்தையுடன் முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள், அவர் வழியில் மருத்துவச் செலவுகள் உருவாகலாம்.திட்டமிட்ட நேரத்துக்கு எந்த வேலையையும் செய்ய முடியாமல், பிரச்சினை உருவாகலாம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள் போன்றவற்றால், சந்தோஷம் அடைவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். காரிய வெற்றி உண்டு. நல்ல செய்தி கேட்கலாம்.

### மீனம்



எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள். பிரியமான நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பு நிகழும். மலையாகக் குவிந்த வேலைகளையும், அசராமல் செய்து முடிப்பீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில், பொழுதுபோக்கு விடயங்களில் பங்கேற்கலாம். வாழ்க்கைத் துணைவர் உடல் நலன் பற்றிய கவலைகள் ஏற்படும். உறவுப் பெண்கள் சிலரின் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம்.பெண்கள் பிறந்த வீட்டு வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப் பது தள்ளிப்போகும். மாற்று மதத்தினர் வழியில் உதவிகள் கிடைக்கும். அவர்கள் மூலம் சில வேலைகளை முடித்துக் கொள்ளலாம். குழப்பங்கள், வெறுப்பு, விரக்தி அடிக்கடி ஆள்கொள்ளும். பிள்ளைகள் பற்றிய கவலைகளும் உண்டாகலாம்.கடன் பிரச்சினைகளை நினைத்து, கவலை அடைவீர்கள். பொலிஸ் தொடர்பான விடயங்களில், எச்சரிக்கை அவசியம். தொழில் ரீதியான விடயங்களில், அடிக்கடி அதிருப்தி, ஆதங்கம் ஆள்கொள்ளும். பொறுமை, நிதானம் அவசியம். தண்டச் செலவு நேரும். மறதியால் அவதியுண்டு. எதிர்பாராத சம்பவங்கள் நடக்கும்.

# ஆமையின் கோபம்

ஒரு குளத்தில் ஆமை ஒன்று வசித்து வந்தது. அதே குளத்தில் இரண்டு அன்னங்களும் இருந்தன. இந்த மூன்றும் நல்ல நண்பர்களாக இருந்தன. இவர்களின் நட்பு பல ஆண்டுகள் நீடித்தன.

நாட்டிலே மழை இல்லை. அதனால் குளம், குட்டைகள் வற்றத் தொடங்கின. எல்லோரும் மழைக்காக ஏங்கத் தொடங்கினர். இந்த மூன்று நண்பர்களும் வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். வானத்தில் மேகம் சூழாதா என்று கழுத்து வலிக்க அன்னாந்து பார்த்ததுதான் மிச்சம்.

ஒரு நாள் அன்னங்கள் இரண்டும் தங்களுக்குள் விவாதம் செய்தன. அதில் ஓர் அன்னம் கூறியது; ''இந்தக் குளம் வற்றிவிடும் போல் இருக்கிறது. நம்மால் நீரில்லாத குளத்தில் வசிக்க முடியாது... வேறு குளத்தையோ, குட்டையையோ தேடிப்போக வேண்டியதுதான்'' அதற்கு மற்றொரு அன்னம், ''ஆமையும் நாமும் நண்பர்களாக வாழ்ந்தோம். அதன் கருத்து என்னவென்று கேட்போம்'' என்றது.

ஆமையிடம் சென்றன. வயதில் மூத்த அன்னம் தங்களது திட்டத்தைப் பற்றி எடுத்துக் கூறியது. எல்லாவற்றையும் கேட்டுக் கொண்ட ஆமைக்கு வருத்தம் ஏற்பட்டது.

''நான் தண்ணீர் இருந்தால் வாழ முடியும்... தண்ணீர் இல்லாவிட்டால் இறந்து போவேன். நீங்கள் என்னை விட்டுப் போய்விட்டால் என் கதி என்ன? சீக்கிரமே இறந்து விடுவேன்... எனக்கும் சேர்த்து ஒரு வழி சொல்லுங்கள்'' என்றது ஆமை.

மூன்றும் யோசித்தன. ஒரு வழியும் தோன்றவில்லை. நாள்கள் பல சென்றன. ஒருநாள் ஆமையே ஒரு வழியைக் கூறியது.



''நான் ஒரு கழியின் மையப் பகுதியைக் கவ்விப் பிடித்துக் கொள்ளுகிறேன். நீங்கள் அந்தக் கழியின் இருமுனைகளையும் பிடித்துக் கொண்டு பறந்தால் வேறு குளத்துக்குப் போகலாம்'' என்றது ஆமை. ''இது நல்ல யோசனை... ஆனால் நீ எந்தக் காரணத்தைக் கொண்டு வாயைத் திறந்துவிடாதே... வாயைத் திறந்தால் நீ கீழே விழ வேண்டியதுதான்'' என்றது அன்னம்.

அதற்கு ஆமை, ''நான் வாயைத் திறக்கவே மாட்டேன்'' என்று உறுதி கூறியது. திட்டத்தின் படியே ஆமை ஒரு கழி யின் மையப் பகுதியை கடித்தபடி இருக்க, அன்னப் பறவைகள் இரண்டும் அதன் இரு முனைகளையும் பிடித்தபடி பறந்து சென்றன. இந்த வேடிக்கையைப் பார்த்த மக்கள் சிரித்தார்கள்.

அதில் ஒருவன், ''இது என்ன கோமாளித்தனம்? இப்படியும் ஒரு விளையாட்டா?'' என்றான்.

அவனது பேச்சைக் கேட்ட ஆமைக்குக் கோபம் வந்தது. வெகு நேரமாகக் கழியைக் கல்விப் பிடித்திருந்ததால் சிரமப்பட்டுக் கொண்டிருந்த ஆமை, பொறுமை இழந்து போனதால் அதன் கோபம் மேலும் அதிகரித்தது.

அதனால் ஆத்திரமடைந்தது. ''அடுத்தவரைப் பார்த்துக் கேலி செய்ய வேண்டாம்'' என்று வாயைத் திறந்து கூறியது. அடுத்தகணம், பாவம், அந்த ஆமை தடாலெனக் கீழே விழுந்தது.

எதற்குக் கோபம் கொள்வது, எந்தச் சமயத்தில் கோபப்படுவது என்பதை அறியாமல் செய்ததால் ஆமையின் உயிர் போய்விட்டது. இதனால் அன்னங்கள் இரண்டும் வருத்த தோடு வேறு குளத்துக்குச் சென்றன.

நிஷா

## இரத்த ஓட்டத்தைக் கண்டுபிடித்தவர்



1578 முதல் 1657 வரை வாழ்ந்த ஆங்கில மருத்துவ விஞ்ஞானியான வில்லியம் ஹர்வி என்பவர் மனித உடலில் குருதி பாயும் வழிமுறைகளை நீண்ட நாள்களாக அவதானித்து வந்தார். நவீன கருவிகள் இல்லாத காலத்தில் இதயம், நாளம், நாடி வழியாக குருதி ஒரே திசையில் பாய்கின்றது என்றும் இதயத்திலும் நரம்புகளிலும் ஒரு வழி வால்வுகள் இருப்பதாகவும் அது எதிரெதிர் திசைகளில் இரத்தம் பாய்வதைத் தடுகின்றது என்றும் கண்டறிந்தார்.

நரம்புகளும் சிறு சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதாகவும் ஹர்வி நம்பினார். தனது கருத்துக்களை 1628 ஆம் ஆண்டு புத்தகமாக எழுதி வெளியிட்டார். ஆரம்பத்தில் அதைப் படித்தவர்கள் இந்தக் கருத்துக்களை நம்பவில்லை. அதன் பின்னர் இவர் கூறியது சரியென்பதை இத்தாலிய உடற் கூறு வல்லுநரான மார்செல்லோ மார்பிசி என்பவர் நுணுக்குக் காட்டியின் மூலம் நிரூபித்தார்.

ச.கௌசிகா, தரம்-9A
யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.

## சூறாவளி

தென்றலாய் வந்த நீ
புயலாய் மாறிய காரணம் என்ன?
காற்றாய் வந்து நாம் சுவாசிக்க உதவி செய்த நீ
இன்று எமது மூச்சைப் பறித்து உயிரை காவிச் செல்கிறாயே

கவிதையாய் வந்து என்னை
தழுவுவாய் என்று பார்த்தேன்
சுறாவளியாய் வந்து நம்
வீடுகளைத் தூக்கி வீசியது ஏனோ

உயிர்களின் பெறுமதியை அறிந்தே நீ
எமக்குச் சுவாசிக்கக் காற்று தந்தாய்
உயிர்களின் பெறுமதியை நீயே மறந்து
உயிரை காவிச் செல்கிறாயே ஏன்

காற்றே நீ புயலாக மாறுவது ஏன்
தென்றலாகவே இருந்துவிடு
அனைவரது வீட்டிலும் சந்தோஷம் பிறக்கும்
மகிழ்வாக வாழ்வார்கள் தென்றலே

ச.அருள்வாணி
தரம்–9
யா/இணுவில் மத்திய கல்லூரி.

## எழுதியவர்கள்

- ஆத்தி சூடி-ஔவையார்
- நளவெண்பா-புகழேந்திப்புலவர்
- பெரியபுராணம்-சேக்கிழார் சுவாமி
- கந்தபுராணம்-கச்சியப்ப சிவாச்சாரியார்
- திருவிளையாடல்-பரஞ்சோதி முனிவர்
- இராமாயணம்-வான்மீகி முனிவர்
- திருக்குறள்-திருவள்ளுவர்
- சீறாப்புராணம்-உமறுப்புலவர்
- திருப்புகழ்-அருணகிரிநாதர்
- சத்தியசோதனை-மகாத்மாகாந்தி
- பாஞ்சாலிசபதம்-பாரதியார்
- மகாபாரதம்-வியாசர்
- சிலப்பதிகாரம்-இளங்கோவடிகள்
- பகவத்கீதை-வேதவியாசர்
- நற்சிந்தனை-யோகர் சுவாமிகள்.



சா.பபிதா, தரம் 8A
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தி.

## சிறுவர் தூரிகை



ஆர்.சாரங்கன், தரம் 8,
யா/இந்துக் கல்லூரி.



கா.லவராஜ், தரம் 5
யா/செட்டித்தெரு மெ.மி.த.க.பாடசாலை.



கே.டன்சியா,
கி/வேரவில் இந்து மகா வித்தியாலயம்.




இ.ஹரிலக்ஷன், தரம் 8ஏ,
யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தி.



ப.ஜெயலக்ஷன், தரம் 5
யா/செட்டித்தெரு மெ.மி.த.க.பாடசாலை



கி.சோபிதா, தரம் 8பி
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

## விடை தெரியுமா? 127

### உங்களுக்கும் பரிசில்கள்

1. ஒலி வாங்கியின் ஆங்கிலப் பெயர் என்ன?
2. இலங்கையை எல்லாள மன்னன் எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தான்?
3. காலை 8 மணிக்கு பூக்கும் பூ எது?
4. எவரெஸ்ட் சிகரத்துக்கு பெயர் இட்டவர் யார்?
5. தமிழகச் சித்தர்கள் எத்தனை பேர்?

### விடைகள் 125

1. ஈரல்
2. பேர்லின்
3. கடற்கரைச் செடி
4. இந்தியா
5. 1945 ஆம் ஆண்டு.

### வெற்றி பெற்றோர் விவரம்

★ ச.ஐஸ்வர்யா தரம்-8 கே, யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி.
★ ப.யாழினி தரம்- 8 கே, யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி.
★ சி.லதாங்கி தரம் - 2, யா/காசிநாதர் வித்தி கரவெட்டி.
★ இ.நிரோஜா தரம்- 9 , உடுவில் மகளிர் கல்லூரி.

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 8.10.2011 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.


உதயன்
02 ஒக்ரோபர் 2011 ஞாயிற்றுக்கிழமை



# "அச்சப் பிராந்திய இரவுப் பிரகடனம்"

என்னைப் பேசவிடுங்கள்
இனிமேலும்
எனது பேனாவை
வைத்துக்கொண்டு
உள்ளே குமுறிக் கொண்டிருக்கும்
உணர்வுகளை பொசுக்கிவைத்து
"அடை" காத்திட முடியாது
அறியப்படாத வாழ்வில்
அறியப்பட்டுக் கிடக்கின்ற
பயங்கரங்களை மாத்திரமே
ஒவ்வொருவரது மனங்களும்
சுமந்துகொண்டிருக்கின்றன
நிகழ்வெளி எங்கினும்
நிகழ்ந்துகொள்ளும் - கொடிய
நிகழ்வுகள் யாவும்
பயங்களை மாத்திரமே
பரிசளித்துக் கொண்டிருக்கின்றது
உருப்பெறாத எச்சங்கள்
ஒருபுறமாய் எமைவதைக்க
உருப்பெற்ற அச்சங்கள்
எம்மைப் பின் தொடர்கின்றன
இந்த இரவுகளுக்குத் தன்னிலும்
எம்மில் இரக்கமில்லையா?
தலையணைகள் எல்லாம்
மகிழ்வெளிகளில்
நீந்திக் கொண்டிருக்கின்றன
தங்களுக்கு இப்போதைக்கு
வேலைகள் இல்லை என்றால் போல
நடுநிசியில் நிசப்தத்தையே தகர்த்தபடிவரும்
அச்சம் நிரம்பிய மொழிகள்
அச்சப்படுத்திக் கொள்கின்றன
ஒவ்வொரு இராக்களையும்
இரண்டு சாமப் பொழுதுகளும்
ஒரு சாமமாகத்தான்
கழிந்து கொண்டிருக்கின்றது
உண்மைகள் புரிந்தும்
புரியப்படாமல் கிடக்கின்றன
எம் சான்றாதார
வாதங்கள் எல்லாம்
"பூதங்களிடமும்" தோற்றுப் போகின்றன
இப்படியே கழிந்து கொண்டிருக்கும்
ஒவ்வொரு இராக்களும்
எங்களுக்காக மட்டும்
"அச்சப் பிராந்திய இரவுகளாக"
பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றதோ...?

- வெற்றி. துஷ்யந்தன்



# நித்தம் எதிர்கால ஏக்கம்

கொல்லைக் கொடுரத்தால் அள்ளுண்டு அடிபட்டு
தள்ளாடி தலை சாய்ந்த தங்கள் சொந்தங்களை
செல்லாக் காசாக சென்றவழி வீழ விட்டு
அல்லலுடன் கரையடைந்தோர் அன்றாடம் அழுகின்றார்

அன்புக்கு உரியோரைக் காலன் நெரித்தி மூக்க
இன்னலுடன் இறந்தோர்க்கு ஈமக்கடன் இல்லையென்று
துன்பத்தின் மண்டபத்துள் மௌனத்தால் மேடையிட்டு
கண்ணீரால் மலர் தூவி கடமையினைச் செய்கின்றார்

நித்தம் எதிர்கால ஏக்கத்தில் ஆழ்ந்து
நித்திரையை, பசியை, நிம்மதியை தொலைத்து
கிடைத்த தலையிடியும் உடல்வலியும் வருத்த
சகதியின்றிச் சாய்ந்து சஞ்சலத்தில் துஞ்சுகின்றார்

உறவுகளை ஊர்மனையை உதிர விட்டு ஊறுபட்டு
உறங்குதற்கு, உண்பதற்கு, உடுப்பதற்கு உரிய வழியின்றி
குறைகளைச் சுமக்கும் குடிமக்கள் சோகமதை
இறைவா நீ அறியாயோ இடர் தீர்த்து அருளாயோ?

க.அருணைநாயகம்,
குளப்பிட்டி,

# விடை  பெறுகிறேன்...

இன்று வரை
இன்பமாய் உங்களுடன்
இருந்ததைப் போல்
என்றுமே நான் இருந்ததில்லை...
இன்பங்கள் கூட
என்னை வஞ்சிக்க நினைக்கையில்
இணைந்திருப்பது
இணையில்லையே...
அதனால் பிரிந்து
செல்கிறேன் உங்கள்
நினைவுகளுடன்...
மீண்டும் ஒரு ஜென்மத்தில்
இந்தப் பூமியில்
வீசும் தென்றலாய்
உங்களைச் சந்திக்கிறேன்...
எங்காவது சந்திக்க நேர்ந்தால்
சந்திக்கிறேன்...
எங்கோ எப்போதாவது
தொலைவில் நின்றாவது
உங்களைச் சந்திக்கிறேன்...
அதுவரை சிந்தையுடன்
எம் சொந்தங்கள்
என்றுமே நிலைத்திருக்கும்

எஸ்.செந்துஜா,
மட்டுவில்.

# சீதனக் கொடுமை

மாடாய் உழைத்து- மகளுக்கு
மணமுடிக்க ஓடாய்த் தேய்ந்து
ஒரு மனிதன் வீடொன்றை
மாடியுடன் கட்டிய பின்
மாப்பிள்ளை பார்ப்பதற்காய்
ஓடுகின்றான் ஓய்வொழிச்சல் இன்றி

கட்டழகு மேனியும்- கற்புடனே
நற்குணமும், நன்னெறியும்
பட்டப்படிப்பும் பதவியும்- கட்டாக
வேதனமும் மாதாந்தம் வேறாகப்
பெற்றிருந்தும்- சுளையாக
சீதனமும் கேட்கிறான்

பத்தரை மாற்றுப் பசும்பொன்
போன்ற பெண்ணுக்கு
பத்தேக்கர் நெற்காணி
பால் மாடும் -சொத்தாக
ஆதனமும் தந்தும் அரைக் கோடி
பணமாகச் சீதனமும்
கேட்பானேன்... சொல்?

முற்போக்கு வாலிபர்காள் முன்
வாரீர்-நீவிரெல்லாம்
தற்கால மாதிரியை
தகர்த்தெறிவீர்- பொற்காலம்
பெண்ணினம் பெற்று பெரு
வாழ்வு வாழ்ந்திடவே
பண்ணிடுங்கள் வதுவைத்
துணிந்து...
இனி யொரு விதி செய்திட
வாரீர் வாலிபர்காள்- பெரு
வாழ்வு வாழ்ந்திடுவீர்!




ந.சசிரேகா,
கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்,

# ஓங்கி ஒலிக்கும் ஊருக்கு உபதேசம்

ஞாயிறு காரம்

சந்திரசேகர ஆசாத்

**தமிழ் மக்களின் சாதாரண அடிப்படை உரிமைகளைக் கூட வழங்க மறுக்கும், அப்படி வழங்கப்படும் கோரிக்கைகளைப் பயங்கரவாதம் என்றோ அந்நியத் தலையீடுகள் என்றோ குற்றம் சாட்டும் மஹிந்த ராஜபக்ஷ பாலஸ்தீன மக்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டும் எனவும் கோரியுள்ளார்.**

ஒரு சமூக சேவகர், மனிதர்கள் பிறர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது என்பது பற்றி உதாரணங்களுடன் வெகு அழகாக விளக் கிக் கொண்டிருந்தார். அவரின் மனைவி உட்பட அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருமே இனிப் பிறர் பொருளுக்க ஆசைப்படுவதில்லை என முடிவெடுக்கும் அளவுக்குப் பிர சங்கம் வெகு சிறப்பாக அமைந்திருந்தது.

வீட்டுக்குச் சென்ற பின்பு ஏற்கனவே களவாகப் பிடித்து அடைத்து வைத்திருந்த அடுத்த வீட்டுச் சேவலை மனைவியிடம் கொடுத்துக் கறி சமைக்கும் படி அதே பிரசங்கி கூறினாராம். மனைவி ஆச்சரியத்துடன் பிறர் பொருளுக்கு ஆசைப்படக்கூடாது என அவர் போதனை செய்ததைப் பற்றிக் கேள்வி எழுப்பினாளாம். அவர் மெல்லச் சிரித்தவாறே ''மண்டு! ஊருக் கல்லோடி உபதேசம்; உனக்கும் எனக் கும் இல்லையடி'' என்று சொன்னாராம்.

**மஹிந்தவின் உரை எப்படியிருந்தது?**

இது சில வேஷதாரிகளை நையாண்டி செய்வதற்குத் தமிழ் மக்கள் மத்தியில் கூறப்படும் ஒரு பழங்கதை. அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜாபக்ஷ உரையாற்றிய போது இந்தக் கதை ஞாபகத்துக்கு வந்து நின்றது.

அவரது நீண்ட உரையின்போது அவர் குறிப்பிட்ட சில விடயங்கள் ஊருக்கு மட்டும் உபதேசம் என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

''ஒவ்வொரு நாட்டுக்கும் தனித்துவமான சமூக, மத மற்றும் கலாசார அடையாளங்கள் காணப்படுகின்றன. அவற்றுக்குக் குந்தகம் ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடக்கூடாது. மனித உரிமைகள் என்ற பேரில் நாடுகளின் தனித்துவமான அடையாளங்களில் தலையீடு செய்வதோ மற்றும் மத கலாசார விவகாரங்களில் தலையீடு செய்வதோ ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல'' என்று தெரிவித்த இலங்கை ஜனாதிபதி, பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்க வேண்டும் எனவும் அங்கு வலியுறுத்தியிருந்தார்.

வடக்குக் கிழக்கில் தான் பாலாக மழை பொழிய வைத்தது போல வும் அங்குள்ள ஆறுகள், குளங்கள், கிணறுகள் எல்லாவற்றிலும், தான் தேன் ஊற வைத்தது போலவும் வடக்கு, கிழக்கு மக்கள் உபரிகைகளில் நின்று சுகந்தம் வீசும் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பது போலவும் அங்குள்ள குறைந்தளவு படையினர் மக்களுக்கு கைகட்டிப் பணிபுரிகின்றனர் என்பது போலவும் ஜனாதிபதி தனது உரையில் ஒரு தோற்றப் பாட்டை வெளிக் காட்டியமை பற்றி நாம் இங்கு விமர்சிக்க முயலவில்லை. எப்போதுமே அவர் சர்வதேசமேடைகளில் உண்மையிலிருந்து வெகு தொலைவில் நின்றே உரையாற்றுவதை நாமும் அறிவோம்; உலகமும் இதனை நன்கு அறியும்.

**உண்மைகளை வெளியே கொண்டு வருவோர் நிலை**

அவரது கூற்று மாறாக யாராவது உண்மைகளை ஆதாரபூர்வமாக வெளிக் கொண்டு வந்து விட்டால் அவர்கள் புலிகளிடம் பணம் வாங்கிக் கொண்டு பிரசாரம் செய்கிறார் கள் எனக் குற்றம் சாட்டப்படுவதையும் உலகம் அறியும்.

ஆனால் நாம் இங்கு கவனத்தில் எடுப்பது ஒரு நாட்டின் சமூக, மத, கலாசார விழுமியங்கள் மீதான அந்நியத் தலையீடுகள் தொடர்பான அவரின் எதிர்ப்புக் குரல் தொடர்பான நியாயத் தன்மையைப் பற்றிய விடயங்களாகும்.

இலங்கையில் வாழும் தமிழ் மக் கள் ஒரு தேசிய இனம் என்பதும் அவர்களுக்கெனத் தனித்துவமான சமூக, மத, கலாசார அடையாளங்கள் உண்டு என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும். இலங்கையில் தமிழ் மக்கள் கிறிஸ்துவுக்கு முன்பு ஐந்தாம் நூற்றாண்டிலேயே நாகரிகம் உள்ள ஒரு சமூகமாக வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை அண்மைக் காலத்தில் கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நகரங்கள் கட்டி அமைக்கப்பட்டமை, கடல் வணிகம் மேலோங்கியிருந்தமை போன்றவற்றுக்கான தொன்மை ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இராமாயணம் என்ற தொன்மை வாய்ந்த இலக்கியம் இலங்கையில் திராவிட சமூகத்தினர் மத்தியில் முன்னேறிய நகர அமைப்புகள் உருவாக்கப்பட்டமையும் அடிமை, ஆண்டான் சமூக அமைப்பு உருவாகுமளவுக்கு முன்னேறியிருந்தமையையும் அந்தப் படையெடுப்புப் பற்றியும் தெளிவுபடுத்துகிறது.

**நியாயமான கோரிக்கை**

சிங்கள இனத்தின் சமூக, மத, கலாசார விழுமியங்களுக்குக் குந்தகம் ஏற்படுத்தக் கூடாது என்ற ஐ.நா. கூட்டத் தொடரில் அவரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை முழுமையிலும் நியாயமானது. அதைத் தவறு என எவருமே கூறிவிட முடியாது. ஆனால் அவர் மனித உரிமைகளின் பெயரால் நாட்டினதோ, இனத்தினதோ தனித்துவமான அம்சங்கள் மேல் தலையீடு செய்வதை அனுமதிக்க முடியாது என அவர் கூறியதை எம்மால்விளங்கிக் கொள்ள முடியவில்லை.

அதாவது மனித உரிமைகள் என்பன சிங்கள மக்களின் இன, சமூக, மத, கலாசார விழுமியங்களுக்கு விரோதமானவையா என்ற கேள்வியையே அவரின் கருத்துகள் எழுப்புகின்றன. உண்மையிலேயே தமிழ் மக்களின் சமூக, மத கலாசாரங்கள் மீது சிங்கள மேலாதிக்க சக்திகளால் இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே ஒரு போர் தொடுக்கப்பட்டு வந்தது. எனவே தமிழ் மக்கள் முதலில் தமது அடையாளங்களைப் பாதுகாக்க சாத்வீக வழியில் போராடினர். அந்தப் போராட்டங்கள் ஆயுத வன்முறைகள் மூலம் அடக்கப்பட்டன. ஆயுதத்தைத் தொட்டுக் கூடப் பார்க்காத பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் பலி கொள்ளப் பட்டனர்.

எனவே பிரிந்து போவதை விட வேறு வழி இல்லையென்ற முடிவுக்கு வரவேண்டிய நிலை தோற்றுவிக்கப் பட்டது. அடக்குமுறை ஆயுதவன்முறைக்கு எதிராக விடுதலை ஆயுத வன்முறை வெடித்தது.

அதாவது ஆயுதப் போராட்டம் என்பது திடீரென வெடித்த ஒரு பூகம்ப மல்ல. எமது இன, மத, கலாசார விழுமியங்களை அழிவிலிருந்து பாதுகாக்க நாம் நடத்திய போராட்டங்களின் பரிணாம வளர்ச்சி. அது ஆனால் அந்த உரிமைப் போராட்டம் பயங்கரவாத நாமம் சூட்டப்பட்டு சர்வதேச ஒத்துழைப்புடன் தோற்கடிக்கப்பட்டது.

இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளைத் துடைத்தழிப்பதிலும் தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளை நசுக்குவதிலும் வேறு எந்த ஒரு சிங்களத் தலைவர்களையும்விட தீவிரமாகச் செயற்பட்டவர். சாதாரண தமிழ் மக்களின் உயிரழிவைப் பற்றிக் கவலையின்றி மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதித்துப் போரை வெற்றி கண்டவர்.

போர் முடிந்த பின்பும் தமிழ் மக்களின் சமூக, மத, கலாசார விழுமியங்கள் மேல் தொடர்ச்சியான போரை நடத்தி தமிழ் மக்களின் இனத் தனித்துவத்தை அழிக்க முனைப்புடன் செயற்பட்டு வருகிறார்.

**பறிக்கப்பட்டுள்ள தமிழர் பிரதேசங்கள்**

தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பல பிரதேசங்கள் இராணுவ முகாம்களாகவும் உயர் பாதுகாப்பு வலயங்களாகவும் மாற்றப்பட்டுவிட்டன. இவற்றில் இன்றுவரை அவர்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலுமே தொடர்ந்து பல இன்னல்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இவற்றில் முள்ளிவாய்க்கால் போன்ற இடங்களைச் சொந்தக் கிராமங்களாகக் கொண்டவர்கள் கூட வேறு பிரதேசங்களில் குடியேற் றப்படுகின்றனர். விவசாயம் செய்யப்பட்ட வளமான நிலங்கள், மீன்பிடித் தொழிலில் செழிப்புற்றிருந்த கடற்கரைக் கிராமங்கள் எனப் பல பகுதிகள் தமிழ் மக் களிடமிருந்து நிரந்தர மாகவே பறிக்கப்படுகின்றன. அனல் மின் நிலையம் என்ற பெயரில் சம்பூர் மக்களின் பரம்பரை பூமி பறிக்கப்பட்டு விட்டது.

சுற்றுலா அபிவிருத்தி என்ற பேரில் குச்சவெளி நிலங்கள் வெளி நாட்டு நிறுவனங்களுக்கு விற்கப்படு கின்றன. கொக்கிளாய், கொக்குத் தொடு வாய், தனிக்கல்லு, பட்டிக்குடியிருப்பு போன்ற பிரதேசங்களில் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்ட நிலையில் சிங்களவர்களுக்கு விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வழங்கப்பட்டு விட்டது. இவ்வாறே கொக்கிளாய் தொடக்கம் சுண்டிக்குளம் வரையான கரைவலை மீன்பிடி உரிமை தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டது.

**மஹிந்த அரசின் கொடூரத் தலையீடுகள்**

அதாவது தமிழ் மக்களின் குடியிருப்பு, பொருளாதார, வாழ்வியல் எனப்படும் சமூக விழுமியங்கள் மீது மஹிந்த அரசின் பூரண அனுசரணையுடன் கொடூரமான தலையீடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதாவது பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்த சமூக விழுமியங்கள் அழிக்கப்படுகின்றன.

இவ்வாறே வடக்கு, கிழக்கில் ஒரு புத்த மதத்தவன்கூட வாழாத இடங்களில் கூட பௌத்த விகாரைகளும் புத்தர் சிலைகளும் உருவாக்கப்படுகின்றன. எமது சொந்த வழிபாட்டு முறைகளான இந்து, கிறிஸ்தவ முறைகளுக்கு அப்பால் பௌத்த மதம் எம்மேல் திணிக்கப்படுகிறது.

இதேவேளை, எமது பாரம்பரிய வழிபாட்டு முறைகள் மீது செய்யப்படும் தலையீடுகள் எமது மத விழுமியங்களையே அழிக்குமளவுக்கு விஸ்வரூபம் எடுத்துவிட்டன. அண்மையில் சிலாபம் பத்திரகாளி அம்மன் கோயிலில் மிருகபலி மேற்கொள்ளப்படவிருந்த சமயத்தில் அங்கு வந்த அமைச்சர் மேர்வின் சில்வா அங்கிருந்த மிருகங்களை அள்ளிச் சென்றுவிட்டார்.

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு என்ற வகையில் மேர்வின் சில்வாவின் நடத்தைக்குப் பதில் கூற வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் உண்டு. அதுமட்டுமன்றி அனுராதபுரத்தில் 500 ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஒரு முஸ்லிம் தர்க்கா புத்த பிக்குகள் தலைமையில் வந்த ஒரு கூட்டத்தால் இடித்து அழிக்கப்பட்டது.

சுற்றுலா அபிவிருத்தி என்ற பேரில் வடக்கு, கிழக்கின் பகுதிகளிலும் முளைத்து வரும் சுற்றுலா விடுதிகளும் களியாட்டு மையங்களும் எமது பாரம்பரிய கலாசாரத்தின் மீது பெரும் தாக்குதலைத் தொடுக்க ஆரம்பித்துள்ளன. தென்னிலங்கையிலிருந்து பாலியல் தொழிலுக்கெனப் பெண்கள் இங்கு கொண்டு வரப்படும் ஒரு கேவலமான நிலைகூட உருவாகி வருகிறது. அதாவது நாம் பாரம்பரியமாகப் பேணிவந்த எமது கலாசார விழுமியங்களைச் சிதைக்கத் திட்டமிட்ட வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கலாசார விழுமியங்களை சிதைக்கும் நடவடிக்கை**

ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு நாட்டின் சமூக, மத மற்றும் கலாசார விழுமியங்கள் மீது தலையீடு இருக்கக் கூடாது என உரத்துக் குரலெழுப்பிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்நாட்டில் வாழும் தமிழ் , முஸ்லிம் மக்களின் சமூக, மத, கலாசார விழுமியங்கள் மீது தலையீடு செய்வது மட்டுமன்றி அவற்றைச் சிதைக்கும் கொடுமையிலும் ஈடுபட்டு வருகிறார்.

அதாவது ஊருக்குத்தான் உபதேசம் உனக்கும் எனக்கும் இல்லை என்ற வகையிலேயே அவர் செயற்பட்டு வருகிறார். ஆனால் சர்வதேசம், சிங்கள மக்களின் சமூக, மத, கலாசார விடயங்களில் தலையீடு செய்வதாக எவ்வித தகவலும் இல்லை. ஆனால் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் சமூக, மத, கலாசார அம்சங்களுக்கு எதிராகச் செயற்படுவதை மனித உரிமைகளின் பெயரால் கண்டனம் செய்து வருகின்றது.

அநியாயங்களைத் தொடர்ந்து மேற்கொண்டுவரும் எவரும் அநியாயங்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பதை விரும்புவதில்லை என்பது உண்மைதான். அந்த வகையில் ஜனாதிபதி ஓர் இனத்தின் மீதான மனிதாபிமானமற்ற ஒடுக்குமுறை பற்றிப் பேசுவதுகூட ஒரு தலையீடு எனக் கூக்குரலிடுகிறார்.

மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பான கண்டனங்கள் ஒரு நாட்டின் அடிப்படை விடயங்களில் தலையீடு செய்யும் தவறு என்றால் அந்த நாட்டின் மனித உரிமை மீறலும் இனங்கள் மீதான ஒடுக்குமுறையும் அங்கீகரிக்கப் பட்டவை என்பதுதான் அர்த்தமல்லவா?

இந்த நிலையில் தமிழ் மக்களின் சாதாரண அடிப்படை உரிமைகளைக் கூட வழங்க மறுக்கும், அப்படி வழங்கப்படும் கோரிக்கைகளைப் பயங்கரவாதம் என்றோ அந்நியத் தலையீடு என்றோ குற்றம் சாட்டும் மஹிந்த ராஜபக்ஷ பாலஸ்தீன மக்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

எல்லாம் ஊருக்குத்தானடி உபதேசம் உனக்கும் எனக்கும் இல்லை என்பதன் வெளிப்பாடுதான். ★

# PCHouse நிறுவனத்தின் காட்சி அறை கண்டியில்

இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்துறையில் முன்னோடியாகத் திகழும் PC House PLC நிறுவனம் தனது இரண்டாவது 9to9 காட்சியறையை அண்மையில் கண்டியில் திறந்துவைத்துள்ளது. உலகளவில் 3000 இற்கும் மேற்பட்ட பெயர்பெற்று விளங்குகின்ற வர்த்தக நாமங்களை ஒரே கூரையின் கீழ் உள்ளடக்கியவாறு மலைநாட்டின் தலைநகரில் வசிப்பவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப விற்பனைத் துறையில் சௌகரியத்தில் ஒரு புதிய யுகத்துக்கு இந்தக் காட்சி அறை வழிகோலியுள்ளது.



கண்டியில் PCH நிறுவனத்தின் 9to9 விற்பனைக் காட்சி அறையை திறந்து வைப்பது தொடர்பில் PCH நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவரான எஸ்.எச்.எம்.றிஷான் குறிப்பிடுகையில் ''கண்டியில் PCH 9to9 காட்சியறையை நிறுவியுள்ளமை வெறுமனே எமது விற்பனை மற்றும் விநியோக வலையமைப்பை விஸ்தரிக்கும் ஒரு நிகழ்வாக மட்டும் அமைந்துவிடவில்லை. மாறாக இந்தத் துறையில் எமது நாடு அடைந்து வருகின்ற அபிவிருத்தியின் ஓர் அடையாளமாகத் திகழ்கின்றது. எமது தேசத்தின் கலாசாரத் தலைநகரம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் மிகச் சிறந்த அம்சங்களுடன் ஆளுமைப்படுத்தப்பட்டுள்ளமை இதற்கு சிறந்த சான்று பகர்கின்றது. தேசத்தின் எதிர்காலம் பிரகாசமிக்கதாக தென்படுவதுடன், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கருவிகளில் உரிய அத்திபாரத்தை ஏற்படுத்தி எதிர்காலத்தை வலிமையுள்ள வழியில் முன்னெடுத்துச் செல்வதற்கு நாம் தயாராகியுள்ளோம். இதன் பின்னணியில் ஒரு நிறுவனம் என்ற வகையில் எமது சேவைகளையும், விநியோக அடைதல்களையும் விஸ்தரிப்பதே நாம் தொடர்ந்தும் முன்னெடுத்துவருகிறோம்'' என்று கூறினார்.

வருடத்தின் 365 நாள்களும் தனது வியாபார நடவடிக்கைகளுக்காக திறந்துள்ள 9to9 காட்சியறை உற்பத்திகளில் ஈடு இணையற்ற தெரிவுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்றது. கண்டி நகரின் இதயப் பகுதியில் 136, டீ.எஸ். சேனாநாயக்க வீதி என்ற முகவரியில் அமைந்துள்ள இந்தக் காட்சியறை வாடிக்கையாளர்கள் இலகுவில் செல்லக்கூடிய இடத்தில் அமையப்பெற்று அவர்களுக்கு சௌகரியத்தை வழங்குகின்றது. இதைவிட திருத்த வேலைகள் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி ஆகிய துறைகளில் பாண்டித்தியம் பெற்ற உயர்மட்டத்தில் பயிற்றுவிக்கப்பட்ட 15 தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட அணியொன்று இந்நிறுவனம் 14 ஆண்டுகளாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் பேணிவந்துள்ள பாரம்பரியத்தை தொடர்ந்தும் பேணும் வகையில் தனது வாடிக்கையாளர்களுக்கு மிகச் சிறந் தரத்திலான சேவையையும் வழங்கும்.

அனைத்து 9to9 காட்சியறைகளும் மு.ப 9.00 முதல் பி.ப 9.00 வரை வியாபார நடவடிக்கைகளுக்காக திறந்திருப்பதுடன் வாடிக்கையாளர்களுக்கு சௌகரியம், வசதி மற்றும் இணையற்ற உற்பத்தி தெரிவு ஆகியவற்றை வழங்குகின்றன. இலங்கையில் இத்தகைய அளவுக்கு ஒரேயொரு தகவல் தொழில்நுட்ப பல்பொருள் அங்காடியாகத் திகழும் 9to9 ஆனது அலுவலக பணியில் ஈடுபட்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு கொள்வனவு செய்வதற்கு வசதியான நேரமாக அமையப்பெற்றுள்ள மாலை 6.00 முதல் இரவு 9.00 மணிவரையில் விசேட சலுகைகளையும் வழங்குகின்றது. அதி சிறந்த வாடிக்கையாளர் உதவு சேவை மற்றும் விற்பனைக்கு பிந்திய சேவை ஆகியன ஒன்றி ணைந்து 9to9 இனை போட்டி யாளர்களை விடவும் அதி உச் சத்தில் திகழச் செய்கின்றன. இதைவிட கண்டி நகர எல்லைப் பகுதிக்குள் இலவச விநியோக சேவைகளையும் 9to9 தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. (த)




இலங்கை வங்கியின் அபிவிருத்திக் கடன்திட்டத்தின் கீழ் மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையினால் சாவற்கட்டைச் சேர்ந்த அன்னலிங்கம் சபேசன் என்பவருக்குப்புதிய டெல்டரி கார் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. காரின் திறப்பை வங்கி முகாமையாளர் க.லட்சுமனசர்மா வழங்குகிறார். (த-100)


## ஏயர்ரெல் லங்கா கோட்டை ரயில் நிலையத்தை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது



பார்தி ஏயர்ரெல் லங்கா கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை கோட்டை ரயில் நிலையத்தை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. தமது புதிய விளம்பர பிரசாரமான 'ஒவ்வொரு நண்பனும் தேவை மச்சான்' பிரசாரத்தினை ஊக்கிவிக்கும் வகையில் திடீர் பிரசன்ன நடன நிகழ்ச்சியை கோட்டை ரயில் நிலையத்தின் முன் அவர்கள் நிகழ்த்தினர். அங்கு கூடியிருந்தவர்கள் மத்தியில் மிகவும் வரவேற்பை பெற்ற இந்தத் திடீர் நிகழ்வு யூடியூபில் 10,000க்கு மேற்பட்ட பார்வையாளர்களால் கண்டுகளிக்கப்பட்டது.

# Micro Constructions நிறுவனத்தின்பாரம் தாங்கும் கட்டமைப்பு தொழில்நுட்பம்

Micro Constructions Pte. Ltd. ஆற்றிய சேவைகளுக்காக The Ceylon National Chamber of Industries அண்மையில் அதற்கு தேசிய சாதனையாளர் -2010 விருது வழங்கல் வைபவத்தில் திறமை விருது வழங்கி கௌரவித்துள்ளது. அத்துடன் அதன் காப்பீட்டுப் பாரம்தாங்கும் கட்டமைப்பு என்ற முறைமையின் அதிஉயர் வடிவமைப்பு மற்றும் நிர்மாண ஆற்றல்களை அங்கீகரித்து இலங்கை கட்டடக் கலைஞர்கள் நிலையம் அதன் வருடாந்த அமர்வில் உற்பத்தி விருது வழங்கியுள்ளது. விருது வென்ற பாரம் தாங்கும் கட்டமைப்பான நிர்மாணத் தொழில்நுட்ப முறைமை இலங்கையில் முதல் முதல் மோட்டார் காரை தயாரித்த கம்பனியான Micro Car தயாரிப்பாளர்களால் 2005 ஆம் ஆண்டில் வடிவமைக்கப் பட்டு அறிமுகம் செய்யப்பட்டது.



இதற்கு மிகக் குறைந்த அளவிலான மூலப்பொருள்களும் திறமைத் தொழிலும் தேவை. இதில் பயன்படுத்தப்படும் Panels இயந்திரங்களால் தயாரிக்கப்படுவதோடு ACI/British மற்றும் சர்வதேச, உள்ளூர் தரங்களுக்கு ஏற்றதென உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. Panel இன் இரண்டு பக்கங்களிலும் Spray தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இயல்பு முறையான சுவர்களைப் போன்று இரு தடவைகள் போர்ட்லண்ட் சிமெந்துப் பூச்சு கொடுக்கப்படுகிறது.

கம்பனி இதுவரை 50,000 சதுர மீற்றர் சுவர் மற்றும் தரைப் பகுதியை பூர்த்தி செய்வதில் வெற்றி கண்டுள்ளதோடு ICTAD தரப்படுத்தலின் கீழ் M2/C3 தரத்தையும் பெற்றுள்ளது. கடந்த 10 வருட காலத்தில் Micro Constructions கம்பனி MicroCars கம்பனியைப் போன்றே சர்வதேச அரங்குகளில் விருதுகளை வென்றெடுத்துள்ளதுடன் தற்பொழுது உறுதிப்பாட்டுக்கும் நம்பகத் தன்மைக்குமான புகழையும் பெற்றுள்ளது.

University if Civil Engineering, Moratuwa, State Engineering Corporation of Sri Lanka and Central Engineering Consultancy Bureau of Sri Lanka ஆகியன இலங்கையில் நிர்மாணத் திட்டங்களுக்கு Micro Cars கம்பனியை சிபார்சு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ISO சான்றிதழ் பெற்ற நிர்மாணக் கம்பனியான Micro Cars தேசிய நிர்மாண சங்கத்திலும் இலங்கையில் நிர்மாணத் தொழில் சம் மேளனத்திலும் அங்கத்துவம் பெற்றுள்ளது.

Micro Constructions நாடெங்கிலும் வர்த்தக கட்டடங்கள், வைத்தியசாலைகள், மாளிகைகள், அலுவலக கட்டடங்கள் ஆகியவற்றை நிர்மாணித்துள்ளது.

இப்பொழுது வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் நிலைகொண்டுள்ள Micro Constructions தற்போது யாழ்ப்பாணத்தில் முதலாவது தனியார் ஆடம்பர மருத்துவமனையை நிர்மாணித்து வருகிறது. இந்தியா, கென்யா, மாலைதீவு, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலும் கம்பனி நிர்மாணத் திட்டங்களை பொறுப்பேற்று நடத்தி வருகிறது.

இந்த கட்டடநிர்மாண முறைமையினால் உங்கள் வீடு இயற்கை அல்லது தற்செயலான சேதங்களால் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுவது மட்டுமன்றி நிர்மாணத்துக்கு எடுக்கும் காலமும், பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்திகட்டுவதற்குஎடுக்கும்காலத்திலும் பார்க்க மிகவும் குறைந்து விடுகிறது. இந்த கட்டட நிர்மாண முறை மையினால் கிடைக்கும் அனுகூலங்களில் சில பின்வருமாறு:

* பாரம்பரிய கட்டட நிர்மாண முறைமையிலும் பார்க்க இம்முறைமையில் கட்டமைப்பு செலவினம் 20 சதவீதத்திற்கு மேல் குறைந்து விடுகிறது.(த)

# பல்துறைக்கலைமேதை பாஷையூர் அ.பாலதாஸ்

சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்

12

ஆற்றுகைக் கலைத் துறையில் ஈடுபடும் பலர் ஏதாவது ஒரு கலையிலேயே தம்மை அதிகமாக வளர்த்துக் கொண்டவர்களாகவும் ஏனைய கலைகளைப் பற்றிச் சிறிதளவு தெரிந்தவர்களாகவும் இருப்பர். சிலர் தாம் ஈடுபடுகின்ற கலையுடன் தொடர்புடைய அனைத்திலும் திறனாளிகளாகக் காணப்படுவர். இந்த வகையில் தென்மோடிக் கூத்து அண்ணாவியாராகவும் புதிய நாடகப் பிரதிகளை எழுதுகின்ற எழுத்தாளனாகவும் சிறந்த இசை நாடக நடிகனாகவும் சுவையான பாடகனாகவும் ஹார்மோனியக் கலைஞனாகவும் பல்துறை சார் திறன் கொண்டவராகக் கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக நாடகப் பணியாற்றி வருபவர் கலைஞான பூரணன் அன்ரனி பாலதாஸ்.

அமரர்களான அன்ரனி - சிசிலியா தம்பயரின் மகனாக 26.04.1940 இல் கூத்துக் கலையின் அலை யோசை தாலாட்டும் பாஷையூரில் இவர் பிறந்தார். தென்மோடிக் கூத்துக் கலைஞர்கள் நிறைந்த இவ்வூரில் கலைக் குடும்பத்தில் பிறந்த இவர் கல்வியிலும் கலையிலும் சிறப்புற்று வளர்ந்து வந்தார். பாஷையூர் புனித அந்தோனியார் பாடசாலையில் தொடக்கக் கல்வியையும் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வியையும் கற்றுக் கல்வியாளனாக வளமுற்று அரச நியமனம் பெற்று சீனோர் மீன்பிடி வலைத் தொழிற்சாலையில் மேற்பார்வையாளராகவும் பொறுப்பாளராகவும் கடமையாற்றினார். எனினும் இவரது கலைத் தாகமும் கலைத்திறனும் இவரை முழுநேர நாடகக் கலைஞனாக உருவாக்கியது.

தனது எட்டாவது வயதில் கண்டி அரசன் என்னும் கூத்தில் சிறுவனாக நடிக்கத்தொடங்கி அதன் பின் ஏராளமான கூத்துக்களில் நடித்துப் புகழ்பெற்று வந்தார். அக்காலத்தில் மத்தளத்துடன் மட்டும் நிகழ்த்தப்பட்டு வந்த கூத்துக்களில் ஹார்மோனியத்தை வாசித்து இக்கருவியைக் கையாள்வதில் சாதனையாளராக விளங்கிய மாசிலாமணி மரியாம்பிள்ளை (சுதிமரியான்) என்பவரிடம் சிறு வயதிலேயே ஹார்மோனியக் கலையைக் கற்றுத் தென்மோடிக் கூத்துக்கு வாசிப்பதில் கடைப் பிடிக்க வேண்டிய நுட்பங்களை அறிந்து கொண்டதுடன் பலநூற்றுக்கணக்கான கூத்து மேடைகளில் தனது குருவாகிய மா.மரியாம்பிள்ளையுடன் இணைந்து பதினைந்தாவது வயதிலிருந்து ஹார்மோனியத்தை வாசித்து வந்தார். அத்துடன் இக்கருவியை இசைநாடகத்துக்கு வாசிக்க வேண்டிய முறையை ஆறுமுகம் என்பவரிடம் தெரிந்து கொண்டார்.

கூத்து, இசைநாடக மேடைகளில் துணையிசைக் கருவியாளராக பணியாற்றிவந்த இவர் அவ்விரு துறைகளின் நடிகனாகவும் தன்னை வளர்த்துக் கொண்டார். கூத்து என்பது பாடல்கள் நிறைந்ததாகவும் விதவிதமான ஆட்டங்கள் கொண்டதாகவும் சந்தம் நிறைந்த பாடல்கள் உள்ளடங்கியதாகவும் அமைந்திருக்கும். ஆனால் இசை நாடகம் என்னும் கலை வடிவத்தில் சிறிதளவு வசனங்களும் அதிகமானவை பாடல்களாகவும் அமைந்திருக்கும். ஆடுவதனூடாக ஏற்படும் உடற்களைப்பு இசை நுட்பம் நிறைந்த பாடல்களைப் பாடுவதற்கு இடம்தராது என்பதால் ஆடல் என்பது இங்கே தவிர்க்கப்பட்டுள்ளது. எனினும் இவ்விரு கலைகளின் வரன் முறைகள் எவற்றையும் மீறாமல் கூத்து, இசை நாடகக் கலைஞனாகவும் ஒவ்வொன்றின் தனித்துவப் பண்புகளையும் சிறப்பாகப் பேணிவருகின்ற ஒருவராகவும் ஈழத்து நாடக அரங்கில் இன்று வரை இவர் சாதனை படைத்து வருகின்றார்.

1965இல் கண்டி அரசன் என்னும் ஆற்றுகையானது பாஷையூர் வளர்பிறை நாடக மன்றத்தால் மிகச் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டு ஆயிரம் தடவைகளுக்கு மேல் இலங்கை முழுவதும் மேடையேற்றப்பட்ட போது இவ்வாற்றுகையில் வருகின்ற கண்டியாளும் அரசனாக நடித்துப் பெரும் புகழ் பெற்ற இவர் தவத்திரு சங்கரதாசு சுவாமிகளால் உருவாக்கப்பட்ட சத்தியவான் சாவித்திரி என்னும் இசை நாடகத்தையும் ஆற்றுகைப்படுத்தி வந்துள்ளார். சவரிமுத்து ஆபிரகாம் என்பவரால் எழுதப்பட்ட புதிய பாடல்களையும் இவ்விசை நாடகத்தில் சேர்த்து தீர்க்க சுமங்கலி என்னும் பெயரில் புதுமையான படைப்பாக நாடு முழுவதும் மேடையேற்றி அப் படைப்பில் இயமனாக நடித்தும் புகழ்பெற்றுள்ளார்.

ஈழத்தின் இசைநாடகத் துறையின் தந்தையாக அறியப்படும் நடிகமணி வி.வி.வைரமுத்துவின் வசந்தகான சபாவுடன் ஒரே மேடையில் இசை நாடகங்களை மேடையேற்றிய கலைஞராகவும் விளங்கும் இவர் நீ ஒரு பாறை, எஸ்தாக்கியார், முத்தா மாணிக்கமா, ஞான சவுந்தரி, சங்கிலியன் போன்ற தென்மோடிக் கூத்து ஆற்றுகைகளிலும் முக்கிய பாத்திரமேற்று நடித்து வந்துள்ளார். சுருதி, லயம் பசகாமல் பாடும் ஆற்றல் கொண்ட இவரது கனதியான குரல் வளமானது அரச பாத்திரங்களில் நடிப்பதற்குப் பொருத்தமான ஒன்றாகவும் அமைந்துள்ளமை இவரது சிறப்பியல்பாகும்.

பாடகராகவும் நடிகராகவும் இசைக் கருவியாளராகவும் பன்முக ஆளுமையோடு கலைப் பணியாற்றி வரும் இவர் ஏராளமான கூத்துக்களை இளைஞர்களுக்குப் பயிற்றுவித்து மேடையேற்றிவரும் ஒப்பற்ற நெறியாளராகவும் காணப்படுகின்றார். அத்துடன் வீரத்தளபதி, அனைத்தும் அவரே, நீ ஒருபாறை, ஏமாந்தான் ஏரோதன், இடமில்லை. சவுலன் சின்னப்பர், யோசுவாஸ், பத்திரிசியார், அந்தோனியார், பலிப்பு நேனியார் போன்ற பல தென்மோடிக் கூத்துக்களைத் தனது இசைத் தமிழ் ஞானத்தால் புதிதாக உருவாக்கித் தந்துள்ளார். பாஷையூர் புனித அந்தோனியாரின் புகழ்பாடும் கீதங்கள் ஏராளமானவற்றை இயற்றியிருக்கும் இவர் யாழ். திருமறைக் கலாமன்றத்தின் தொடக்க கால உறுப்பினர் என்பதும் இம்மன்றத்தின் நாட்டுக்கூத்துப் பொறுப்பாளராகச் செயற்பட்டு அரும் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கவை ஆகும். இரவு பகல் பாராது உணவையும் உறக்கத்தையும் மறந்து பல் நாள் ஒத்திகைகளை ஓய்வின்றி மேற் கொண்டு அதன் பின் கூத்துக்களை பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் முன்னிலையில் மேடையேற்றிய உச்சமான, கிடைத்தற்கரிய கலை அனுபவங்களை தற்காலத்தில் பெறலாம் என்று கருதமுடியாது.



**வசாவிளான் தவமைந்தன்**

மாறிவரும் அவசர உலகில் கூத்துக் கலையை வளர்ப்பதென்பது கடினமாகவே உள்ளது. முக்கியமாக இளைஞர்களிடம் இக்கலை மீதான ஆர்வம் குறைந்து வருகின்றமை கவலைக்குரிய ஒன்றாகும்.

முதுகலைஞர்களின் அனுபவங்களையும் ஆற்றல்களையும் அறிந்து அவர்களிடம் கடினமான பயிற்சிகளைப் பெற்றுத் தம்மை வளப்படுத்திக்கொள்ளும் முயற்சியில் தற்கால இளையோர் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. மூத்த கலைஞர்கள் பலரும் இதுபற்றிய கவலையற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இதேவேளை ஒரிரு கூத்துக்களை மட்டும் மேடையேற்றிவிட்டுத் தம்மைத் தாமே அண்ணாவியார் என்று சொல்லிக் கொள்வதில் மட்டும் பலர் ஆர்வமாக உள்ளனர் என்று தனது கருத்துக்களை இவர் கூறுகின்றார். ★

# பித்த உடம்பினருக்கு உகந்தது ஆவாரம்பூ

## ஆவாரை

வேறுபெயர்-ஆவிரை, ஆவாரம்பு, எமபுப்பி, ஆகுலி
தாவரவியற் பெயர்-Cassia auriculata
(காசியா ஓரிக்குலேற்றா)
குடும்பம்-.Caesalpinioideae (சீசல்பினியொய்டியே)
சிங்களப் பெயர்-ரணவர
சமஸ்கிருதப் பெயர்-ஆகுல்ய
ஆங்கிலப் பெயர்-Tanner's Cassia

செடிவகுப்புக்குரியது கூட்டிலைகள் நீள்வட்டமான சிற்றிலைகள் பூக்கள் பூந்துணரில் மஞ்சள் நிறமாகக் காணப்படும் தட்டையான அவரைக்காய் போன்ற காய்கள். ஆவாரை இலை,பூ, காய், பட்டை வேர் ஆகிய ஐந்து பகுதிகளையும் சேர்த்து ஆவாரைப் பஞ்சாங்கம் என்பர். இவற்றைச் சமவளவில் எடுத்துக் குடிநீர் செய்து காலை, மாலை பருகிவர மதுமேகம், வெள்ளை சாய்தல், உட்சூடு, நீர் வேட்கை என்பன தீரும்.



இவற்றை உலர்த்திப் பொடிசெய்து சூரணமாகவும் சாப்பிட்டு வரலாம். ஆவாரம் பூவைக் கறி சமைத்து உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டு வர உடல் வரட்சி, நீர் வேட்கை உடல் துர்நாற்றம் என்பன நீங்கும் நீரிழிவு நோயாளருக்கும் இது நன்று. ''ஆவாரை பூத்திருக்க

**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**

சாவாரைக் காண்பதுண்டோ?'' என்று மருத்துவப் பழமொழியும் உண்டு. ஆவாரம் பூக் குடிநீருக்குப் பசுப்பால் கலந்து சாப்பிட்டுவர உட்சூடு தணியும் ,பித்த உடம்பினருக்கு இது உகந்தது.

ஆவாரம்பூவையும் பச்சைப் பயற்றையும் சேர்த்தரைத்து உடம்புக்கு தேய்த்துக் குளித்துவர சொறி,சிரங்கு மற்றும் தோல் நோய்கள் நீங்கும்.

ஆவாரம் பட்டையைக் குடிநீரிட்டு வாய் கொப்பளித்து வர வாய்ப்புண் மாறும்.

ஆவாரம் துளிரை நீர்விட்டரைத்து தலைக்குத் தேய்த்து முழுகிவர உடற்குளிர்ச்சியுண்டாகும்.

முற்காலத்தில் நெடுந்தூரம் வெய்யிலில் நடப்பவர்கள் ஆவாரம் இலையைத் தலையில் பரப்பி அதன் மேல் தலைப்பாகையிட்டு நடப்பது வழக்கம் அதனால் வெய்யிலின் வெப்பம் உடம்பைத்தாக்காது தற்காலத்திலும் சில கிராமங்களில் இந்த நடைமுறை காணப்படுகிறது.

## இண்டு

வேறுபெயர்-இண்டங்கொடி, இண்டை, ஈங்கை, புலிதுடக்கி, ஈயக்கொழுந்து
தாவரவியற் பெயர்-Mimosa spinosa
(மைமோசா ஸ்பைனோசா)
குடும்பம்-Mimosoideae (மைமோசொய்டியே)
சிங்களப் பெயர்-வல் ஹிங்குருபட்ட
சமஸ்கிருதப் பெயர்-ஜனனி

இதில் வெள்ளிண்டு, செவ்விண்டு என்ற பேதங்களுண்டு புதர்க்கொடி, நீண்டு வளரும் தண்டு சற்று தடித்தது.

வளைந்த முட்கள் செறிந்து காணப்படும். கூட்டிலைகள் 10-15 சிற்றிலைகள் காணப்படும். இலைக் காம்பில் முட்கள் காணப்படும். இலைக்கக் கத்தியிலிருந்து பூந்துணர் உண்டாகும். பூக்கள் பொதுவாக வெண்மைநிறம் கனிகள் தட்டையானவை.

இதன் இலையுடன் தூதுவளையிலை, கண்டங்கத்தரிவேர், சுக்கு என்பவற்றைச் சேர்த்து குடிநீர் செய்து காலை, மாலை பருகிவர இருமல், முட்டு தொய்வு என்பன தணிவடையும்.

இதன் இலைச் சாற்றுடன் நல்லெண்ணைய் சேர்த்துக்காய்ச்சி தலைக்கு வைத்துத் தலை முழுகிவர தலைநீரேற்றம், கபாலக்குத்து என்பன தணிவடையும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 182

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | 4 | | 5 |
| | | 6 | | | | | |
| 7 | 8 | | | | 9 | 10 | |
| 11 | | | | 12 | | | |
| | | | 13 | | | | |
| 14 | | 15 | | | | 16 | |
| | | 17 | | | 18 | | |
| 19 | | | 20 | | | | |

அனுப்புபவர் பெயர்:.............................................

விலாசம்:.............................................

.............................................

கையொப்பம்:.............................................

### இடமிருந்து வலம்

1. வாழ்வில் இது வேண்டும்.
4. நாட்டுக்கும் தேவை, வீட்டுக்கும் தேவை, எல்லோருக்கும் தேவை.
6. குறிஞ்சி நிலத்திற்குரியவள்
7. நீதிமன்றிலும் காணலாம்
9. நான்கு கூப்பிடு அளவு தூரம்
11. தற்கால நிறை அலகு
12. வயலில் இருக்கும்
13. சிறுவர்களும் பிடிப்பார்கள். சில பெரியோரும் பிடிப்பார்கள்.
14. பகிரங்கம்
16. இரவு
17. குத்து விழும் இப்படி
18. வரிசையில் இருக்கும் தொடர்
19. உலகம்
20. இதுவும் ஒருவகை மான்.

### மேலிருந்து கீழ்

1. நிர்வாகம் செய்பவன்
2. கிரீடம்
3. வலி
4. அரசியல்வாதிகளிடம் இது அதிகம் இருக்கும்
5. மீளுதல்
8. விசாலம்
10. தமது
12. தேர்த்திருவிழாவில் இதனைப் பிடிக்க விரும்புவார்கள்.
13. அலட்டு
14. இதுவும் ஒரு ஆயுதம்
15. பிரி
16. ஆண் சிங்கம் பெயருக்கும் சூட்டுவார்கள்.
18. உலகெங்கும் இருக்கும். வீட்டிலும் இருக்கும்.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படு வதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலா னோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவ தால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 180 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

### இடமிருந்து வலம்

(1) தீவிரவாதி (5) வெகு (7) பாகு (8) கடலட்டை (9) வதிவிடம் (11) நாம் (12) பாம்பு (14) தூய (15) சோதி (16)பங்கஜம் (17) சாதி (18) தகர் (19) பசி (21) வில் (22) வல்லவன்.

### மேலிருந்து கீழ்

(1)தீபாவளி (2) விகுதி (3) வாகடம் (4) திடம் (5) வெட்கம் (6) குடை (10) விநாயகர் (12) பாதி (13) புத்திரன் (14) தூங்கல் (15) சோம்பல் (16) பதவி (20) சில

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 180 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **வா.பிருந்தன்,** இல. 703, யோகபுரம், மல்லாவி.

2 ஆம் பரிசு — **ஆசை தியாகராஜா,** ஓவசியர் ஒழுங்கை, தெல்லிப்பழை.

3 ஆம் பரிசு — **ந.ஜெயபுஸ்ரீ,** இல.19, இரண்டாம் குறுக்குத்தெரு, பாசையூர், யாழ்ப்பாணம்.

4 ஆம் பரிசு — **ஆர்.ரங்கசாமி,** இல.52, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.

5 ஆம் பரிசு — **சு.கரிமுகன்,** கோண்டாவில் மேற்கு, கலட்டி லேன், கோண்டாவில்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

**வி.பர்மிகா,**
மின்சாரசபை விடுதி, மன்னார்.

**யூ.வி.யூநடினி,**
இல.18, புதுமை மாதா கோயில் கிழக்கு வீதி, யாழ்ப்பாணம்.

**எஸ். கோகுலன்,**
பாரதி லேன், சங்கானை.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

*சொற்சிலம்பம்போட்டி*
*நியூ உதயன் பப்ளிகேஷன்*
*(பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 12.10.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.182 இற்கான விடைகள் 16-10-2011 ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

# இல்லற...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பதை அறிய முடியவில்லையே!

அதனால், இரவும் பகலும் வருந்தி உயிர்துறக்கவும் மனம் இல்லை.

அவர் வரவைக் காணவேண்டும் என்பதால் உயிர்வாழ்கிறேன் என்கிறாள் தலைவி.

*''உரன் நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்*
*வரல் நசைஇ இன்னும் உளேன்''* [குறள் [1263]

ஊக்கத்துடன் மன உறுதியோடு சென்ற என் காதலர் வருகை காணவே இன்னும் உயிர்தாங்கி உள்ளேன் என்ற குறள் தரும் பொருள் காணலாம்.

இன்னும், காதலர் சொன்ன சொல் தவறமாட்டார், உயிரோடு இருப்பின், உலகம் நிலை மாறினாலும் அவர் திரும்பி வருவார் என்கிறாள் தலைவி.

*''என் காதலர்*
*நிலம்புடை பெயர்வ தாயினும் கூறிய*
*சொல்புடை பெயர்தலோ அரிதே''* [நற்.289]

என்பதால், அவள் தான் சாவதற்கு அஞ்சவில்லை; அதேநேரம், அவரைப் பற்றி ஒன்றும் அறியாமல் சாகவும் விரும்பவில்லை! தோழி, பகலில் மட்டும் அல்ல, ஊர் உறங்கும் நேரத்திலும் என் நெஞ்சு காதலர் நினைவிலேயே உள்ளது. இதனால் வருந்திக் கொண்டிருக்கவும் முடியவில்லை; உயிர் துறப்போ மென்றால் அவரைக் காணாமல் சாகவும் அஞ்சுகிறேன். இந்த நிலை தகுமா?''

*''உரைத்திசின் தோழி! அது புரைத்தோ அன்றே;*
*அருந்துயர் உழத்தலும் ஆற்றாம்; அதன் தலைப்*
*பெரும் பிறி தாகல் அதனினும் அஞ்சுதும்;*
*துஞ்சு ஊர் யாமத் தானும் என்*
*நெஞ்சத்து அல்லது வரவு அரியோனே.''*
[குறுந் 302]

தலைவி சாக அஞ்சுவதாகக் கூறுகிறாளே; அதற்கு அவள் கூறும் காரணம்:

''அவர் வருவதாகக் கூறிய கால எல்லை கடந்து விட்டதே என வழிமேல் விழி வைத்துப் பார்வையும் மழுங்கி விட்டது. மாலைப் பொழுதும் வேறு வருத்துகிறது. இந்த நிலையில் சாவதற்கு நான் அஞ்சவில்லை; செத்தபின் வேறு பிறப்பு ஏற்பட்டால், எனது காதலரை மறந்து விடுவேனோ என்று தான்....அஞ்சுகிறேன் என்கிறார்.

*''தோளும் அழியும்; நாளும் சென்றென*
*நீள் இடை அத்தம் நோக்கி, வாள் அற்றுக்*
*கண்ணும் காட்சி தவ்வின; என் நீத்து*
*அறிவும் மயங்கிப் பிறிதாகின்றே;*
*நோயும் பேரும்; மாலையும் வந்தன்று;*
*யாங்கு ஆகுவென் கொல் யானே? ஈங்கோ*
*சாதல் அஞ்சேன்; அஞ்சுவல் சாவின் பிறப்புப் பிறிது ஆகுவதாயின்*
*மறக்குவேன் கொல் என் காதலன் எனவே?''* [நற்.397]

இவ்வாறு, வசதிகள் வாய்ப்புக்கள் அற்ற அந்தக் கால இல்லறக் காதலர், பொருள் வயிற் பிரிதலினால் துன்பப்பட்ட காட்சிகளைத் திருக்குறளும் மற்றைய இலக்கியங்களும் நமக்குப் படம் பிடித்துக் காட்டு கின்றன. அவற்றில் ஒரு துளி இங்கே சுவைத்திடல் தகுமே!

# எதிர்பார்ப்பு...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான் அவங்க மனசை புண்படுத்தோணும் எண்ட நோக்கத்துக்காகவோ இல்லை குத்திக்காட்டோணும் எண்டோ இதைச் சொல்லல்லை

தான் காதலிக்கிறவளைக் கவரவேண்டும். என்பதற் காகச் செய்யிற ஒவ்வொரு செயலும் மற்றவங்க பார்வையிலும் சரி ஏன் அவளோட பார்வையிலும் சரி வெறும் கோமாளித்தனமாகத்தான் தெரியுது எண்டிறது அவங்களுக்கு இன்னும் புரியலையோ தெரியலை.......''

''ஓம்.. ஓம்... அபி நீ சொல்றது புரியுது. உன்னோட நியாயங்களும் புரியுது; ஆனா அது அவனுக்கு புரியோணுமே. அவனைப் பொறுத்தவரைக்கும் உன்னிட்டை எப்படியாவது தன்ர காதலை வெளிப்படுத்தோணும் என்கிற வேகத்திலை இப்படியெல்லாம் நடந்து கொள்ளலாம் இல்லையா......?

''ஓம்.. தீபா நீ சொல்ற மாதிரியே வைச்சுக் கொள்ளுவம். உண்மையாவே என்னைக் காதலிச்சா நேரா வந்து சொல்ல வேண்டியதுதானே எதுக்கு இந்த ஜாடைமாடையான வம்புத்தனங்கள்.

''இல்லை அபி நீ இப்ப இருக்கிற யதார்த்தத்துக்கு மேலாக எதிர்பார்க்கிறாய்'' ''அப்படி என்ன நான் யதார்த்தத்துக்கு மேலாக எதிர்பார்க்கிறன். காதல் எண்டிறது வெறும் வயதின்ர, உணர்வின்ர, வேகத்தில மட்டும் உள்வாங்கிக்கிற விசயமில்லை; எங்கட எதிர்கால வாழ்க்கையை உறுதியாகக் கட்டியெழுப்பிற துக்காக நாங்க போடுற பலமான அத்திவாரம்.

வாழ்க்கை எண்டிற கட்டடம் உறுதியா இருக்கோணும் எண்டா புரிந்துணர்வு, நம்பிக்கை, அன்பு, அக்கறை, ஒழுக்கம் போன்ற தூண்கள் பலமா இருக்கோணும்

நீ சொல்றமாதிரி அவனிட்ட இருக்கிற அழகு, அந்தஸ்து, நாகரீகம் எல்லாமே கட்டடத்தில பூசுற வெறும் பெயின்ற் மாதிரித்தான். அது எப்ப வேணுமெண்டாலும் அழிஞ்சு போகலாம். கட்டடமோ உறுதியா கட்டி எழுப்பப்படாதப்போ எதுக்குப் பெயின்ற்? ''என்னை மன்னித்து விடு அபி; அவனோட ஒழுக்கம், பண்பாடு, பழக்கம் எல்லாமே உன்னை இவ்வளவு தூரம் பாதிக்கும் எண்டு நான் எதிர்பார்க்கேல்ல அவன் கூட அதைக் கொஞ்சம் எதிர்பார்த்திருக்கமாட்டான்.

நான் இவ்வளவு தூரம் அவனுக்காக கதைச்சதே அவன் என்ர அண்ணன் எண்டிறதாலதானே; அதுமட்டுமில்லை எங்க அண்ணன் உன்மேல் வைச்சிருக்கிற ஆழமான காதல் தெரிஞ்சதாலயும் தான். நீ எதிர்பார்க்கிற அன்பு, அக்கறை, நம்பிக்கை எல்லாமே அவனிடம் நிறைய இருக்கு.

அவன்தான் அதை வெளிப்படுத்தத் தெரியாமை இந்த மாதிரி தடுமாறித் திரியிறான். அது அவன்ர தப்பில்லை அவன்ர அறியாமை. நான் அவனுக்கு சொல்றன். கட்டாயம் அவன் தன்ரை போலித் தனத்தை மாத்தி உண்மையான காதல் எண்டிறதை எப்படி வெளிப்படுத்த வேணும் எண்டிறதை புரிஞ்சுக்குவான். அப்பவாவது அவனின் காதலை ஏற்றுக்கொள்ளுவாய்தானே அபி என்றவாறே பதிலுக்காக அவள் முகத்தைப் பார்க்க அபியின் அழகான புன்னகை பதிலாகக்ளளள கிடைக்க அளவிலா சந்தோசத்தோடு அண்ணனைத் தேடி வேகமாகச் சென்றாள் தீபா. தன்னுடைய தீர்க்கமான கருத்தால் தன்னவனை போலித்தனமான ஒரு மாயவலையில் இருந்து விடுவிக்க திருப்திகலந்த சந்தோசத்தோடு தன் எதிர்கால எதிர்பார்ப்புக்களின் சிந்தனைகளோடே அபி.....

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 38

## 7 மழை நீரை குடிதண்ணீராக்கிப் பயன்பெறுவோம்

இந்தக் கட்டுரைத் தொடர் மிக ஏற்ற ஒரு காலப் பகுதியில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. மழைகாலம் ஆரம்பிக்க எமக்கு இன்னும் சில காலமே உள்ளது இந்த மழைகாலத்தில் அதன் பயனைப் பெற விரும்புவோர் இந்த மழை காலத்தில் அதனைப் பரீட்சார்த்தமாகவேனும் பயன்படுத்திப் பார்க்க, சேமிக்க முயலலாம். அதன் மென்மையான சுவையை உணர்ந்த பின் நீங்கள் தொடர்சியாக அதைப் பயன்படுத்த முயல்வீர்கள் என்பது நிச்சயமான ஒன்று. குடிதண்ணீர் தட்டுப்பாடு உள்ள பிரதேச மக்கள் மழை நீரையும் தமது குடிதண்ணீர் மூலமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற விழிப்புணர்வு ஏற்பட இது ஓர் சந்தர்ப்பமாக அமையும்.

மக்கள் பருக வேண்டிய குடிதண்ணீரின் தரமானது. [INSTITUTE OF SRILANKA STANDARD] இலங்கையில் தர நிர்ணய நிறுவனத்தால் வரையறை செய்யப்பட்டுள்ளது. குடிதண்ணீரில் உள்ள மாசுக்கள், கனியுப்புக்கள் என்பவற்றின் அளவு, அதனால் மனிதனில் சுகாதார ரீதியில் ஏற்படும் நோய்த் தாக்கத்தை மையமாகக் கொண்டு நிர்ணயம் செய்யப்பட்டு 1983 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள SLS 614 பகுதி I மற்றும் பகுதி II ஆகியனவாகும். இந்தத் தரத்தின் விருப்பத் தகுந்த எல்லை [DISIRABLE LIMITS] க்குள் குடாநாட்டின் பெரும்பாலான நீர் வளத்தின் தரம் இல்லை. இந்தத் தர நிர்ணயத்துடன் ஒப்பிடுகையில் குடாநாட்டில் குடிதண்ணீர் வளமே இல்லை என்னும் நிலைக்கே நாம் சொல்ல வேண்டிய நிலைமை.

இத்தகைய நிலைமையைத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ள வர்த்தக சமுகம் மக்களுக்கு ஏற்றது என்னும் பெயரில் அதிகளவான போத்தல்களில் அடைக்கப்பட்டுள்ள குடிதண்ணீரையும், விதவிதமான வடிகட்டிகளையும் [FILTERS] எம் உள்ளூர் சந்தையில் தாராள பாவனைக்கு விட்டுள்ளன. எனக்கு தெரிந்த மட்டில் 25இற்கும் மேற்பட்ட வகையான குடிதண்ணீர் போத்தல்கள் [BOTTLE DRINKING] கடைகளில் கிடைக்கின்றன.

எமது மக்களுக்கு போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் என்றவுடன் அது Mineral water ஆகவே தோற்றமளிக்கின்றது. ஆனால் இன்று கடைகளில் கிடைக்கும் அநேக போத்தல் நீர்கள் Mineral water இல்லை. ஆயினும் அவையும் தம் பெயர்களைத் தெளிவாக Bottle Drinking Water எனக் குறிப்பிட்டுள்ளன. சாதாரண நிலத்தடி நீரை REVERSE OSMOSIL என்னும் தொழில் நுட்பம் கொண்டு இருக்கும் கனியுப்புக்கள் அனைத்தையும் அகற்றி போத்தல்களில் அடைத்து விற்பனை செய்கின்றார்கள். மேலதிக எந்தக் கனியுப்பு பதார்த்தங்களையும் இவர்கள் இந்த நீருக்குச் சேர்ப்பதில்லை. அவற்றின் PH பெறுமானமும் குறைவாகவே காணப்படுகின்றது. அதேபோல் விதவிதமான வடிகட்டிகள் இதனைப் பயன்படுத்துபவர்களுக்கும் பொதுவாகப் பணம் படைத்தவர்களும் படித்தவர்களுமாகவே இருக்கின்றனர். அநேகமாக அலுவலகங்கள், வங்கிகள் போன்றவற்றில் இத்தகைய வடிகட்டிகள் தாராளமாகக் காணப்படுகின்றன. இது ஓர்அழகுக் காட்சிப் பொருளாகவும் அமைந்து விட்டது அத்துடன் வீணாக மக்களுக்கு வடிகட்டிய தூயநீரைக் குடிக்கின்றோம் எனும் மாயத் தோற்றத்தை ஏற்படுத்தும் ஒன்றாகவும் காணப்படுகின்றது. இதனைக் கூறவேண்டியதன் காரணம் அந்த வடிகட்டிகளின் திறனைக் குறைகூற அல்ல. அந்த வடிகட்டிகள் எமது குடாநாட்டின் நீர்த்தன்மைகள், அதில் நாம் எதனைச் சுத்திகரிக்க வேண்டுமோ அதனைச் சுத்திகரிக்க வேண்டிய கட்டமைப்புக்களை கொண்டுள்ளனவா என்பதையும் கொண்டே ஆகும் சாதரணமாக கடைகளில் காணப்படும் வடிகட்டிகள் கலங்கள் தன்மையையும் நிறத்தையுமே குறைக்க வல்லன.

இவ்வாறு குடாநாட்டில் நிலநீர்வளம் குடிப்பதற்கு விரும்பத்தகுந்ததாக இல்லாமையும் அதற்கு மாற்றீடாகப் பயன்படுத்த நினைக்கும்அதிக விலை கொண்ட போத்தல் நீர், வடிகட்டிகள் என்பன கேள்விக்குரிதயதாக இருக்கும் நிலையில் இரணைமடு மூலமான மேற்பரப்பு நீர்விநியோகம் எமக்கு கிடைக்க ஓர் குறிப்பிட்ட காலம் எடுக்கும் என்ற நிலையிலும் எமது மக்களுக்கு உடனடி தீர்வாக அமையப் போவது இந்த மழை நீர் சேகரிப்பே.

இந்தத் தொடரின் மூலம் உங்களுக்கு வேண்டிய விளக்கங்கள் எம்மால் மழைநீர் சேகரிப்பு தொடர்பாகப் போதியளவு தரப்பட்டுள்ளது. இதில் உங்களுக்கு மேலதிக விவரங்கள் தேவைப்படுமிடத்து இந்தப் பகுதியூடாக எம்மைத் தொடர்பு கொள்ளுமிடத்து அவை தெளிவாக விளக்கப்படும் என்பதையும், தொழில்நுட்பம் சார்ந்த விளக்கங்கள் அவற்றில் வல்ல வ்ர்களுடன் உங்களுக்குத் தொடர்புகள் ஏற்படுத்தி விளக்கங்கள் தரப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தக் குடாநாட்டின் மண்ணின் தன்மையால் எம்மால் மேற்பரப்பில் பாரிய நீர்த்தேக்கங்களாக இந்த மழைநீரைச் சேகரிக்க இயலாது. ஆகவே நாம் இவ்வாறு சிறு அளவில் நீர்த் தொட்டிகளின் மேற்பரப்பிலும் மற்றும் நிலக்கீழ் நீரை மீள்நிரம்பல் கொள்ளச் செய்வதன் மூலமே எமக்குக் கிடைக்கும் இவ்வரிய மழை நீரை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மழைநீர் என்பது ஓர் மிகச் சிறந்த குடிநீராகும். அதனைச் சேமிப்பதும் அதனை ழுமுமையாகப் பயன்படுத்தி அதன் தன்மையைப் பெற்றுக் கொள்வதும் மக்களாகிய உங்கள் கையிலே உள்ளது.

(முற்றும்)

**சு.சரவணன்**
இரசாயனவியலாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை.

---

*தேங்காயும் தேங்காய் எண்ணையும் உடல் நலத்துக்கு பாதுகாப் பானதா என்பதில் ஒரு குழப்ப நிலை நிலவுகிறது. இது பாதுகாப்பானது என்றும் பலவருடங்களாக இதைப் பாவித்து வருபவர்கள் சுகதேகிகளாக வாழ்ந்து வருகிறார்கள் என்றும் ஆதாரங்களுடன் விளக்கும் கட்டுரை ஒன்று படித்தேன். இதன் உண்மைநிலை என்ன?*

இ.சுந்தரம், வட்டுக்கோட்டை.

## தேங்காய் ஆபத்தானதா?

தென்னைகளை நன்றி உணர்வுள்ள உயிர்களுக்கு உதாரணமாகச் சொல்லுவார்கள். அவற்றுக்கு நாம் ஊற்றிய நீரை காலம் கடந்தேனும் இளநீராக எமக்கு திருப்பித்தருகிறது என்று சொல்லுவார்கள். பெற்ற பிள்ளைகளிலும் பார்க்க தென்னம் பிள்ளைகள் நன்றி உணர்ச்சி உடையன என்று கூடச் சொல்லுவார்கள்.

தென்னங்கன்றுகள் நம் மண்ணிலே நன்கு வளரக் கூடியன. தமிழர்களின் கலாசாரப் பாரம்பரியங்களுடன் தென்னை பின்னிப் பிணைந்திருக்கிறது. தோரணம் கட்டுவது, நிறைகும் பம் வைப்பது, இளநீர் வெட்டுவது, தேங்காய் உடைப்பது, தேங்காய் எண்ணையில் தீபம் ஏற்றுவது, கிடுகு வேலிகள், பந்தல்கள் என இந்தத் தென்னம் பிள்ளைகள் நாம் பெற்ற பிள்ளைகளிலும் பார்க்க எமது கலாசார விழுமியங்களுடன் ஒன்றிப் போய் இருக்கின்றன.

ஆனால் இவற்றிலிருந்து பெறப்படும் தேங்காய் எண்ணை உடல் நலத்துக்கு உண்மையிலேயே ஆபத்து விளைவிப்ப தாகவே இருக்கிறது. எமது பிள்ளைகள் செய்வதெல்லாம் சரி என்று வாதிடும் சில பெற்றோர்கள் போல தென்னப்பிள்ளை களிலிருந்து பெறப்படுபவை எல்லாம் நல்லவையே என்று நாம் வாதிட முடியாது. அதே போல தென்னையிலிருந்து பெறப்ப டுபவை எல்லாம் நல்லவையே என்று நாம் வாதிட முடியாது. எனவே நாம் தேங்காயை எவ்வாறு பாதுகாப்பான முறையிலும் பிரியோசனமான முறையிலும் பாவிக்க முடியும் எனச் சிந்திக்க வேண்டும். ஏனெனில் தென்னம்பிள்ளைகள் நமது பிள்ளைகள்.

முட்டுக்காய் தேங்காய்களிலே அதாவது நன்கு முற்றமுன்னர் பிடுங்கப்படும் தேங்காய்களிலே எண்ணைப்பிடிப்பு மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. அத்துடன் ஒப்பீட்டளவில் புரதச் சத்து அதிகமாகக் காணப்படுகிறது. எனவே பிட்டு, மோதகம், சம்பல் போன்றவற்றுக்கு முட்டுக்காய் தேங்காய்களைப் பாவிப்பது பாதுகாப்பானதாகும். முட்டுக்காய் தேங்காய்களி லிருந்து கிடைக்கும் தேங்காய் பாலின் அளவு ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதால் கறி சமைக்கும் பொழுது முட்டுக்காய் தேங்காய் அரைத்து கறியில் சேர்ப்பதன் மூலம் சுவையான பாதுகாப்பான ஊட்டச் சத்துள்ள உணவுகளை நாம் தயாரித்துக் கொள்ள முடியும்.

தேங்காய்களை முட்டுக்காய்ப் பதத்தில் பிடுங்குவதன் மூலம் தென்னைகள் காய்க்கும் வீதத்தை அதிகரிக்கச் செய்ய முடியும். இதன் மூலம் தென்னையிலிருந்து அதி உச்ச பயன்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஒரு சிறிய பரிசோதனை ஒன்றின் மூலம் உண்மையிலேயே முட்டுக்காய் தேங்காய்களில் சாதாரண தேங்காய்களிலும் பார்க்க எண்ணைப்பிடிப்பு குறைவாகத்தான் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் சம அளவான ஒரு முட்டுக்காய் தேங்காய்ச் சொட்டையும் சாதாரண தேங்காய்ச் சொட்டையும் எடுத்து வெய்யிலில் நன்கு உலரவிடுங்கள். அதன் பின் இரண்டு சொட்டுக்களையும் தனித்தனியாக கடதாசி ஒன்றில் வைத்து அம்மிக் குளவியினால் நசித்து இரண்டினதும் எண்ணெய் தன்மையை ஒப்பிட்டுப்பாருங்கள் முட்டுக்காயில் எண்ணெய் தன்மையின் அளவு மிகக் குறைவாக இருப்பதை அவதானிக்கலாம்.

தற்போதய சமுதாயம் எதனையும் தகுந்த ஆதாரத்துடன் மட்டும் ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு வந்துகொண்டிருப்பது மகிழ்ச்சியான ஒரு மாற்றமாகும்.

முட்டுக்காய் தேங்காய்களில் இளநீர் அதிகமாக இருக்கும். இது குடிப்பதற்கு ஆரோக்கியமான இயற்கையான ஒரு பானமாகும். செயற்கையாகத் தயாரிக்கப்பட்டு விற்பனையாகும் சோடா வகைகளுடனும் மென்பான வகைகளுடனும் ஒப்பிடும் பொழுது இளநீர் மிகவும் பாதுகாப்பானது. எனவே முட்டுக்காய் தேங்காய்களை பாவிக்கும் பொழுது ஒரு மேலதிக நன்மையாக குடிப்பதற்கு போதுமான அளவு இளநீரும் கிடைக்கிறது.

எனவே தேங்காய்களை முற்றமுன் முட்டுக்காய்களாகப் பிடுங்கி பயன் படுத்துவதன் மூலம் தென்னையின் பயன்களைப் பெருக்கிக் கொள்வ துடன் எமது உடல் சுகத்தையும் மேம்படுத்திக் கொள்வோம். இருக்கும் சூழலையும் கிடைக்கும் வளங் களையும் சரியான பாதையில் பாவித்து வாழ்க்கையை வெற்றி கொள்வோம்.

**சி.சிவன்சுதன்,**
வைத்திய நிபுணர், யாழ்.போதனாவைத்தியசாலை

---

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப் பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

**கேள்வி: நவாலியைந் சேர்ந்த எனக்கு 10 வருடங்களான இடையிடையே நாரியின் கீழ்பகுதியில் நோ ஏற்படுகின்றது. ஆனால் வைத்தியர்கள் சொல்கிறார்கள் எல்லாப் பரிசோதனையும் எனக்கு நோமல் என்று இது எவ்வாறென்று கூறுங்களேன்?**

**திரு சிவலிங்கம், வயது 55**

ப: உங்களுக்கு ஏற்பட்டுள்ளது Low backpain எனப்படும் நாரியில் ஏற்படக் கூடிய ஒரு வலியாகும். இந்த நாரி நோவானது கூடுதலாக நாரிப் பகுதியிலுள்ள தசைகள், என்புகள், நரம்புகள், நாரி முள்ளந்தண்டு, மூட்டுக் களிலிருந்து ஏற்படுகின்றது. தசைகளில் தசைநார் இறுக்கப்படுவதால்/முறுக்கப்படுவதால் ஏற்படலாம்.

நாரி நோவுக்குரிய வேறு காரணங்களாவன முள்ளந்தண்டென்புக் கால்வாய் சுருங்குதல், இரத்தத்தில் கல்சியத்தின் அளவு குறைவடை தல், முள்ளந்தண்டென்பு மூட்டுகள் விலகுதல், தேய்வடைதல், சிறுநீரகத்தில் ஏற்படும் சிறுநீரகக் கற்கள், சிறுநீரில் ஏற்படும் கிருமித் தாக்கம் மற்றும் புற்றுநோய் (Multiple Myeloma)ஆகியனவாகும்.

இதில் உங்களுக்கு வைத்தியர்கள் எல்லாப் பரிசோதனையும் நோமல் (Nomal )என்று கூறிய படியால் 2 ஆம் பந்தியில் கூறப்பட்ட காரணங்களுக்குரிய சாத்தியக்கூறு மிகக் குறைவு.

உங்களுக்கு பெரும்பாலும் முதலாம் பந்தி யில் கூறப்பட்ட காரணங்களே மிகப் பொருத்தமானது. இதற்கு நீங்கள் சில வகையான உடற் பயிற்சிகள் செய்வதன் மூலமோ, உடற்பருமன் அதிகமாயின் உடல் நிறையைக் குறைப் பதன் மூலமோ சில வகை யான வலி நிவாரணிகளைப் பாவிப்பதன் மூலமோ குறைத்துக் கொள்ளலாம்.

இவ்வாறெல்லாம் செய்தும் உங்க ளுக்கு நாரிநோ குணமாகாவிடில் நீங்கள் வைத்திய ஆலோசனையை பெறுவது மிகவும் பொருத்தமானது. ஏனெனில் வேறும் சில பரிசோதனைகள் செய்ய வேண்டியிருக்கும்.

**டாக்டர் ஜே. தர்சிகா,**
நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ்.போதனாவைத்தியசாலை.

# எங்கேயும் எப்போதும்




விமர்சனம்

பயணிகள் பஸ்ஸை ஓட்டிச் செல்பவர், தனது பஸ் பயணத்துக்கு மட்டுமே வீதி இருப்பது போல், வேகமாக ஓடி விபத்தை ஏற்படுத்தி வாழ்வையே மாற்றி விடுகிறார் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் படம் தான் 'எங்கேயும் எப்போதும்'. ஒரு நொடி அவசரம் தான் விபத்துக்கு மூல காரணமாகிறது. அதைத் தவிர்த்து விட்டால் விபத்து என்ற அரக்கனிடமிருந்து பல உயிர்கள் நிம்மதியுடன் வாழும். அது வாழ்க்கையாக இருந்தாலும் பயணமாக இருந்தாலும் சரி. இந்தக் கருத்தை இரு பஸ்களின் விபத்து மூலம் நம் முகத்தில் அறைய வைக்கிறார் அறிமுக இயக்குநர் சரவணன். ஏ.ஆர். முருகதாஸிடம் உதவி இயக்குநராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஏ.ஆர். முருகதாஸின் தயாரிப்பில் வெளிவரும் இந்தப் படத்துக்குத் தனது உதவி இயக்குநரையே இயக்க வைத்தது சரவணனின் திறமை இருப்பது தெரிகிறது. சென்னையிலிருந்து திருச்சிக்கு ஒரு பயணிகள் பஸ் செல்கிறது. திருச்சியில் இருந்து சென்னைக்கு ஒரு பயணிகள் பஸ் வருகிறது. இந்த இரண்டும் விழுப்புரம் அருகே நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகிறது. திருச்சியில் இருந்து சென்னைக்கு பஸ்ஸில் வரும் ஜெய், அஞ்சலி, சர்வானந்த், சென்னையில் இருந்து திருச்சிக்கு பஸ்ஸில் செல்லும் அனன்யா இவர்கள் யார்? இவர்களுக்குள் என்ன தொடர்பு? இந்த விபத்தால் இவர்கள் வாழ்க்கையில் ஏற்படும் தலை கீழ் மாற்றங்கள் என்ன? என்பதுதான் 'எங்கேயும் எப்போதும்' படத்தின் பஸ்ஸினுள் வரும் திரைக்கதை. விபத்து நிகழ்வதில் இருந்தே தொடங்குகிறது படம். விபத்துக்குள்ளான பஸ்களில் பயணித்த கதாபாத்திரங்களின் கடந்த கால வாழ்க்கையை பின்நோக்கிச் சென்று விவரிக்கிறார் இயக்குநர்.

அந்தப் பயணத்தில் நெஞ்சைப் பிடித்தபடி நாமும் பயணமாகிறோம். அந்த விபத்தில் நாமும் சிக்கிக் கொண்டது போல உணர வைத்து விடுகிறது இந்தப் படம் என்றால் பாருங்களேன். படம் பார்க்கும் ஒவ்வொரு நிமிடமும் வேகமாக வாகனம் ஓடக் கூடாது என்பதை உணர வைத்து விடுகிறது. பஸ் ஓடிக் கொண்டிருக்கிறது. நினைவில் அனன்யா- சென்னையில் ஒரு கம்பனியில் வேலைக்காக தேர்வுப் பரீட்சைக்கு செல்லுகிறாள். சென்னையில் உள்ள தனது அக்கா வீட் டுக்குச் சென்றால் அக்கா அந்த நிறுவனத்துக்கு கூட்டிச் செல்வாள் என்ற தைரியத்தில் தனி யாகத் திருச்சியில் இருந்து வெளிக்கிட்டுச் சென்னை வந்து விடுகிறாள். அக்காவுக்குத்தான் சென்னைக்கு வந்து பஸ்ஸில் இறங்கி நிற்கிறேன் என்னை வந்து கூட்டிப் போகும்படி சொல்ல போன் எடுத்த போது அக்காவோ தனது கணவனின் அப்பாவுக்குச் சுகமில்லாததால் ஆஸ் பத்திரிக்குச் சென்று விட்டதாகவும் வருவதற்கு நேரமாகும் என்றும் சொல்லி அனன்யாவுக்கு எப்படி நிறுவனத்துக்குச் செல்ல வேண்டும் என்று போனில் வழியைச் சொல்கிறாள். அனன்யாவோ வழி சொல்லவே உனக்கு 5 நிமிடங்கள் ஆகும். பிறகு எப்படி நான் போக முடியும் என்று சொல்ல அக்காவோ பக்கத்தில் யாரும் நின்றால் கூப்பிடும்படியும் அவர்களிடம் வழியைச் சொன்னால் உனக்குக் காட்டுவார்கள் என்று சொல்கிறாள் . அனன்யா பக்கத்தில் நின்ற ஒரு அம்மாவைக் கூப்பிட்டு போனில் விலாசத்தைக் கேட்கும்படி சொல்ல, அந்த அம் மாவோ தான் ஊருக் குப் புதுசு என்று சொல்கிறாள். மீண்டும் சுற்றும் முற்றும் பார்க்கிறாள். சர்வானந்த் நிற்கிறான். அனன்யா சர்வானந்தைக் கூட்டி வந்து போனில் விலாசத்தைக் கேட்க வைத்து விடுகி றாள். சர்வானந்தோ அனன்யா யார் என்று தெரியாமல் உதவி செய்யப் போகிறார். நிறுவனத் துக்கே அனன்யாவைக் கூட்டிச் சென்று விடுகிறான். பின்பு நிறுவனத்தில் இருந்து அனன் யாவின் அக்காவின் வீட்டுக்குக் கூட்டிச் சென்று விடுகிறான். இதற்கிடையில் இருவரும் ஒரு வருக்கு ஒருவர் யார் என்று சொல்லிக் கொள்ளவும் இல்லை. பாதுகாப்பாக அனன்யாவை அக்கா வீட்டுக்குக் கொண்டு செல்வது வீட்டை அடைந்ததும் அனன்யா சர் வானந்த் மீது காதல் கொள்வது வரைக்கும் படத்தின் காட்சிகள் வித்தியாசமான முறையில் அமைந்திருக்கிறது.

பஸ்ஸில் பயணம் செய்யும் அந்த சோடிக் காதல் ஜெய் - அஞ்சலி காதல். ஜெய்யை கடைசிவரை என்னோடு குப்பை கொட்டுவாயா என்று கேட்டுவிட்டு அப்படின்னா ஐ லவ் யூ என்று அலட்சியமாகச் சொல்லும் அஞ்சலி. இவர்கள் காதலும் வித்தியாசமாக நகர்கிறது. இவர்கள் மட்டும் இல்லாமல் பஸ்ஸில் வரும் ஒரு கல்லூரி மாணவன், மாணவிக்கிடையே ஏற் படும் ஈர்ப்பு, பயணம் முடிவதற்குள் காதலாய் மாறி ஏற்படும் தவிர்ப்பை பஸ்ஸூக்குள் பார்க்கலாம்.

புது மனைவியைப் பிரிய முடியாமல் பஸ் ஏற வரும் கணவன் பஸ்ஸில் மனைவி ஏறிய தும் தனது முடிவை மாற்றிக் கொண்டு மனைவியுடன் சேர்ந்து போகும் காட்சியுடன், ஜெய்யின் ஊர்க்கார பெரியவர் வெளிநாட்டில் 5 வருடங்கள் வேலை செய்துவிட்டு முதன் முதலில் பிறந்த குழந்தையைப் பார்ப்பதற்கு அதே பஸ்ஸில் ஊருக்கு வரும் பாசக்கார அப்பா என்று பஸ்ஸில் ஒரு கூட்டம் பயணிக்கிறது. படத்தின் கதை வசனங்கள் அற்புதம். அனன்யா தன் அக்காவிடம் ஒரு நிமிடம் பெண் பார்க்க வந்தவருக்கு ரீ கொடுத்து விட்டு அவரைப் பிடித்திருக்கிறது என்று சொல்லித் திருமணம் செய்து கொண்டு இருக் கின்றாய். ஆனால் நான் அவளோடு பயணித்திருக்கிறேன் என்று அனன்யா சொல்வதும், கோபம் வந்தால் உடனே கோபப்பட்டு விடு அதை விட்டு விட்டு ஏதாவது ஒரு நாள் உனக்காக நான் எவ்வளவு விட்டுக் கொடுத்து இருக்கின்றேன் என்று சொல்லாதே என்று ஜெய் யிடம் அஞ்சலி சொல்வதும் படக் காட்சிகள் படத்துக்கு மெரு கூட்டுகிறது. அதாவது காதல் வாழ்வியலில் நிதர்சனங்கள் ஆகும். படத்தின் ஒளிபரப்பு வேல்ராஜ். தனது பெயரை இந்தப் படம் பேசும் என்பதில் ஐயமில்லை. அதாவது இரு பஸ்சும் நேருக்கு நேர் மோதி விபத் துக்குள்ளாகும் காட்சியை தரமாக ஒளிப்பதிவு செய்திருக்கிறார். ஒரு பஸ்ஸில் எத்தனை பேர் இருப் பார் கள். அத்தனை பேரையும் இருத் திப் படத்தில் சின்ன கியூட் காட்சிகளின் படத்தை நிலை நிறுத்தி இருக்கிறார். பஸ் ஸூக்குள் ஒவ் வொருவரும் தாம் போய்ச் சேரும் இடம் வரும்வரை என்ன என்ன செய்வார்கள் என்பதில் முழுமை யான காட்சிகளைக் கொண்டு வந்து கொட்டி இருக்கிறார். படத்தைப் பார்க்கின்றபோது நாமும் பஸ்ஸில் போகின்றது போலான உணர்வை ஏற்படுத்தி இருப்பது பாராட்டுக்குரியது. கண்டிப்பாகப் பஸ்ஸில் பயணம் செய் பவர்களும் பயணிகள் பஸ்ஸை ஓட்டுபவர்களும் காதலர்களும் பார்க்க வேண்டிய படம். ஒவ்வொரு காட்சி அமைப்புக்களையும் செதுக்கி இருக்கிறார் என்றால் மிகை ஆகாது. அதற்கு மேல் உள்ளது. சினிமா வரலாற்றில் வித்தியாசமான கதையைச் சொல்லி சமூகத்துக்கு வேண்டப்பட்ட கதையைச் சொல்லி அழகாக காட்சிப் படுத்திய திறமை இயக்குநர் சரவணனைச் சேரும் என்பதில் ஐயமில்லை. - குமார்.

# ஈழத் தமிழரின் அரசியல் பிரச்சினையும் சர்வதேசமும்

ஈழத்தமிழர்களுக்கு இலங்கை அரசால் மேற்கொள்ளப் படும் அடக்கு முறைகளையும் அழிவுகளையும் உலகில் சில நாடுகள் செய்தியாக மட்டும் கருதுகின்றன. வேறு சில நாடுகள் இலங் கையுடன் பேரம்பேசும் பொருளாகக்கருதுகின்றன. சில நாடுகள் அதனை மனித உரிமை மீறல் எனக்கண்டிக்கின்றன இந்தியா அரசு நுகர்வுப் பொருளாகப்பார்க்கின்றது. எல்லா நாடுகளும் மொத்தத்தில் தமது நாட்டின் நலன்சார்ந்த வகையிலையே செயற்படுகின்றன.



இந்த நிலையில் சர்வதேசம் தமிழ் மக்களுக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தர ஒன்றுபட்டுச் செயற்படாது என்ற உண்மையை ஈழத்தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அண்மையில் ஆஸ்திரேலியா நாடாளுமன்றில் ஈழத் தமிழர் தொடர்பான தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது ஆச்சரியப்படக் கூடியது அல்ல. ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றின் அது ஈழ அகதிகளுக்குப் புகலிடம் கொடுக்க வேண்டியநிலை ஏற்படும். அதனைத் தடுப் பதற்கே தமிழருக்கு எதிரான மனிதகுல நிந்திப்புக்குக் குரல் கொடுக்கவில்லை.

ஆஸ்திரேலியா அரசின் குடிவரவுக் கொள்கையும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களை வெகுவாகப் பாதிக்கிறது. அதாவது இங்கு கல்வி கற்றுச் சமூகத்துக்கு வேண்டிய மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள் பணவசதி உடையோரை விசேட குடியுரிமை வழங்கி எமது பிரதேசத்தில் இருந்து அகற்றுகின்றது.

இதனால் எமது பிரதேசத்தின் சமூக அபிவிருத்தி பின்னோக்கிச் செல்கின்றது. யுத்தத்தில் குண்டுவீசி அழிப்பதை விட யுத்தத்துக்குப் பின்னான சூழலில் சமூகத்துக்கு மிகவும் தேவைப்படும் மனித வளத்தைச் சுரண்டுவது யுத்தப் பயங்கர வாதத்துக்குப் பின்னான பயங்கரவாதம் ஆகும்.

இதனை தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் ஆஸ்திரேலிய அரசு செய்துவருகின்றது. இலங்கை அரசுடன் இணைந்து ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல எத்தனிக்கும் சாமானிய மக்களைக் கொழும்பு, நீர்கொழும்புப் பகுதியில் குழந்தைகள் உட்பட கைது செய்ய உறுதுணையாக இருந்தது. இதனாலேயே இலங்கையின் இராஜதந்திரம் மிகவும் சிறப்பானது.

அதாவது ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகச் செல்ல எத்தனிப்பவர்கள் கைது என்பது ஆஸ்திரேலியா அரசைக் குளிரவைக்கும் .

இலங்கையில் ஒரு வைத்தியர் சராசரி 10,000 பேருக்காவது சிகிச்சை அளிப்பார். எனவே இலங்கையில் இருந்து ஒரு வைத்தியரை ஆஸ்திரேலிய அரசு வதிவிட அனுமதிகொடுக்கும் போது குறைந்தது 10 பொதுமக்களுக்காவது வதிவிட அனுமதி கொடுத்தல் வேண்டும். மாறாக தகமை, செல்வம் அடிப்படையில் தனிமனித உரிமை மீறலாகவே அவர்களது குடிவரவுக் கொள்கை உள்ளது.


வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் ஆஸ்திரேலியா போன்று பல நாடுகளுக்கு புலம்பெயர்ந்து வாழ விரும்பவில்லை. மாறாக தமது சொந்த மண்ணில் அந்நிய நெருக்குவாரம் இன்றி வாழ விரும்பு கின்றனர். இதற்கு குந்தகமான நடவடிக்கைகளில் அதாவது யுத்தப் பயங்கரவாதத்துக்குப் பின்னான பயங்கர வாதமான சமூகத்தின் மனித வளத்தினை அகற்றல், சமூக வளங்களைச் சுரண்டல், சமுகத்தை அடிமைப்படுத்தல் என்பனவற்றைத் தவிர்த்தல் வேண்டும். மேலும் சுயமாக உற்பத்திகளை மேற்கொண்டு விவசாயம் செய்து தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு தமது வாழ்விடத்தில் தமது பாரம்பரியக் கலாசாரங்களைப் பேண வழிவகைகள் செய்யப் படல் வேண்டும்.

யுத்தத்துக்குப் பின்பான மீளக்குடியேற்றத் திலும் யுத்தத்துக்குப் பின்பான பயங்கரவாதம் தாக்கம் செலுத்தக்கூடாது. மீளகுடியேற்றம் என்பது தமது இடங்களில் போய் அமர்தல் என்ற அர்த்தம் அல்ல (Resettlement) மாறாக அவர்களது சமுக, உளநலப்பிரச்சினைகள், பாதுகாப்பு, நியாயம் என்பனவற்றுக்கும் ஆன தீர்வும் அடங்கியது.

இதற்கு பல சமூக அமைப்புக்களின் உதவி இன்றி அமையாது. அடுத்து குறைந்தபட்சம் 5 வருடங்களுக்காவது சமுக ஆதரவு தேவைப்படும்.

மருத்துவர் சி.யமுனானந்தா

# ஆண்களின் விஷமமான வார்த்தைகளை நம்பி பெண்களே ஏமாறாதீர்கள்!



சமூகத்தை உற்றுநோக்கிப் பார்க்கும்போது பொதுவாகப் பெண்களே ஆண்களால் அதிகமாக ஏமாற்றப்படுபவர்களாக இருப்பது அனைவருக்கும் நன்கு புரியும். ஏமாற்றப்பட்ட பெண்கள் என்ற நிலையில் அவதானித்துப் பார்த்தால் சில பெண்கள் தங்களின் அறியாமையினால் ஏமாற்றப்படுள்ளனர். சிலர் நட்புடன் பழகிப் பின்னர் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

யாழ்.குடா நாட்டைப் பொறுத்தவரையில் நன்கு கல்விகற்ற, நல்ல குடும்பப் பின்னணியில் வளர்ந்த பெண்கள் கூட ஏமாற்றப்பட்டுள்ளனர். '' இக்கரை மாட்டுக்கு அக்கரைப் பச்சை'' என்ற பழமொழிக்கு அமைய அருகில் உள்ள நம்பிக்கைக்குரிய தமது உறவுகளை நேசிக்காமல் தூர உள்ளவர்களை நேசிப்பதனால்தான் இந்த விளைவு.

விசேடமாக வடக்கு வாழ் தமிழ்ப் பெண்கள் பிறமொழி இனத்தைச் சேர்ந்தவர்களுடன் நட்பை ஏற்படுத்தி, பின்னர் அந்த நட்பு நாள்கள் செல்லச் செல்ல ''கண்டதே காதல் கொண்டதே கோலம்'' என்ற பழமொழிக்கு இணங்க ஆழமான காதலாக மலர்கின்றது.

பெண்ணின் மனதைக் கவரும் வகையில் அன்பே, செல்லம் என்று அவர்களது உதட்டில் வரும் அரை குறைச் சொற்களை அன்பான வார்த்தைகள் என நம்பி உள்ளத்தில் விஷம் நிறைந்த எண்ணங்களை அறியாமல் திருமணமான ஆண்களிடம் கூடப் பல பெண்கள் ஏமாந்து போகின்றனர்.

உள்ளத்தில் அன்புடன் உதடுகளில் கடினமான வார்த்தைகளைப் பேசும் உறவுக்கார ஆண்களை வெறுத்து அவர்களது உள்ளன்பைப் புரிந்துகொள்ளாமல் வேற்று ஆண்களின் அன்போடு கூறும் விஷமான வார்த்தைகளை நம்பி ஏமாறுகின்றனர். பெரும்பாலான பெண்கள் ஆண்களின் கவர்ச்சிகரமான உரையாடல்களை நம்பியே ஏமாறுகின்றார்கள். அதற்குக் காரணம் அவர்களின் அறியாமையே. இதனால் அநேக தற்கொலைச் சம்பவங்கள் கூட நேரிடுகின்றன.

பெண்கள் ஏமாற்றப்படுவதற்குப் பலதரப்பட்ட காரணங்கள் இருந்தாலும் தொலைபேசி மூலமாக ஏற்படுத்தப்படுகின்ற வேண்டத்தகாத தொடர்புகளைத் தவிர்த்துக் கொள்வதன் மூலம் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளாலாம். அதுமட்டுமன்றி, பெண்களின் அன்றாட நடவடிக்கைகள்,தொலைபேசித் தொடர்புகளில் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் அவதானமாக இருப்பார்களானால் ஏமாற்றப்படும் பெண்களின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ள வாய்ப்புகள் உண்டு.

(ஜீ.எஸ்),
சுன்னாகம் (பொலிஸ் உத்தியோகத்தர்.)

# தேடுகிறேன் என் தாயை...



பொறுமையாய் எம்மை
பூமியில் ஈன்றவள்
பூமியில் ஈன்றெம்மை
பூவாகக் காத்தவள்
உதிரத்தைப் பாலாக்கி
உண்ணக் கொடுத்து
அறிவைப் புகட்டி
அன்பைப் பொழிந்தவள்
கற்றுச் சிறந்திட
கதை பல சொல்லி
தலைவாரிப் பூச்சூட்டி
பள்ளிக்கு அனுப்பியவள்
வழி மேல் விழி வைத்து
வாசலிலே நின்று
என் வரவுக்காய்
காத்து நின்றவள்
தன்னை உருக்கி
என் நல்வாழ்வுக்காய்
ஒளிதந்து
நல்வழி காட்டியவள்
வறுமையின் பிடியிலும்
வளமாக் காத்தெம்மை
வாழ்வித்த தாயவள்
நான் மனைவியாய்
மருமகளாய் மாமியாய்
பாட்டியாய்
வலம் வந்தாலும்
என்றும் மகளாய்
மடியில் தலைசாய்த்து
உறங்குவதற்காய்
தேடுகிறேன் என்
தாயவளை

-எஸ்.கலாமணி,
வட்டாரம்.08, மண்டைதீவு.

# பெண்களின் முன்னேற்றத்துக்கு தடை படிப்பின்மையே


ஜீவன், மானிப்பாய்.

ஒரு பெண்ணின் முன்னேற்றத்தைத் தடை செய்வது படிப்பின்மையே. படித்தால்தான் அதற்கேற்ப வேலைக்குப் போகமுடியும். நல்ல வேலைக்குப் போனால்தான் நிறைய சம்பாதிக்க முடியும்; தன்னைக் காப்பாற்றிக் கொள்ளமுடியும். ஆனால் இன்று தன் காலில் நிற்கும் பெருமையை நம் நாட்டுப் பெண்களுக்கு இல்லாமல் செய்து விட்டோம். பெண்களை சார்ந்து நிற்கின்ற ஒரு சமுதாயமாகவே உருவாக்கிவிட்டோம்.

ஒரு பெண்ணோ, ஆணோ தன்காலில் நிற்கும் போது; தன்னால் சம்பாதித்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை வரும்போது அவர்களுக்கு சுதந்திரம் கிடைக்கிறது. அவர்கள் யாரையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கு சமூக மதிப்பு, சமூகத்தில் பெருமை கிடைக்கிறது. ஊரும் உலகமும் வேலைக்குப் போகும் பெண்களைப் பெருமையுடன் பார்க்கும். வேலைக்குப் போகும் பெண்களுக்கும் வேலைக்குப் போகாத பெண்களுக்கும் கொடுக்கப்படும் மரியாதையும் வெவ்வேறானது.சம்பாதிக்கின்ற மருமகளை மாமியாரும் அதிகம் அதட்டுவதில்லை. மாறாக மதிப்பும் மரியாதையுமே கிடைக்கின்றன.

எனினும் ''ஆண் பிள்ளையானாலும் சாண் பிள்ளை''என்று ஆண்பிள்ளையைத் தலையில் தூக்கி வைத்து ''உன்னால் ஒன்றும் செய்ய முடியாது; ஏனெனில் நீ ஒரு பெண்'' என்று சொல்லாமல் சொல்கிறது சமுதாயம். எனவே முன்னேற விரும்பும் பெண்கள் இந்தச் சமுதாயப் பழக்க வழக்கங்களைக் கிள்ளியெறிய வேண்டும் அதற்கு முதலில் பெண்கள் படிக்க வேண்டும்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
'திலகம்',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .



# கங்காவின் கடிதங்கள்

அன்பின் கண்மணிக்கு,

கண்மணி நீ எழுதியதைப் போல் நானும் சிந்திக்கிறேன்தான். ஆனாலும் உன்னாலும் என்னாலும் இந்தச் சமுதாயத்தைத் திருத்த முடியாது. வெளிநாட்டுப் பணங்கள், வேகமாக வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள், எட்டப்பன் கூட்டத்தோடு கைகோர்ப்பது போன்ற காரணங்களின் வளர்ச்சிதான் இன்றைய இளம் சமுதாயம் கெட்டுச் சீரழிந்து போவதற்குக் காரணமாக அமைகின்றது. சமுதாயத்தில் திருத்தப்பட வேண்டியவர்கள் நிறையப் பேர் இருக்கின்றனர். இவர்களைத் திருத்துவது யார்? பண்பாட்டுக்கும் கலாசாரத் துக்கும் பேர்போன வன்னியிலேயே இன்றைக்குச் 'சீரழிவுகளின்' தாயகம் என்று கூறும் அளவுக்கு நிறைய அக்கிரமங்கள் நடக்கின்றன. என்றாலும் தட்டிக்கேட்க யாருமே முன்வரமாட்டார்கள். காரணம் பயம். எம்மவர்களே எட்டப்பன் கூட்டத்துடன் சேர்ந்து தம் மக்களையும் தன் இனத்தையும் சீரழிக்கின்றனர். எவ்வளவோ காலங்களாக எம் மக்கள் நிறையத் துன்பங்களை அனுபவித்துவிட்டனர்.

இனியாவது நிம்மதியாக இருப்போம் என்றால்... அதுவும் இல்லை. பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பப் பயம், வீட்டில் தனியாகப் பெண்கள் இருக்கப் பயம், இரவானால் மர்ம மனிதர்களால் பயம், எல்லாவற்றையும் விட நம் ஊர் இளைஞர்களே தம் மக்களைக் குடித்துவிட்டுத் தாக்குவதும், கெட்ட வார்த்தைகளால் திட்டுவதும் வேதனையான விடயங்கள். ஒரு நிமிடம் நாம் கடந்து வந்த பாதைகளைத் திரும்பிப் பார்ப்போமானால் இவை எல்லாவற்றையும் நடக்காமல் தடுக்க முடியும். என்னதான் இருந்தாலும் 'உடையவன் இல்லாவிட்டால் ஒரு முழம் கட்டைதான்'' என்பதை நீ புரிந்துகொண்டால் சரி.

மீண்டும் மறுமடலில் சந்திக்கும் வரை

அன்புடன்....
கங்கா.



இன்று பிறந்த நாள்

# அகிம்சை குறித்த காந்தியின் சிந்தனைகள்

இன்று மகாத்மா காந்தியின் 142 ஆவது பிறந்த தினம். சமகால இந்திய மெய்யியலின் முன்னோடியாகவும், ஆன்மீகவாதியாகவும் அகிம்சையை ஆயுதமாகக் கொண்டு இந்திய தேசத்துக்கு அந்நிய ஆதிக்க சக்திகளிடம் இருந்து விடுதலை பெற்றுக் கொடுத்தவரும் இந்திய தேசத்தின் தந்தை எனவும் மகாத்மா எனவும் பல்வேறுபட்ட சிறப்பியல்புகளை உடைய மோகனதாஸ் காந்தி பிறந்த தினம் இன்றாகும். இன்றைய தினமானது இந்தியாவின் தேசிய விடுமுறையாக கொண்டாடப்படும் அதேவேளை உலகம் முழுவதும் சர்வதேச வன்முறையற்ற தினம், அல்லது அகிம்சைகள் தினம் எனவும் கொண்டாடப்படுகின்றது. இந்த தினமானது ஐக்கிய நாடுகள் சபையால் முதல் முறையாக 2007 ஆம் ஆண்டு ஆவணி 15 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது.

இன்றைய புனித நாளில் காந்தியினுடைய அகிம்சை குறித்த சிந்தனைகள் புரிந்து கொள்வது இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றன. காந்தி அகிம்சையின் ஊடாகவே இந்திய விடுதலையையும் சமூக விழிப்புணர்வு, மக்களினுடைய மனங்களிலே ஒழுக்க விழுமியங்கள், சத்தியம், உண்மை, மனித வாழ்வின் அர்த்தங்கள் போன்ற பல்வேறுபட்ட பண்புகளை விதைந்துள்ளார்.

இன்று உலகம் வன்முறையின் பிடிக்குள் அகப்பட்டுள்ளது. ஒவ்வொருவரதும் சிறு செயல்கூட வன்முறையைத் தூண்டிவிடுகின்றது. தமது உரிமைகளை நிலை நாட்டிக் கொள்வதாக அடுத்தவரின் உயிரை பறிக்கும் அளவுக்கு இன்றைய மனிதர்களின் செயற்பாடுகள் காணப்படுகின்றன. தம்மை அழித்து மற்றவர்களை வாழவைத்தல், தனக்காக வாழாது பிறருக்காக வாழுதல் எனும் நிலைப்பாடு அற்றுப் போய், தான் வாழ்வதற்கு மற்றவர்களை அழித்தல் எனும் நிலைப்பாடுகளுக்கு இன்றைய மனிதர்கள் அனைவருமே தள்ளப்பட்டுள்ளனர்.

இன்று வன்முறையே உலகின் அபாயமாகவும் சவாலாகவும் விளங்குகின்றது. இந்த நிலையில் இருந்து விடுபடுவதற்கு தார்மீக நெறியாக காணப்படுவது அகிம்சை நெறியே ஆகும். ஒருவருக்கு ஒருவர் பரஸ்பர நல்லெண்ணத்துடன் வாழ்வதற்கு அகிம்சையைக் காட்டிலும் உறுதியான அடிப்படை வேறு எதுவும் இல்லை. நமது நாட்டின் எதிர்காலம், இனிவரவிருக்கும் புதிய பரம்பரையைப் பொறுத்துத் தான் இருக்கின்றது. இந்தப் புதிய பரம்பரை அகிம்சையால் கவரப்பட்டு அந்த வழியில் உறுதியில் நின்றால் தான் அதனால் நன்மை விளையும் எனவே மக்களிடையே அகிம்சை பற்றிய சிந்தனைகளைத் தெரிவுபடுத்தி அதனூடாக மக்களுடைய ஒழுக்கவி யல் சிந்தனைகளை மேம்படுத்தி மனிதாயத்தைக் கட்டி வளர்த்து ஓர் நிலையான, நீதியான அரசியல் ஜனநாயகத்தை உருவாக்கி இந்த நாட்டில் மட்டுமன்றி உலகிலுமே ஓர் அமைதியை சமாதானத்தை உரு வாக்க அனைவரும் முயல வேண்டும்.

அகிம்சா தர்மம் என்பது ''எல்லா வகையான குணநலகேடுகளும் ஒடுங்கிய நிலையே ஆகும்'' எந்த உயிரையும் கொல்லாது எந்த உயிரினத்துக்கும் தீங்கு விளைவிக்காது மனதாலும் சொல்லாலும் செயலா லும் பிறருக்கோ அல்லது பிற உயிரினங்களுக்கோ வருத்தமோ, வேதனையோ நேராமல் நடந்து கொள்வது அகிம்சா தர்மம் எனப் பொதுவாக வரையறுக்கலாம். அகிம்சா தர்மத்தின் பிரதான பண்புகளாகக் கொல்லாமை, துன்புறுத்தாமை, பொய் சொல்லாமை, தீமை செய்யாமை என்பவற்றையும் அநீதி, ஏற்றத்தாழ்வு, சுரண்டல் முதலியவற்றைத் தவிர்த்தல், அன்பு, அருள், இரக்கம், . தொண்டு, இன்சொல் பேசுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.


காந்தியைப் பொறுத்தவரை அகிம்சை இறைவனுடன் சங்கமிப்பதற்கான வழியாகவும் உலகியல் இலக்குகளை வென்றெடுப்பதற்கான வழியாகவும் கருதுகின்றார். மேலும் ''அகிம்சை அமைதிக்கும் முடிவான விடுதலைக்குமாய் தனிமனிதனால் அனுஷ்டிக்கப்படும் விழுமியமன்று. அது உறுதியுடனும் மனித மாண்புகளுடனும் வாழ்ந்து பன்நெடுங்காலமாக பேராவல் கொண்டிருந்த சாந்தி நிலையினை அடைவதன் பொருட்டாய் முன்னேறிய முயற்சிக்குரிய சமூகத்தின் வாழ்க்கை நியதியே ஆகும் என்றார்.

மனிதர்கள் உபயேகிக்கக் கூடிய சக்தி அகிம்சையே ஆகும். இது மனிதனின் அறிவாற்றலினாலும் செயற்பாட்டாலும் கண்டுபிடிக்கப்பட்டதாகும். உண்மையான அகிம்சையை அனுபவிப்பவருக்கு உலகமே அடிபணிந்து கிடக்கிறது என்கிறார்.

ந.சிவகரன்
விரிவுரையாளர், மெய்யியல்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

*

# இன்றைய உலகம் வேண்டி நிற்பது...



இன்று மகாத்மா காந்தியின் 142 ஆவது பிறந்த தினமாகும். இந்தத் தினத்தின் முதன்மையை மக்கள் சமுதாயத்துக்கு தெரிவிக்க வேண்டிய அவசியம் உள்ளது. இன்றைய உலகம் வேண்டி நிற்பது அமைதி ஆகும். இந்த அமைதியை நிலைநாட்ட நாம் ஒவ்வொருவரும் அயராது பாடுபடவேண்டும். உண்மை, அன்பு, அகிம்சை, கள்ளுண்ணாமை, இரக்கம், பணிவு போன்ற மேலான பண்புகளை நாம் வளர்க்க வேண்டும்.

இன்றைய உலகம் இவ்வாறு இருப்பதற்கு நாம் அனைவரும் நேரடியாகவோ மறைமுகமாகவோ காரணமாக உள்ளோம். வறுமையும், அநீதியும், சுரண்டலும், ஏற்றத்தாழ்வும் வன்முறையும் மிக்க இன்றைய உலகை மாற்ற அமைதி மற்றும் அகிம்மையை மிக்க அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையை நாம் மேற்கொள்ள வேண்டும். ஒருவரது வாழ்க்கை முறை மாறுவதாலேயே உலகம் உடனடியாக மாறிவிடாது. ஆனால் ஒருவர் மாறும் அளவுக்கு உலகம் சிறிதளவாவது மாறவே செய்யும். அவர் முன் மாதிரியாக அவரைப் பிறர் பின்பற்றிவிடலாம். அது மக்கள் இயக்கமாக மாற்றங்களை விரைந்து உண்டாக்கலாம். தற்சார்பான, சுதந்திரமான, எளிய சுரண்டலற்ற, வன்முறையற்ற, சுற்றுச் சூழலை நேசிக்கும், மானிடரை மையமாகக் கொண்ட, ஏழைகளை மற்றும் நசுக்கப்பட்டோரை விடுதலைப்படுத்தும் வாழ்க்கை முறையே அமைதியை உண்டாக்கும்.

இந்த விடயங்களை அடிப்படையாகக்கொண்டு இந்தியா சுதந்திரம் அடையவேண்டும். மக்கள் அடிமை வாழ்வு வாழக்கூடாது என்ற பரந்த மனப்பான்மையுடன் அகிம்சை வழியிலே போராடி வெற்றிபெற்ற மகான் மகாத்மா காந்தி. இவர் ஒத்துழையாமை, உப்புச் சத்தியாக்கிரகம் போன்ற போராட்டங்களை சாத்வீக வழியில் மேற்கொண்டு 'வாய்மையே' உலகில் உயர்ந்த ஆயுதம் என்பதை நிரூபித்துக் காட்டினார்.

மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகம் உலகுக்கு பல வாழ்க்கைமுறைக்கு வழி காட்டியுள்ளது. சத்தியாக்கிரகம் மனித வாழ்வுக்கு இன்றியமைதாதது. உலகிலுள்ள சமய போதனைகளை எல்லாந் திரட்டிப் பார்த்தால், அவற்றில் சத்தியாக்கிரகம் மிளிர்வதைக் காணலாம்.

மனித வாழ்க்கையைச் செந்நெறியில் நடத்த ஏற்பட்ட இயற்கை அறம் சத்தியாக்கிரகம் ஆகும். சத்தியாக்கிரகம் அன்பு, தியாகம், பொறுமை, எவர்க்கும் இன்னா செய்யாமை முதலியவற்றால் ஆக்கப்பட்ட ஒன்றாகும். இது மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகின்றது.

இந்தச் சத்தியாக்கிரகம் என்ற வட சொல்லின் நேர்பொருள் 'சத்தியத்தில் ஊன்றி நிற்றல்' எனப் பொருள் விரிகின்றது. அகிம்சையின் செயல் வடிவமாகவே சத்தியாக்கிரகம் காணப்படுகின்றது. சத்தியாக்கிரகம் உண்மையை அடித்தளமாகக் கொண்டே எழுகிறது. தனியொரு மனிதன் தன் சொந்த வாழ்வில் அகிம்சையை எந்த அளவுக்குப் பின்பற்ற முடியும் என்பதற்குக் காந்தியடிகள் வாழ்வே சான்று.

கண்ணுக்குப் புலப்படாத அணுவின் ஆற்றல் அளவற்றது. எனின், உயிரினங்களிலேயே மிகவும் வளர்ச்சியடைந்தவன் எனக்கூறப்படும் மனிதனுக்குள் எவ்வளவு ஆற்றல் அடங்கியிருக்கக்கூடும் என்பதைக் காந்தியின் வாழ்வு கோடிட்டுக் காட்டும். மனித சக்திக்கான மூலம் அன்பேயாகும். தனிமனித, சமுதாயச் சிக்கல்களைத் தீர்க்கவும், மாற்றங்களை ஏற்படுத்தவும் போருக்கு மாற்றாகவும் அகிம்சையை ஓரளவுப் பயிற்சி பெற்ற மக்கள் கூட்டம் வெற்றிகரமாகப் பயன்படுத்த முடியும் என்பதனைக் காந்தி செய்து காட்டினார்.

வாழும் வகையறியாது சிதறியிருந்த பாரத தேசத்தைத் தனியொருவராக நின்று மக்களை ஓரணியில் திரட்டி சுதந்திரத்தை வென்றெடுத்த மகாத்மா பிறந்த இந்த நன்னாளில் அவருடைய நற்பண்புகளை நாமும் உள்வாங்கி சத்தியம் பேசி சரித்திரம் படைப்போம். *

செல்வி.த.விமல்ஷினி

# விற்பனைப் பிரதிநிதி

## (Sales Representative) தேவை

இலங்கையின் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றான ஹேலீஸ் கொன்ஸ்யுமர் *(Hayleys Consumer)* நிறுவனத்தின் பொருள்களை யாழ். மாவட்டத்தில் சந்தைப்படுத்த தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### தகைமைகள்


★ கல்வித்தகைமை சாதாரண தரத்தில் (O/L) சித்தி
★ விற்பனை, சந்தைப்படுத்தல் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
★ தமிழ், ஆங்கிலத்தில் தேர்ச்சி
★ கணினி பற்றிய அறிவு விரும்பத்தக்கது

விண்ணப்பிக்க விரும்புவோர் 05.10.2011(புதன்கிழமை) காலை 9.00 மணி தொடக்கம் **"ஹேலீஸ் காட்சியறை"**( *The World of Hayleys*) இல. 51. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெறும் நேர்முகத் தேர்வுக்கு உரிய ஆவணங்களுடன் சமுகம் தரவும்.

**தொடர்புகளுக்கு: விற்பனைப் பிரிவுத் தலைவர்,**
**ஹேலீஸ் கொன்ஸ்யுமர்,**
**தொ.பே : 077 7328463, 021 2221292**

Hayleys CONSUMER

# விரைவான பிரித்தானிய பட்டப்படிப்பு



2011ம் ஆண்டு உயர்தர மாணவர்களுக்கான புதிய வகுப்புகள் உடனடியாக ஆரம்பம்...

CTH
CONFEDERATION OF TOURISM & HOSPITALITY

## Hotel Management
## Tourism Management

| O/L | | A/L | |
|---|---|---|---|
| Foundation | Diploma | Advanced Diploma | BSc (Hons) Degree |
| 4 Months | 9 Months | 9 Months | 12 Months |

**Postgraduate Diploma** in Hospitality & Tourism Management
**Qualification leads to MSc or MBA, Recognition in the Industry & Migration Opportunity**

**தொ. எண்: Prashanth - 077 765 3233**

UCB Roches ECU University of Sunderland Middlesex University TVU London

**Thames College**
153 1/1, High Level Road, Nugegoda
011 5737307 / 011 2825895
info@thamescollege.lk
www.thamescollege.lk

## காணி விற்பனைக்கு

ஊரெழு கிழக்கில் வீட்டுடன் அமைந்த காணி 7¾ பரப்பு விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

**தொடர்பு: 0729664616,0757417536**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஏ-9 கண்டி வீதியில் மாம்பழம் சந்திக்கும் புங்கன்குளம் சந்திக்கும் இடையில் நன்னீர்க் கிணற்றுடன் 6 பரப்பு ஒரு குளி வெற்றுக்காணி உடன் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0770557486, 0713899476**

## V.I.M.B திருமண சேவைப் பிரிவு
### மணமக்கள் தேவை www.keethannet.com

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1984, 7 இல் செவ்வாய் சி.பா.30 ஆஸ்திரேலிய P.R உடைய மணமகளுக்கு மணமகன் தேவை. அமெரிக்க P.R உடைய 1984 புனர்பூசம் இரண்டாம் பாதம் MEB ஆசிரிய மணமகளுக்கு மணமகன் தேவை. மற்றும்

1984 சுவாதி இரண்டாம் பாதம் BBA, MSc, UK, PR மணமகளுக்கு மணமகன் தேவை.

1976 சுவாதி இரண்டாம் பாதம் கிரகபாவம் 55 Computer Programer மணமகளுக்கு மணமகன் தேவை.

1986 பரணி 1ஆம் பாதம் 5' 9" USA, PR உடைய சர்வதேச கம்பனியில் பணிபுரியும் மணமகளுக்கு உள்நாட்டில் அல்லது வெளி நாட்டில் உள்ள மணமகன் தேவை.

மணமகன் இருவர் கொழும்பு வந்துள்ளார்கள், ஏனையோர் வரவுள்ளார்கள்.

**வாணி சர்வதேச திருமண சேவை நிலையம்**

பதிவுக் கட்டணம் செலுத்தியபின்னரே எமது சேவைக்கு உற்படுத்தப்படுவீர்கள். கட்டணம் உள்நாடு 2000/=, வெளிநாடு 4000/=

**உள்நாட்டுக் கிளைகள்:-**

| | |
|---|---|
| திருகோணமலை | : 0778501013 |
| மட்டக்களப்பு | : 0772848495,0771307185 |
| வவுனியா | : 0773380265, 0771307185 |
| மன்னார் | : 07761848434 |
| முல்லைத்தீவு | : 0771307185 |
| கிளிநொச்சி | : 0778501013 |
| வடமராட்சி | : 0776184434 |
| தென்மராட்சி | : 0771307185 |
| தீவுப் பகுதி | : 0776184434,0771307185 |

## விற்பனைக்கு

இசைக் குழுவுக்கு ஏற்ற பொருள்கள், இசைக் கருவிகள், ஒலிபெருக்கி சாதனங்கள் உட்பட அனைத்துப் பொருள்களும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0771693478**

# STUDY IN UK

University of Bedfordshire

**Spot Admissions for February 2012 Intake**

**17th October 2011**
**at Galle Face Hotel**
**3.00pm to 5.00pm**

**Postgraduate / Undergraduate Courses**
MBA, Business & Management, Computing, Marketing, Information System, Finance & Accounting Law, Media, Art & Design, Education, Nursing, Biotech, Public Health, Psychology, Pharmacology, Tourism

flex Institute
Step Towards a Bright Future
4, IBC Road, Colombo 6.
**Hotline: 0777-761346**
E-mail: flexinstitute@sltnet.lk
Web:www.flexinstituete.lk

FLEX Graphic

# மணி விழா நாயகனுக்கு வாழ்த்துக்கள்




எமது பாடசாலையின் முன்னோடியும் ஆளுமைப் பண்பு மிக்க
ஆசானும் மணி விழா நாயகனுமான

## உயர்திரு. பு.செல்லத்துரை (J.P.) அவர்கள்

ஆரோக்கியமான வாழ்வில்
பணிகள் பல செய்து
பாடசாலைப் பணியை
பார்போற்ற பணியாற்றிய
பண்பாளனுக்கு நிறைவான
வாழ்த்துக்கள் பல
"சமூகத்தின் ஒளியாக மலர்ந்திடவே வாழ்த்துகின்றோம்"

வாழ்த்துவோர்:
உப அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/ கைதடி கலைவாணி, வித்தியாலயம், கைதடி

# Midea Electro Mart — LG Authorized Dealer for Abans Ltd. — Midea PC Show Room


e-mail: midea21@gmail.com www.mideamart.com

Branch:
**No: 04, New Market, Chavakachcheri.**
**T.P: 021 2270268, Fax: 021 2270129.**

**No: 1-1, 1-H, Stanley Road, Jaffna, Sri Lanka.**
**T.P: 021 2224566, Fax: 021 2221646.**

**தீபாவளியை முன்னிட்டு விசேட விலையில்....!**

| COMPUTER | INTEL DUAI CORE | INTEL DUAI CORE | INTEL CORE i3 | INTEL CORE i5 |
|---|---|---|---|---|
| Processor | Intel Dual core 3.0GHZ | Intel Dual core 3.0GHZ | Inter Core i3 3.GHZ(2ndGe) | IntelCore i5 2.8GHZ(2ndGe) |
| Mother board | Intel Chipset G41 -D3B | Intel Chipset G41 -D3B | Intel Board DH61WW | Intel Board DH61WW |
| Memory | 1GB DDR-III, 800MHZ | 2GB DDR-III, 800MHZ | 2GBDDRIII | 2GBDDRIII |
| Hart disk | 250GB SATA-7200RPM | 500 GB SATA-7200RPM | 500GB SATA-7200RPM | 500GB SATA-7200RPM |
| Disk drive | Samsung DVD Writer | Samsung DVD Writer | ATX 500W Gigabyte | ATX 500W Gigabyte |
| Casing | ATX 500W-Gigabyte | ATX 500W Gigabyte | Samsung DVD Writer | Samsung DVD Writer |
| Moniter | Viewsonic LCD 16" | LG LCD19" | LG LCD19" | Samsung LED19" |
| Key board | Optical mouse USB | Optical mouse USB | Optical mouse USB | Optical mouse USB |
| Mouse | Multimedia key board | Multimedia key board | Multimedia key board | Multimedia key board |
| Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker | Multimedia Speaker |
| Price | price =36900 | price= 39900 | price= 48900 | price=58900 |





**Terms & Contdition**
**3Years Manufacturer's warranty,**
**1 Year Service Warranty**

| Compaq 420 | Toshiba Satellite L635 | HP probook 4530s | HP 430 i5 Laptop | |
|---|---|---|---|---|
| Intel Core2 Duo 2.2GHz | Intel core i3 2.53 GHz, | IntelCorei3-2.10 GHz | Intel core i5 2.30GHz | Samsung LED 19" =12300 |
| Free Dos | Free Dos | Win7 Home pre | Free Dos | LG LED 19" =12200 |
| 2GB | 2GB DDR | 4GBDDR3RAM | Intel HD Graphics | Prolink 3.75G HSUPA = 5500 |
| 320GB HDD | H.D 500GB | 320GB HDD | RAM 2GB DDRIII | Alcatel 3.6mbps = 4900 |
| DVD Writter | DVD Writter | DVD Writter | H.D 500GB | HP 85A Toner =7600 |
| 796MB | Intel HD Graphics | Intel® HD Graphics 3000 | webCam | HP 12A Toner =7200 |
| webCamera With Mic | webCamera With Mic | HD Camera With Mic | Wifi | HP 35A Toner =7400 |
| LCD14.1" | LED 14.1. HD | LED 15.6" | DVD super multi | scx4521D3 Toner =9500 |
| Blue Tooth | Blue Tooth | Wifi, SRS Premium Sound | LED 14.1" HD | HP P1102 printer=10500 |
| WIFI | WIFI | F.Print | Mirophone | HP scanner G2410=6500 |
| Price=53900 | Price=57900 | Price=69900 | Price=75900 | |

A LIFE - TIME CHANCE

# STUDY MEDICINE

செப்டெம்பர் 2011ல் BELARUS பயணித்த எமது மாணவர் குழு

- பாடநெறி முற்று முழுவதும் ஆங்கிலத்திலேயே கற்பிக்கப்படும்.*
- பாடநெறிக்கான கட்டணம் Semester அடிப்படையில் செலுத்திக் கற்பதற்கான வசதிகள்.*
- அகில உலகிலும், இலங்கையிலும் Medical Council மற்றும் General Medical Council (UK), ECFMG-USA & WHO மூலம் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பு.

க.பொ.த. சா/த, உ/த ( London & Local A/L) மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். A/L பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் மாணவர்களும் நிபந்தனையின் அடிப்படையில் விண்ணப்பிக்கலாம்.


ராமசாமி அருன் ஸ்ரீ (இட்லண்ட் மத்திய கல்லூரி)


சித்து ப்ராங்க் (லைசியம் சர்வதேச பாடசாலை - வத்தளை)


சர்மிளா தர்மலிங்கம் (இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி - கொழும்பு)


சந்தியா வின்சன்ட் மரியநாயகம் (வேம்படி மகளிர் கல்லூரி - யாழ்ப்பாணம்)


ஸ்ரீதரன் சுஜான் பின்சித் (சென். மைக்கல் கல்லூரி மட்டக்களப்பு)

அகில உலகிலும், இலங்கையில் Medical Council, USA, UK, Australia மற்றும் WHO. மூலமும் அங்கீகரிக்கப்பட்ட MBBS / MD பட்டப்படிப்பு.

## PHILIPPINES
South-East Asia

**MD**
Doctor of Medicine
ANGLES UNIVERSITY FOUNDATION
MD Degree - 5 1/2 வருடங்கள்
முழுப் பயிற்சி நெறிக்கான கட்டணம் : 36,000 USD*
(வருடாந்தத் தவணை முறையில் செலுத்தலாம்)
ஆரம்பம் : நவம்பர் 2011

## BELARUS
(Eastern Europe)

**MD**
Doctor of Medicine
VITEBSK STATE MEDICAL UNIVERSITY
6 வருடங்கள் (ஆங்கில மொழி மூலம்)
முழு பயிற்சி நெறிக்கான கட்டணம் :
4,000 USD (ஒரு வருடத்திற்கு)
(வருடாந்தத் தவணை முறையில் செலுத்தலாம்)
முழுப் பயிற்சி நெறிக்கான கட்டணம் : 25,000 USD*
ஆரம்பம் : அக்டோபர் 2011

## NEPAL
(South Asia)

**MBBS/BDS**
UNIVERSAL COLLEGE OF MEDICAL SCIENCE
4 1/2 வருடங்கள் + 1 Year internship
(ஆங்கில மொழி மூலம்)
முழு பயிற்சி நெறிக்கான கட்டணம் :
MBBS - 56,000 USD
BDS - 26,000 USD
(வருடாந்தத் தவணை முறையில் செலுத்தலாம்)
ஆரம்பம் : அக்டோபர் 2011


Apply today Fly in 20 days

Colombo Ads - 077 244 24 25

PATHE ACADEMY
The People's Academy...
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION
Overseas Student Placement Department
111- 1/2, Maya Avenue, Kirulapona, Colombo - 06. Tel : 0112502012
For Admissions contact
0773017883
(Tamil/English)
www.patheacademy.org

## Sanken Lanka
*sky's the limit*

## வெற்றிடங்கள்



வடக்கு மாகாணத்தில் நமது கட்டுமான திட்டங்களில் பின்வரும் நிலையை எடுக்க தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த பொறுப்புமிக்க ஊழியர்கள் நமக்கு தேவை.

### பொறியியலாளர்கள் (Civil Engineers)

தகுதிகள்

- BSc Civil Engineering with experience.
- Diploma in Civil Engineering with 7 years experience.
- Departmental technical certificate.

### உதவிப் பொறியியலாளர்கள் (Assistant Engineers)

தகுதிகள்

- Diploma in Civil Engineering with experience
- NCT Civil or equivalent with 7 years experience.
- Departmental technical certificate.

குறிப்பு : ஓய்வுபெற்ற 65 வயதிற்கு உட்பட்ட அரசாங்க தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க தகுதியானவர்கள் : பெயர், முகவரி, தொடர்பு இலக்கம், இரண்டு உறவினர் அல்லாத சான்று பகிர்வோரின் விபரங்கள் உள்ளடங்கிய சுயவிபரக்கோவையை கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தயவு செய்து விண்ணப்பிக்கும் நிலையை (Application for post of Engineer / Assistant Engineer) தபால் உறையின் வலதுபக்க மேல்மூலையில் குறிப்பிடவும்

அனுப்பவேண்டிய முகவரி,

Manager (Projects)
**Sanken Lanka (Pvt) Ltd.,**
No.31, Wyman Road, Jaffna.
Tel: 021 2224840
Email: Jaffna@sankenlanka.com/ skjm@sankenlanka.lk

MOODY
ISO 9001 : 2008 QMS Certified

JEBZ

*Your application will be treated with strict confidence. Only short listed candidates will be contacted.*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வவுனியா மகாறம்பைக் குளத்தை சேர்ந்த திரு.திருமதி சந்திரசேகரன்- லதா தம்பதியரின் செல்வப்புதல்வனும், வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவனுமாகிய ச. ஜெனோஜன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கண்டி போகம்பர மைதானத்தில் இடம் பெற்ற தடகள போட்டியில் 16 வயதுக்குட்பட்ட பிரிவில் குண்டெறிதல் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை பெற்றுள்ளார். இவர் மேலும் பல வெற்றிகள் பெற வாழ்த்துகின்றோம். இவரை பயிற்றுவித்த பயிற்றுநர்களான கே.விஜிதரன் கே.குருபரன் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மகாறம்பைக்குளம்,
வவுனியா.

தகவல்:
பெற்றோர்
சந்திரசேகரன்–லதா

## நாராயணா கட்டடப் பொருள் வர்த்தகர் யாழ்ப்பாணம்
(NARAYANA HARDWARES TRADE JAFFNA)

### களஞ்சியப் பொறுப்பாளர்
STORE KEEPER

எமது நிறுவனத்தில் களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமையாற்றுவதற்கு தகுதியும் அனுபவமும் கொண்ட 50 வயதுக்குட்பட்ட ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பணியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் தமது சுயவிபரக்கோவை அடங்கிய விண்ணப்பத்தை 06.10.2011 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர்,
நாராயணா கட்டடப்பொருள் வர்த்தகர்,
இல. 115, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 222 5390

## மரண அறிவித்தல்

### சபாபதிப்பிள்ளை இராசரத்தினம்



கருங்காலி காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை இராசரத்தினம் கடந்த 30.09.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் விசியலட்சுமி, சுப்பிரமணியம், லீலாவதி (ஆசிரியை, யாழ்ற்றன் கல்லூரி ), உருத்திரசிங்கம் (பிரான்ஸ்), பரமேஸ்வரி(இந்தியா), கணேசமூர்த்தி (சுவிஸ்), கமலேஸ்வரி (இந்தியா), சிவமூர்த்தி (பிரான்ஸ்), நாகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அம்பலவாணர், மேனகா, சிவரஞ்சனி (பிரான்ஸ்), காலஞ்சென்ற தேவராசா மற்றும் ரஞ்சனி, பாலேந்திரன், விஜிதா (பிரான்ஸ்), ரூபி ஆகியோரின் அன்பு மாமனும் பிரிந்தா, சசிகலா, விக்கினராஜ், விதுர்சன், கிரிகரன், சிறிதா, மைதுனா, நிதுர்சன், சந்துரு, டிலக்ஷனா, தாரணி, திவ்வியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2011) திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீலங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருங்காலி,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

# படங்கள் தரும் பதிவுகள்



கோப்பாய் பழைய வீதி, மனோன்மணி அம்பாள் ஆலய திருவிழாவை முன்னிட்டு வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தால் நடத்தப் பட்ட சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா வில் ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாட சாலை அதிபர் மு. முரளிதரன் பிரதம விருந்தி னராகக் கலந்து போட்டியில் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார்.



களுத்துறை மத்துகம/ வெலிப்பன்னை பகுதி மாணவர்களும் பெற்றோர்களும் கல்விச் சுற்றுலா ஒன்று மேற்கொண்டு வடக்குக்கு வந்தனர். அதன்போது நேற்று உதயனுக்கும் வருகை தந்திருந்தனர்.



ஜி.ஐ. இசற், இ.எஸ்.சி அனுசரணையுடன் அதன் உதவி இணைப்பாளர் வீ. இராசையாவின் ஒருங்கமைப்பில் 'மனம் மாறிய மன்னர்கள்' எனும் பேராசிரியர் மௌனகுருவின் வடமோடிக் கூத்து வடமாகாணத்தில் ஆறு பாடசாலைகளில் அரங்கேற்றப்பட்டன. தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்) திருமதி மலர்விழி கனகசபையின் நெறியாழ்கையில் அழகியல் ஆசிரியர்களால் இந்தக் கூத்து நடிக்கப்பட்டது.



சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றன. இதில் இடம்பெற்ற வரவேற்பு நடனம். (14)



அளவெட்டி மகாஜன சபையால் கட்டப்படவிருக்கும் முன்பள்ளிக்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் நடைபெற்றது. அடிக்கல் நடப்பட்ட பின்னர் மழலைகளுடன் விருந்தினர்கள் உள்ளனர். (38)



வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் நடப்பாண்டுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட லயன் எம்.பரமானந்தனை கடந்த வருடத் தலைவர் லயன் கே.பி. ஆனந்த நடேசன் மாலைசூட்டி வரவேற்கிறார். அருகில் லயன் கே. கதிரமலை, வடமராட்சி லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் வே. சிவயோகன், லயன்ஸ் கழக இரண்டாவது உபமாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ, லயன் ஆ. சிவசுவாமி ஆகியோர் அருகில் உள்ளனர். (ம-236)



சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றத்தால் நடத்தப்படும் இளையதம்பி இராசையா முன்பள்ளி விளையாட்டுப் போட்டியில் மழலைகள் வினோத உடையில் அணிவகுத்து வருகின்றனர். (38)



செறண்டிப் சிறுவர் இல்ல மாணவர்களின் பேச்சுப் போட்டி நிகழ்வுகள் இல்லத்தலைவர் ஏ.கந்தசாமி தலைமையில் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றன. இதில் கல்லூரியின் அதிபர் ஈஸ்வரநாதன் உரையாற்றுகிறார். ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி எம். திருநாவுக்கரசு, செறண்டிப் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த எஸ். குகநாகராஜா, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை அதிபர் எம்.விக்னேஸ்வரன், கோப்பாய் பொலிஸ் அதிகாரி, வைத்திய திலக செறண்டிப் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த ரி.தங்கராசா, ஆர். கணேசலிங்கம், ஆவரங்கால் சிறிவிஸ்ணு வித்தியாலய அதிபர் கே. ரவிச்சந்திரன், மல்லாகம் மகா வித்தியாலய அதிபர் என். சுப்பிரமணியம் ஆகியோர் மேடையில் உள்ளனர்.

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
## றோயல் குளுக்கோஸ்

100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

**றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்**

PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**இலவசம்** அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

## மரண அறிவித்தல்

### அமரர் செல்லர் மார்க்கண்டு

(இளைப்பாறிய முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)



சித்தன் கேணியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் மார்க்கண்டு 28.09.2011 புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர்-இலட்சுமி தம்பதியரின் மகனும் நல்லையா-இராசம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ் சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் மனோசிங்கம் (கனடா), மனோராணி (ஜேர்மனி), மோகனசிங்கம் (கனடா), ஜெயசிங்கம் (ஹொலண்ட்), ஞானசிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மாலினி (கனடா), சிவம் (ஜேர்மனி), மஞ்சு (கனடா), கலா (ஹொலண்ட்), பப்பி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.10.2011) ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பருத்தித்துறை. (4608) வல்லிபுரம் இந்திரா (மைத்துனி)

## மெசின் விற்பனை

மரஅரிவு ஆலை,மில் மற்றும் கைத் தொழிற் சாலைக்கும் ஏற்ற (லிஸ்ரர்) இஞ்சின், "ஜென்மர்" லான்மாஸ்டர் இஞ்ஜின் விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் இடம்-கே.கே.எஸ்.றோட், இணுவில் (இணுவில் சின்னப்பாடசாலைக்கு முன், கவி போட்டோவுக்கு அருகில், வெல்டிங் வேக் சொப்பில்.

மேலும் தொடர்புகளுக்கு:
0777179911
(8804)

## உடன் விற்பனைக்கு

கார், வானுக்குரிய (Car, Van) மிகவும் நல்ல நிலையிலுள்ள, ஜப்பான் 4-ரயர் (155/13), 4 - புதிய றிம், 4 - புதிய வீல்கப் உடன் விற்பனைக் குண்டு.
தொடர்பு: நல்லூர்.
0771387596
(8837)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1980 ஆம் ஆண்டு சித்திரை 3 ஆம் பாதம் பிறந்த மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.
தொடர்பு: 021 224 0003, 0776205002

## காணி விற்பனைக்கு

கந்தர்மடம் இல.24, குமாரசாமி றோட்டில், யாழ். பல்கலைக்கழகத்துக்கு எதிராக 3½ பரப்புக்காணி கிணறு, நீர்த்தாங்கியுடன் விற்பனைக்குள்ளது.
தொடர்பு:0777149666


## விற்பனைக்கு

வைத்தியரின் தனிப்பாவனையில் இருந்த WP-KH-xxxx இலக்க முடைய Toyota Corella (silver colour) 1.6L (141), 2008 model கார் விற்பனைக் குண்டு. இன்று 02.10.2011 காலை 8 மணி -மாலை 5மணி வரை நியூ யாழ். ஆஸ்பத்திரி, பலாலிவீதி, பரமேஸ்வரா சந்தியில் பார்வையிடலாம்.
தொடர்புகளுக்கு: 0776089117

## பந்தல் புனரமைத்தல்

எமது சங்கத்தில் 40 அடி நீளமான தகரப் பந்தல் சில பாகங்கள் அற்ற நிலையில் உள்ளது. இதனைப் பார்வையிட்டு புனரமைத்துத் தருவதற்குரிய கூலியையும் தேவையான பொருள்களையும் எழுத்து மூலம் 10.10.2011 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும். மேலும் பொருள்கள் எம்மால் கொள்வனவு செய்து வழங்கப்படும்.

பொது முகாமையாளர்.
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.



## கலைமகள் அழகுநிலா
### Beauty Academy

நவீன முறையிலான பயிற்சி பதினைந்து நாள்கள் (15) இடம்பெற்று பயிற்சியின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். இப் பயிற்சியின் மூலம் ஒரு அழகு நிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக்கொள்ளலாம். வயதெல்லை கிடையாது. கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன்முறையாகும். விரும்பும் மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும். பயிற்சிகள் :-

- Facial(10 வகை)
- Laser Treatment
- Laser Facial
- தலைவலி,முதுகுவலி,இடுப்புவலி இவற்றுக்கான Treatment
- Pimple treatment
- தலைமுடி உதிர்வுக்கான oil massage
- Eyebro threading
- Waxing
- Hair Colouring
- Hair Curling
- Hair Stratening 2 வகை
- Hair Perming 2 வகை
- Manicure Pedicure
- Hair Cutting
- Hair dye
- Bleaching Face Cleaning
- Bridalmake up 6 வகை
- கறுப்புகாய்கள் இயந்திர மூலம் அகற்றப்படும்

பயிற்சி நேரம் - மு.ப 10 மணி - பி.ப 1.30
பி.ப 2 மணி - பி.ப 5 மணி
தொ.பே.இல -0773719071

கலைமகள் அழகுநிலா,
390, பிரதான வீதி,பஸ்ரியன் சந்தி
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன முன்னாள் பிராந்திய முகாமையாளர்

### சங்கரப்பிள்ளை இராஜலிங்கம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிராந்திய முகாமையாளரும் சக ஊழியர்களும்
பிராந்தியக் காரியாலயம் (வடக்கு)
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

# BUTTERFLY INTERNATIONAL SCHOOL

(Dr.Maria Montessori and Canadian Early Learning Method)

## விஜயதசமியை முன்னிட்டு புதிய பிரிவுகள் ஆரம்பம்

**மிகத் துரிதமாக வளர்ந்து வரும் பாடசாலையில் 2+ முதல் 5+ வயது வரை உள்ள சிறார்களுக்கு ஆங்கில மொழி மூலமான கற்றல் செயற்பாடுகளுடன் மேலதிகமாக கணினி, சிங்களம் பயிற்றுவிக்கப்படுகின்றன.**

**விஜயதசமி அன்று சிறார்களுக்கு 9-11 மணி வரை ஏடு தொடக்கப்படும்.**

**ஆங்கில அறிவுடைய அர்ப்பணிப்புமிக்க இளம் ஆசிரியைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடையோர் 07.10.2011 காலை 9-11 மணி வரை சான்றிதழ்களுடன் B.I.School இற்கு வருகை தரவும்.**

**மேலதிக விவரங்களுக்கு:**



BUTTERFLY INTERNATIONAL SCHOOL
MAIN STREET, CHANKANAI.
T.P:0779434782,0777249678


# யாழ்ப்பாண வாழ்வியல் -
# ஏதாவது ஒன்றை விற்பனை செய்தல்

இருபாலையூர் சிவா

நீண்டதொரு இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தவர்கள் தம் இருப்பைப் பற்றி அறிந்து கொள்ளவும், தெரிந்து கொள்ளவும், நினைவுபடுத்திக் கொள்ளவும் என்ற எண்ணத்தை புலப்படுத்தும் கண்காட்சித் தொடர் ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக த்தில் நடைபெற்றது. எந்த அரசியல் தலையீடுகளும் இன்றி நிகழ்த்தப்பட்டதாகச் சொல்லப்பட்ட இந்நிகழ்வில் அரசாங்க அரசியல் நேரடியாக இல்லாவிடினும், வணிக ரீதியான விளம்பர அரசியலொன்று கண்காட்சி முழுவதும் இழையோடியிருந்ததைப் பலரும் அறிந்திருந்தனர். தமிழ்த் தேசியம் பற்றிப் பேசி வரும் பத்திரிகைகளை விலைக்கு வாங்குதலிலும், விளம்பர மாக்குவதிலும் முன்னிற்கும் அச்சு ஊடகம் ஒன்று இதற்கான நிதி ஆதாரத்தைக் கொட்டியிருந்தது. யாழ்ப்பாணத்தில் தன் வணிக இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இங்கு வாழும் மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் மையத்தை தன் முதல் இலக்காகத் தெரிவு செய்தது. அத்தோடு மக்களோடு இன்னும் நெருக்கமாவதற்காக அவர்தம் பண்பாட்டைப் பற்றிய காட்சிப்படுத்தலை ஒழுங்கு செய்து அவர்களை தம்மை நோக்கியிழுத்தது. பெருமளவிலான வர்கள் அந்த விளம்பரத்திற்குப் பணிந்து அடங்கிப் போய்விட்டனர். உதாரணமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புத்தி ஜீவிகள் மௌனம் அனுசரித்து விட்டனர். அதனைத் தழுவி ஏனையவர்களும் அடங்கிப் போய் விட்டனர்.

தமிழரின் அரசியற் பலத்தைச் சுத்தமாகத் துடைத் தழித்து விட்ட தமிழரின் எதிர் அரசு, அவர்களின் இருப்பை இல்லாமலாக்கச் சதிபணியை திட்டு மிட்ட மேற்கொண்டு வருகின்றது. நமது பண்பாடு அடையாளம் காணமுடியாத சிதைவிற்குள்ளாக்கப்படுவதோடு நம்மையறியாமலேயே அழிக்கப்படுகின்றன. நம் வரலாற்று எச்சங்கள் கண்முன்னே மாற்றி எழுதப்படுகின்றன. தமிழரின் பூர்வீக வரலாறு இல்லாமலாக்கப்படுகின்றது.

மறுபுறத்தில் தமிழகமும். புலம் பெயர் தமிழர்களும் தம் துணிச்சலான எழுச்சியினூடாக இலங்கையரசைச் சர்வதேச வலையில் சிக்க வைக்க முயற்சித்து வருகின்றனர். சர்வதேசமும் நம் பக்கம் சாயத்தத் தொடங்கியுள்ள தருணத்தில் நாம் தூர் போகிறோம். நம் விடுதலைக்காக லட்சக்கணக்கான உயிர்களைப் பலி கொடுத்திருக்கிறோம். அதற்கான ஈட்டத்தை எதைக் கொடுத்தாவது பெற்றாகவேண்டும். நம்மை நோக்கி நீண்டிருக்கும் ஆதரவு, நீண்ட நாட்களுக்கு நிலைத்திருக்கப் போவதில்லை. காற்றுள்ள போது தான் தூற்றமுடியும். நாம் இதுவரைக்கும் காற்றற்ற காலத்தில் தான் தூற்றியிருக்கின்றோம்.



இவ்வாறு தமிழரைச் சூழ்ந்திருக்கும் இக்கட்டான அரசியல் காலமொன்றுக்குள் யாழ்.பல்கலைக்கழகமும் அது சார்ந்த கல்விச்சமூகமும் ஆற்றவேண்டிய சேவைகள் எவ்வளவோ இருக்கையில், அற்ப விளம்பர இலாபங்களுக்காக நம் இனத்தின் வாழ்வியலை விற்பனை செய்வது அபத்தமானதாகும்.

இருபது வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக் கடவைகளைக் கடக்கின்றேன். அது துன்பங்களுக்குள் உழன்றிருந்த காலத்தில் ஓடி ஒழித்து, புலம் பெயர் தேசமொன்றில் காலத்தை ஓட்டிவிட்டுக் களை கட்டியிருந்த காலத்தில் அந் நிலத்தில் கால்பதிக்க கூச்சமாய்த்தான் இருந்தது. ஆனாலும் பதினைந்து வருடங்களின் பின்னரான 'யாழ்ப்பாண வாழ்வியலை' குவிக்கப்பட்ட கூடத்திலாவது பார்த்துவிட வேண்டும் என்ற அவா என்னை உந்தித் தள்ளியது. கண்காட்சி தொடங்கி முதலிரு நாள்களும் நெருக்குவாரங்களைக் காட்சிப்படுத்தும் என்ற பயம் மூன்றாம் நாளை 'யாழ்ப்பாண வாழ்வியல்' தெரிதலுக்கான நாளாகத் தெரிவு செய்து கொண்டேன்.

பல்கலைக்கழகம் நிறையவே மாறியிருந்தது. அப் போதிருந்த மரங்கள், கட்டடங்கள், உயர் பதவி மனிதர்கள் என யாவுமே வரையறையற்ற மாற்றங்களுக்கு உள்ளாகியிருந்தன. பூக்களற்ற பூஞ்சோலைகளுக்கு வர்ணம் பூசும் மனிதரின் அவசர நடமாட்டங்கள் அதிகரித்தபொழுதில் வாழ்வியலின் வரவேற்புப் பலகையடியை அண்மித்தேன்.

ஆ....என்ன அருமை '............ அனுசரணையுடன்' விளம்பரப்படுத்தலுக்கு அமைவாக கிழித்து ஒட்டப்பட்ட பத்திரிகைகளுக்கு நடுவில் 'யாழ்ப்பாண வாழ்வியல்' யாழ்ப்பாணத்தோடு தொடர்பற்ற வர்ணத்திலும் எழுத்து மோடியிலும் சிரித்துக் கொண்டிருந்தது. அடுத்ததாக நிமிர்ந்திருந்த தற்கால நுழைவுப் பந்தல் பழைய (அதாவது 1985களுக்கு முன்னரான) நம் பாரம்பரிய வரவேற்புப் பந்தல்களை புறந் தள்ளிவிட்டு கம்பிக்கூடுகளிலான அலங்காரத்தோடு கம்பீரம் காட்டியது. நான் அறிமுகப்பட்டுக் கொள்ளாத புதிய கட்டடம் விளம்பரப் பத்திரிகையின் வணிக மற்றும் விளம்பரப் பதாதைகளின் காட்சிக் கூடமாக அமைக்கப்பட்டிருந்தது. அங்கே மலிவு விற்பனையும் களைகட்டியது. காலாவதியான பத்திரிகைகள். பிரசுரங்கள் மிகவும் மலிவு. போன போக்கில் எனது பைகளைப் பழைய பத்திரிகைளால் நிரப்பிக் கொண்டேன். தமிழ்க் கொண்டாட்டங்களில் கயிறுகளால் பிரித்துக் காட்டும் வீதி முறை இங்கேயும் மிகவும் நேர்த்தியாகப் பிரயோகமாகியிருந்தது. பிற்பட்ட காலத்துக்குரிய நடராஜர் கவனிப்பாரின்றி நடனமாடிக் கொண்டிருந்தார். யாழ்ப்பாணத்து வைபவ மண்டபம் மாதிரியான புது மனையொன்று அவரைத் தள்ளி வைத்திருந்தது. அடுத்து படுத்திருந்த கோலம் பயறுகளால் போடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்துச் சனங்களுக்கு பயறுதான் பிரதான உணவு என்பதை கற்பனை செய்து கொண்டேன். நான் பாடப்புத்தகங்களில் நெல் அரிசிச் சோறு தான் இலங்கை வாசிகளின் பிரதான உணவென்பதை அறிந்திருந்தேன். சிலவேளை இப்போது மாறியிருக்கலாம். ஆனால் மங்களமற்ற இராணுவ நிறத்தில் அந்தக் கோலம் மிகவும் அழகானது.

முதலாவது கூடம். அப்பப்பா........ வழமை போலவே இந்துத்துவ சிந்தனையின் முழுவடிவமும் தொழிற்பட்ட கூடமாக அது இருந்தது. கருங்கல்லிலும், வெண்கலத்திலும், வேறு எனக்குத் தெரியாத உலோகங்களிலும் ஆன தெய்வச் சிலைகள், விளக்குகள், தெய்வீகத் தட்டு முட்டுக்கள் என்பன சிறைவைக்கப்பட்டிருந்தன. 'பண்பாட்டு எச்சங்களை அல்லது தொன்மப் பொருட்களைக் காட்சிப்படுத்தல்' என்பதனை விளக்கும் வகையிலான ஒழுங்கில் பொருட்கள் காட்சிப்படுத்தப்படவில்லை. மாறாகப் பாடசாலை ஒன்றில் மாணவர்கள் மத்தியில் வருடந்தோறும் நடத்தப்படும் கண்காட்சிக்கொப்பான காட்சிப்படுத்தல்களே இடம்பெற்றிருந்தன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறை என்ற ஒன்று இருப்பதாக அறியப்படினும் அருங்காட்சி ஒன்றுக்கான பொருட்களை காட்சிப்படுத்துவது எப்படி என்ற அடிப்படையைக் கூட தெரிந்திராதவர்கள் தான் அங்கு இருக்கின்றனர் என்பதை நினைக்க வேதனை எழுந்தது.. சிலவேளைகளில் அவர்களின் பங்களிப்பு இதில் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆயினும் யாழ்ப்பாண வாழ்வியலைக் காட்சிப்படுத்துவதற்கு சகல துறைசார்ந்தவர்களினதும் பங்களிப்பு ஒரு அறிவுஜீவித சூழலில் கட்டாயம் உணரப்பட்டிருக்கும். ஆனால் மிகப்பிரமாண்டமான விளம்பரங்களோடு இதனை ஒழுங்குபடுத்தியவர்கள் கொஞ்சமும் அழகுணர்ச்சியற்றவர்களாய் தொழிற்பட்டிருக்கின்றனர். அலங்கோலப்படுத்தப்பட்டிருந்த பொருட்களின் பெறுமதி மிக அதிகம். ஆனால் அது அங்கு காரியமாற்றிய வெள்ளை வர்ண விவரணையாளர்களாலும், ஒழுங்குபடுத்துனர்களாலும் விளங்கிக் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. பெரும்பாலான பாடசாலை மாணவர்களின் கேள்விக்குக் கூட 'அதுக்கு சேரைத்தான் கேட்கணும், எனக்குத் தெரியாது.'(சிரிப்பு) 'சரியாகத் தெரியேல்ல' இவைகளே பதிலாத் தரப்பட்டன. இது துறைசார்ந்த கற்பித்தலின் பலவீனத்தைக் காட்டியதுடன் விவரணையாளர்கள் சரியான முன் தயார்படுத்தல்களின்றி வெள்ளைப் புடவைகளைக் கட்டிக்கொண்டு காட்சியாகியிருக்கின்றனர். இந்த நிலைமைகளை அனைத்துக் காட்சியகங்களிலும் அனுபவித்தேன்.

பின்னர் என்னை வரவேற்ற அறை நாணயங்களின் வரிசைகளோடு ஆரம்பித்தது. முதலாவதே பெருங்கோணல். 'கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்டது' (கண்டுபிடிப்பு என்பது முதன் முதலாய் ஒரு விடயத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தல் எனக் கொள்ளலாமே தவிர, ஏற்கனவே கண்டுபிடித்த பொருளொன்றை கண்டெடுத்து அதனை 'கண்டு பிடித்தல்' என் விளங்கப்டுத்துவது எவ்வளவு தூரம் சரியானதோ? நான் அறியேன். கண்டெடுத்தல் என்பதே பொருத்தமானதாக இருக்கும்) என விவரிக்கப்பட்ட நாணயத்தோடு தற்கால இலங்கை நாணயத்தின் இரண்டு ரூபாய் குத்தியையும் வைத்திருந்தார்கள். பெறுமதி, பயன்படுத்திய உலோகம், வடிவமைப்பு, பயன்படுத்திய அரசு, அதில் உள்ள எழுத்து என எதிலுமே ஒத்து வராத நாணயத்தைப் பொருத்திக் காட்டியிருந்தார்கள். பாவம் விளக்கம் தான் தர முடியவில்லை. இது அந்தக் கூடத்திலிருந்து எடுக்கப்பட்ட முதல் உதாரணம். முற்றிலும் அப்படித்தான் இருந்தது. பெரும்பாலான விளக்கங்கள் 'லாம்' என்ற தமிழ் இலக்கண ஐயப்பாட்டு விகுதியோடு தான் முடிவுற்றன. யாழ்ப்பாண வாழ்வியல் மற்றும் தொல்லியல். வரலாறு பற்றிய தேடலில் சுவராஸ்யமான செய்திகளைத் தருவனவாக இருப்பினும் ஒழுங்கான முறையில் காட்சிப்படுத்தல்கள் அமையவில்லை. பாவம் பாடசாலை மாணவர்கள் துரிதப்படுத்தல்களாலும், துரத்திய வெயிலாலும், நெருக்கடியாலும் சொல்லுவதையும் பார்ப்பதையும் நம்பிக் கொண்டு பயணித்தனர். நானும் அவர்களானேன். ஒரு நெருக்கமான அறைக்குள் சில புகைப்படங்கள் அடுக்கப்பட்டிருந்தன. உண்மையிலேயே நல்லாயிருந்தது. புகைப்படங்கள் தான் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அருமை. யாழ்ப்பாண வாழ்வியல் சடங்குகளை பிறப்பு தொடக்கம் இறப்புவரை பட்டியலிட்டு காட்சியாக்கியிருந்தார்கள். ஒவ்வொரு காலத்துப் பண்பாட்டையும் புகைப்படங்கள் அழகுபடுத்தின. அதிலும் கடைசியாய் வைக்கப்பட்டிருந்த கீரிமலையில் எடுக்கப்பட்டது எனச் சொல்லப்பட்ட, காகத்துடன் அடங்கிய படம் அருமை. எதேச்சையாக எடுக்கப்பட்டிருந்த அந்தப் புகைப்படத்துக்கு விருது கொடுக்கலாம். அதன் பிறகு இன்னொரு சுவாமிஅறை. பக்கத்தில் மச்சத்தைத் தான் காட்சிப்படுத்திவிட்டார்கள். தொழில் முறைகள், நாம் நேரில் பார்ப்பவைகளும் யாழ்ப்பாண மக்கள் அனுபவிப்பவைகளும் தான். காட்சிப்படுத்தலுக்கான அழகியலின்றி சடலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

அதற்கு அடுத்த அடுத்த கூடங்களில் யாழ்ப் பாணத் தமிழர்கள் அன்றாடம் தொட்டுணரும் பொருள்கள் பரப்பப்பட்டிருந்தன. பழைய றேடியோ, மணிக் கூடு, பணம் பொருள்கள், கறள் பிடித்து அழுக்கான வெண்கலத் தட்டுமுட்டுக்கள், 1950களில் பாவிக்கப்பட்ட மாபிள் பொருள்கள், பாடசாலைகளின் புகைப்படங்கள் இவைகளால் அறைகள் நெருக்கமாயிருந்தன. பார்த்தவுடனேயே இப்பொருள்கள் எல்லாம் நம் அம்மம்மா காலத்துக்குரியவை என்பதைத் தெளிவாக உணரலாம். ஆனால் இதெல்லாம் அந்தக்காலப் பொருள்கள் எனச் சொல்லுவது எவ்வளவு பெரிய வேடிக்கை. 130 வருடங்களுக்கு முற்பட்ட தொப்பிகூட வைத்திருந்தார்கள். 'நம்பலாமா? நம்பித் தான் ஆகணும் சார்' என்ற தமிழ்நாட்டு நிலைதான் 'யாழ்ப்பாண வாழ்வியல்'.

சித்த மருத்துவ மாணவர்கள் தமது வசதி வாய்ப்புக்களுக்கு உட்பட்டு நீண்ட விரிவுரைகளை வழங்கினர். இந்த மருந்துப் பாவனைகள் எல்லாம் யாழ்ப்பாணத்தில் எவ்வளவு தூரம் இடம் பிடித்தது என்ற கேள்விகளற்று தமிழ்நாட்டிலோ அல்லது பழங்குடிமக்களோ இதனைப் பயன்படுத்தியிருப்பார்கள் எனும் வைத்திய நிபுணத்துவ நிலையில் விரிவுரைகள் அமைந்தன. பாவம் வந்து நொந்து நூலாகிய நான். முன்றலில் பழைய வீடுகளைச் செய்து வைத்திருந்தார்கள். வேலிகளும், வீடுகளும் யாழ்ப்பாணத்தின் வாழ்வியலைப் பற்றிய பொறிதட்டலை வழங்கின. வகை வகையான மதில்களைத்தான் இன்று இங்கு பார்க்கமுடியும். ஆனால் அன்றொரு காலத்தில் யாழ்ப்பாண இருப்பும். அடைப்பும் இந்த குறுகிய வெளிகளுக்குள் தான் இருந்தன. அதனை நினைவுபடுத்தும் காட்சிகள் அழகானவையாக இருந்தன. இறுதியாக வணிக ரீதியான மையங்கள். அதில் ஒடியல் கூழ் 30 ரூபாவுக்குக் குடிக்க முடிந்தமை மறக்கமுடியாததாக இருந்தது. இறுதியாக மனது கொதிக்கும் ஒரு விடயம். நான் படித்த காலத்தில் பல்கலைக்கழக மாணவ ஒன்றியம் யாழ். மக்களின் அரசியலை வெளிப்படுத்தும் சந்தையாக இருந்தது. இந்தப் பழைய கன்ரீனில் தான் பிரபாகரன் தன் எண்ணங்களை விரிவாக்கினார். விடுதலை விவாதங்கள் இங்குதான் சூடு கிளப்பும். அப்போதிருந்த மாணவத் தலைவர்கள் தமிழ் சமூகத்தின் நடத்துனர்களாய் இயங்கினர். இப்போது தகரத்தால் அடைக்கப்பட்ட கொக்கோலா கொட்டகைக்குள் சோடா விற்பனை செய்து கொண்டிருந்தார் மாணவ ஒன்றியத் தலைவர். என்னை அழைத்து வந்த விரிவுரையாளர் அறிமுகப்படுத்தினார். நாம் படித்த காலத்தை அவர் நினைவுபடுத்திக் கொண்டேயிருந்தார். நாம் சோடாக் கடைக்கு அண்மையில் இருந்து பகிர்ந்து கொண்டிருந்த நினைவுக் கதைகளின் அதிக இடங்களைப் பிரபாகரன் பிடித்திருந்தார். எழுந்து நடக்கத் தொடங்கினேன். யாழ்ப்பாணத்து வெயிலும், "யாழ்ப்பாண வாழ்வியல்" போலச் சுட்டது. ★

# தென்மராட்சியில் கரப்பந்தாட்டம் மட்டுவில் மோகனதாஸ் சம்பியன்

தென்மராட்சி, ஒக.2

சாவகச்சேரி ''சிங்கர் நிறுவனம்'', யாழ்ப்பாணம் ''மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை'' மற்றும் யாழ்ப்பாணம் ''நியூ நெல்சன் சாரதிப் பயிற்சிப் பாடசாலை'' ஆகியவற்றின் அனுசரணையுடன் கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழகம் தென்மராட்சிக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்திய ''செற்றப்'' முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

மேற்படி போட்டிகள் அண்மையில் வளர்மதி மைதானத்திலே மின்னொளியில் இடம்பெற்றது. இந்தப் போட்டியில் 20 இற்கும் மேற்பட்ட கழகங்கள் பங்கு பற்றிய போதும் இந்த சுற்றுக்கு மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகமும் தெரிவாகி மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் மூன்று சுற்றுக்களைத் தொடர்ச்சியாக வென்று வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. இந்தப் போட்டியின் சிறந்த வீரனாக மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.பிரதீபன் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராக ''சிங்கர் நிறுவன'' சாவகச்சேரி கிளை முகாமையாளர் எஸ்.அஜந்தன் கலந்து கொண்டு வெற்றியீட்டிய கழகத்துக்குப் பரிசினை வழங்கினார்.

(த-288)

# 20/20 நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஒக.2

படையினர்-பொதுமக்கள் நல்லுறவு வெற்றிக் கிண்ணத்துக்கான 20/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆரம்ப நாள் நிகழ்வு நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

ஆரம்ப நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பொதுமக்கள் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரிகேடியர் எம்.எஸ். அத்தப்பத்து கலந்து கொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

வர்த்தக வங்கியின் பிராந்திய வடமுகாமையாளர் எஸ். ஜி.ரஜீவன், யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் உப செயலாளர் கோபி கிருஷ்ணா, 512 படை பிரிவின் அதிகாரி கேணல் சி.டி.வீரசிங்க, போட்டி ஒருங்கமைப்பு சிரேஷ்ட அலுவலர் கேணல் சந்த கேவாகே கிரிக்கெட் அணியின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(த-23)


## மின்னல் வேக கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக.2

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வருடா வருடம் நடத்தும் யாழ்.மத்திய கல்லூரியின் மறைந்த முன்னாள் மாணவ முதல்வன் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான ஒரு நாள் மின்னல் வேக கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இந்த மாதம் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெறும் எனவும், இறுதிப் போட்டி மின் ஒளியில் இடம் பெறும் எனவும், போட்டி ஏற்பாட்டாளர் தெரிவித்தனர்.

(த-23)



கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழகம் தென்மராட்சிக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே அண்மையில் நடத்திய தாச்சிப் போட்டியில் கைதடி உதயசூரியன் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.
இந்த நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ப.சீவரத்தினம் முதலிடத்தைப் பெற்ற உதயசூரியன் விளையாட்டுக் கழக அணித்தலைவரிடம் வெற்றிக் கிண்ணத்தை வழங்குகிறார்.
(த-288)

## ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக.2

கிளிநொச்சி கல்வி வலயத்தினால் 4 கோட்டங்களின் ஆசிரியர்களுக்கு இடையே ஆசிரியர் தினத்தை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் ஆண்களுக்கான உதைபந்தாட்டம், கிரிக்கெட் ஆகியனவும், பெண்களுக்காக வலைப் பந்தாட்டப் போட்டியும் இடம் பெறவுள்ளது. (த-23)

## இன்றைய தாச்சிப் போட்டி

கைதடி, ஒக.2

கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சிக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே மின்னொளியில் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக் கிழமை இடம் பெறவுள்ள ஆட்டத்தில் கைதடி துர்க்கா விளையாட்டுக் கழகம் ''ஏ'' அணியை எதிர்த்து கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக ''சி'' அணி மோதும். (த-288)

## மூன்று பிரிவுகளில் சென்.ஜோன்ஸ் வெற்றி



யாழ்ப்பாணம், ஒக.2

சென்.ஜோன்ஸ் கல்லூரிக் கும், ஸ்ரான்லிக் கல்லூரிக்கும் இடையிலான 13,15,17,19 வயதுப் பிரிவு அணிகளின் நட்பு ரீதியான உதைபந்தாட்டப் போட்டிகளில் மூன்று பிரிவுகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்றது.

இதில் 13 வயதுப் பிரிவுக்கான ஆட்டம் இரு அணியினரும் எந்தவித கோல்களையும் பெறாமையால் சம நிலையில் முடிவடைந்தது.

15 வயதுப் பிரிவு அணியினருக்கான ஆட்டத்தில் 2:0 என்ற கோல்கணக்கிலும், 17 வயதுப் பரிவு அணியினருக்கான ஆட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கிலும் 19 வயதுப்பிரிவு அணியினருக்கான ஆட்டத்தில் 3:0 என்ற கோல் கணக்கிலும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

(த-23)

# அல்பதா, கிறீன்பீல்ட், அன்ரனிஸ் அணிகள் கிரிக்கெட்டில் வெற்றி

யாழ்ப்பாணம் ஒக்.2

மன்னார் உப்புக்குளம் அல்பத்தா விளையாட்டுக் கழகத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டத்தில் நேற்று அல்பத்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் அல்பத்தா 'பி' பிரிவு, சின்னக்கடை கிறீன்பீல்ட், தாழ்வுப்பாடு அன்ரனிஸ் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் அல்பத்தா விளையாட்டுக் கழக 'பி' பிரிவு அணியை எதிர்த்து கௌரியம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அல்பத்தா 'பி' பிரிவு அணி 8 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தனேஸ் 21 ஓட்டங்களைத் தனது அணி சார்பாகப் பெற்றார்.பந்து வீச்சில் கௌரியம்பாள் விளையாட்டுக்கழக அணி சார்பாக உமேஸ் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

82 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கௌரியம்பாள் விளையாட்டுக் கழக அணியினர் 8 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் உமேஸ்வரன் 18 ஓட்டங்களைத் தனது அணி சார்பாகப் பெற்றர்.

பந்து வீச்சில் அல்பத்தா 'பி' பிரிவு அணிசார்பாக எச்.எம். உனோஸ் 2 விக்கட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் சின்னக் கடை கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தோட்டவெளி யுனைட்டட் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தோட்டவெளி யுனைட்டட் விளையாட்டுக்கழகம் 8 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மெல்வின் 11 ஓட்டங்களை தனது அணி சார்பாகப் பெற்றார்.

பந்து வீச்சில் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகஅணி சார்பாக றூபராஜ் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். 41 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மன்னார் சின்னக் கடை கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழக அணி 4 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் மகிந்தன் 26 ஓட்டங்களை தனது அணி சார்பாக பெற்றார். பந்து வீச்சில் தோட்டவெளி யுனைட்டட் விளையாட்டுக் கழக அணி சார்பாக ஆனந்த் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் தாழ்வுப்பாடு அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முசலி அல்பத்தா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தாழ்வுப்பாடு அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 8 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றார்.

இதில் ராயூ 43 ஓட்டங்களையும் மேனன் 31 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றார்.

பந்து வீச்சில் அல்பத்தா விளையாட்டுக் கழக அணி சார்பாக றிகான் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

94 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனத் துடுப்பெடுத்தாடிய தாழ்வுப்பாடு அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய முசலி அல்பத்தா விளையாட்டுக் கழக அணி 8 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 42 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் 15 ஓட்டங்கள் அப்துல் ரகுமான் பெற்றுக்கொண்டார்.

பந்து வீச்சில் தாழ்வுபாடு அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி சார்பாக ரஞ்சன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

(த-23)

# தப்பிக் கொண்டார் சச்சின் டெண்டுல்கர்

இந்திய மதிப்பில் ரூபா 4.75 லட்சத்துக்கு சச்சினுக்கு விலக்களிக்க மும்பை மாநகராட்சி முடிவு செய்துள்ளது. முன்னதாக குடியேற்றச் சான்றிதழ் பெறாமல் சொகுசு வீட்டிற்கு குடியேறியதற்காக சச்சினுக்கு ரூ. 4.75 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.

சச்சின் கிரிக்கெட் மூலம் இந்தியாவுக்கும், மும்பைக்கும் பெருமை சேர்த்தால் அவருக்கு இந்த விவகாரத்தில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று மும்பை மாநகராட்சிக்கு மகாராஷ்ர மாநில அரசு கோரிக்கை விடுத்தது.

இதுதொடர்பாக சச்சினுக்கு விளக்கம் கேட்டு அனுப்பி னார் மும்பை மாநகராட்சியின் தலைமைப் பொறியாளர் ராஜீவ் குமார். இது குறித்து அவர் கூறுகையில், குடியேற்றச் சான்றிதழ் வாங்காததைத் தவிர வேறு எந்தத் தவறும் நிகழவில்லை. குடியேற்றச் சான்றிதழ் பெறாமல் குடியேறியதற்காக ரூ.4.75 அபராதம் விதிக்கப்படும் என்றார்.

சச்சின் வீட்டை வியாழக்கிழமை ஆய்வு செய்த மாநகராட்சியின் கட்டட மதிப்பீட்டு அதிகாரிகள், தண்ணீர், வடிகால் சபை உள்ளிட்ட துறைகளில் இருந்து தடையில்லாச் சான்றிதழ் வாங்கி எங்களிடம் சமர்ப்பித்த பிறகு குடியேற்றச் சான்றிதழ் வழங்கப்படும் என்று தெரிவித்தனர். (15)



சொமசெட் அணிக்கும், சவுத் ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக மழை பெய்ததன் காரணமாக குறித்த ஆட்டம் ஒரு பந்து கூட வீசப்படாமல் கைவிடப்பட்டுள்ளது.

இதேவேளை மும்பை இந்தியன்ஸ் அணிக்கும், கேப் ஹோப்பிராஸ் அணிக்குமிடையிலான ஆட்டம் மழை காரணமாக முதலாவது இன்னிங்ஸுடன் கைவிடப்பட்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 176 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது. (15)

## வந்தது மழை; வென்றது கொல்கத்தா

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கும் தென்னாபிரிக்காவின் வாரியர்ஸ் அணிக்கு கிடையிலான நேற்றைய ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி டக் வேர்த் லூயிஸ் முறையில் 22 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

சம்பியன்ஸ் லீக் தொடரில் குழு 'பி' ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும், வாரியர்ஸ் அணியும் நேற்றைய தினம் பெங்களூரில் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணித் தலைவர் கம்பீர் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.


அதன்படி சிமட்ஸ், பிறின்ஸ் ஜோடி களமிறங்கியது. முதலாவது பந்து பரிமாற்றத்தை லீ வீச 2 நான்கு ஓட்டங்கள் இருவராலும் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அடுத்த பந்து பரிமாற்றத்தை கலிஸ் வீச இறுதிப் பந்தில் முதலாவது இலக்கு சரிந்தது. 4 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிறின்ஸ் ஆட்டமிழந்து வெளியேறினார். அதன் பின்னர் இணைந்த சிமட்ஸ், இங்கிராம் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை ஏற்படுத்தியது. நான்காவது பந்து பரிமாற்றத்தின் இறுதிப் பந்தை கலிஸ் வீச அதை எதிர்கொண்ட இங்கிராம் ஆட்டத்தின் முதலாவது ஆறு ஓட்டத்தை விளாசினார். தொடர்ந்து கொல்கத்தா வீரர்களின் பந்து வீச்சை இருவரும் அதிரடியாய் விளாசித்தள்ளினர். 40 பந்துகளில் இரண்டாவது இலக்குக்காக 50 ஓட்டங்கள் பகிரப்பட்டது.

இறுதியில் அணி 95 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இரண்டாவது இலக்கு சரிக்கப்பட்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய சிமட்ஸ் 46 ஓட்டங்களுடன் பாலாஜின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த பௌச்சர், இங்கிராமுடன் இணைந்து சிறப்பாக ஆடினார். அதிரடியாக ஓட்டங்கள் குவித்த இங்கிராம் 33 பந்துகளில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இறுதியில் 47 பந்துகளில் தலா 3 ஆறு ஓட்டங்கள், நான்கு ஓட்டங்களுடன் 61 ஓட்டங்களை குவித்த நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த தைசன் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழக்க, இறுதியில் 20 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் 155 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தது. பௌச்சர் ஆட்டமிழக்காமல் 27 பந்துகளில் 38 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பலாஜி 2 இலக்குகளையும், லீ, கலிஸ், இக்பால் அப்துல்லா தலா ஒரு இலக்கினையும் சரித்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய கொல்கத்தா அணிக்கு பிஸ்லா, கலிஸ் ஜோடி அதிரடியான ஆரம்பத்தைக் கொடுத்தது. 3.3 பந்து பரிமாற்றங்களில் 35 ஓட்டங்கள் முதலாவது இலக்குக்காக பகிரப்பட்டது. 12 பந்துகளில் 2 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அதன் பின்னர் இணைந்த கலிஸ், கம்பீர் ஜோடி தொடர்ந்து வாரியர்ஸின் பந்து வீச்சை சிதறடித்து ஓட்டங்களைக் குவித்தது. மழையால் ஆட்டம் 9 ஆவது பந்து பரிமாற்றம் முடிவில் நிறுத்தப்படும் போது கொல்கத்தா அணி 83 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினை மாத்திரம் இழந்திருந்தது. கலிஸ் 19 பந்துகளில் 3 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 31 ஓட்டங்களுடனும், கம்பீர் 23 பந்துகளில் 3 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 33 ஓட்டங்களையும் பெற்றிருந்தார்.

தொடர்ச்சியாக மழை பெய்ததன் காரணமாக ஆட்டம் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 22 ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆட்ட நாயகனாக இங்கிராம் தெரிவானார். (15)

# கலக்கும் கலிஸ்



கலிஸ்

சம்பியன்ஸ் லீக் 20 ஓவர் கிரிக்கெட் ஆட்டத்தில் நேற்று முன்தினத்துடன் 11 லீக் ஆட்டங்கள் முடிந்துவிட்டன. அதன்படி கலிஸ்(கொல்கத்தா) 5 ஆட்டத்தில் 192 ஓட்டங்கள் குவித்து முதலிடத்தில் உள்ளார்.

இவர் அதிகபட்சமாக 74 ஓட்டங்கள் எடுத்துள்ளார். லெண்டில் சிம்மன்ஸ் 132 ஓட்டங்கள் (ரினிடாட் ரொபாகோ) எடுத்து இரண்டாம் இடத்திலும், வன்டர் மேர்வ்(சொமர்செட்) 131 ஓட்டங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

ராம்போல்(ரினிடாட் ரொபாகோ) 10 இலக்குகள் கைப்பற்றி முன்னணியில் உள்ளார். நரீன்(ரினிடாட் ரொபாகோ) 6 இலக்குகளும், தெரோன்(வாரியர்ஸ்), டுமினி(கேப் ஹோப்பிராஸ்) தலா 5 இலக்குகளும் கைப்பற்றியுள்ளனர். (15)



# விலகினார் டீ வில்லியர்ஸ்

தென்னாபிரிக்காவின் ஒரு நாள் அணியின் தலைவர் டீ வில்லியர்ஸ் கை விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் அவரால் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் விளையாட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு நாள் கிரிக்கெட் அணித்தலைவரான பிறகு அவர் விளையாடும் முதல் தொடர் இதுவாக இருந்தது.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த டீ வில்லியர்ஸ் துடுப்பாட்டம் மற்றும் இலக்கு காப்பாளராக சம்பியன்ஸ் லீக் தொடரில் பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணிக்காக விளையாடி வந்தார். அவர் கையில் ஏற்பட்ட காயம் காரணமாக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் பங்கேற்கவில்லை.

அவரது கையில் ஏற்பட்ட காயம் குணமடைய 6 வார காலத்திற்கு மேலாகும் என்பதால் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 20 ஓவர் ஆட்டம் மற்றும் ஒரு நாள் தொடரில் இருந்து விலகியுள்ளார். (15)

# அக்தருக்கு பின்பாட்டுப் பாடும் அப்ரிடி



சயிட் அப்ரிடி அண்மையில் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற சொகைப் அக்தரின், சச்சின் பற்றிய கருத்தை ஆமோதித்துள்ளார். முன்னாள் பாகிஸ்தான் அணித் தலைவரான சயிட் அப்ரிடி, ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ் என்று வர்ணிக்கப்பட்ட சொகைப் அக்தரின் புயல்வேகப் பந்துவீச்சை எதிர்கொள்ளும் போது சச்சினின் கால்கள் பயத்தால் நடுங்குவதைக் கண்டிருக்கிறேன் என்று கூறியிருக்கிறார்.

அக்தரின் 'காண்ட்ராவர்ஷியலியுவர்ஸ்' புத்தகத்தில் சச்சின் பற்றி அவர் எழுதிய கருத்து இரு நாட்டு எல்லையிலும் பெரும் பிரச்சினையைக் கிளப்பியது. அக்தரின் இந்தப் புத்தகம் வெளியாக இருந்த நிகழ்ச்சி மும்பையில் ரத்து செய்யப்பட்டது. ஆனால் இதற்கெல்லாம் பதிலடி கொடுப்பது போல் அப்ரிடி, அக்தருக்காகப் பரிந்து பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அக்தர் உண்மையைத்தான் கூறியிருக்கிறார். சச்சின் டெண்டுல்கர் அவர் பந்துவீச்சுக்கு பயந்தது உண்மை. நான் களத்தில் இருந்த போது அக்தரின் பந்துவீச்சை எதிர்கொள்ளும் சச்சினின் கால்கள் பயத்தில் நடுங்குவதைக் கண்டிருக்கிறேன் என்று 'தி எக்ஸ்பிரஸ் டிரிபியூன்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அப்ரிடி கூறியுள்ளார்.

ஒவ்வொரு முறை நெருக்கடி ஏற்படும் போதும் துடுப்பாட்டக்காரர்கள் இவ்வாறு நடந்து கொள்வது இயல்பு. பாகிஸ்தானின் 'ஓப் ஸ்பின்னர்' சயீட் அஜ்மல் பந்துவீச்சுக்கும் இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டதுண்டு என்று கூறியிருக்கிறார் அப்ரிடி.

கடந்த 2011 உலகக் கிண்ண நேரத்தில், இந்திய பாகிஸ்தான் அணிகள் மோதிய அரையிறுதிப் ஆட்டத்தில் பாகிஸ்தான் விளையாடிய அணியில் அக்தரை சேர்த்துக் கொள்ளவில்லை.

அதற்காக அணித்தலைவர் அப்ரிடியை அக்தர் வாய்க்கு வந்தபடி திட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அவர் அணிக்கு மீண்டும் திரும்ப வேண்டும், அணிக்காக விளையாட வேண்டும். அதற்காக அணி மேலாளரிடம் கேட்டுக்கொள்வேன் என்றும் கூறியிருக்கிறார். (15)

## மரண அறிவித்தல்



### சின்னத்துரை மன்மதராசன்

(உரிமையாளர் – விமல், பிரகாஸ் கொங்கிறீட் கற்கள் விற்பனை நிலையம் – தாவடி)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், முத்தட்டு மட வீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை மன்மதராசன் (30.09.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இணு வில், காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்தட்டு மட வீதி,
கோண்டாவில் மேற்கு.

தகவல்:
**குடும்பத்தினர்.**

---

Hotline 077 309 9 308

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
ஆங்கிலத்தில் ஆசியாவில் மட்டுமல்ல
சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
City & Guilds -UK English Course @ ESOFT

AutoCad 2D 3D

TALLY

Diploma in Information Technology

Diploma in Software Engineering

Diploma in Web Engineering

Diploma in Business Management

Esoft Computer Studies
17/1 Brown Road
Jaffna

| | | | |
|---|---|---|---|
| Jaffna | 021-2224142 | Nelliyadi | 021-2264940 |
| Kilinochchi | 021-2285444 | Kodikamam | 0773099308 |
| Chavakachcheri | 0773099308 | Uduppiddy | 021-3201303 |

---

## மணி விழா நல்வாழ்த்து



உயர்திரு
### ப.செல்லத்துரை
J.P.

(அதிபர், யா/ கைதடி கலைவாணி வித்தியாசாலை, உபதலைவர் தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம், கைதடி.)

அறுபது அகவையில் அறிவானில் முதிர்ந்தவர்
இருபது போல் என்றும் இளநகை புரிபவர்
உறுவது உணர்ந்து ஊரினைக் கூட்டுபவர்
வருவது வாழ்வின் உயர்வு உயர் கல்வியே என்பவர்
பெறுவது சமூக மேம்பாடு கூட்டுறவே எனக் கொண்டவர்
தருவது மன நிறைவு மக்கள் சேவையே என உழைப்பவர்

இத்தகைய உயர் பண்புகளைக் கொண்ட எமது உபதலைவர் அவர்கள் மணி விழாக் காணும் இப்பொன்னாளில் அவர் சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்ந்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று இறைவனை வேண்டி மனமார வாழ்த்துகின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பொது முகாமையாளர், பணியாளர்கள்.
தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.கூங்கம், கைதடி.

---

## வேலையாள் தேவை

சைக்கிள் காட்சியறைக்கு
30 வயதுக்குட்பட்ட வேலையாள் தேவை.
தொ.பே.: 0719134767
0711840722

---

## ஆசிரியர் வே.அன்பழகன்

அவர்களின்
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை – 2012
தரம் 4 வகுப்பு (தற்போது தரம் 3) ஆகியன
ஆரம்பமாகின்றன.

| | |
|---|---|
| *யாழ்ப்பாணத்தில்:* | *சாவகச்சேரியில்:* |
| *அன்பொளி கல்வியகம்* | *அன்பொளி கல்விநிலையம்* |
| *யாழ்.இந்துக் கல்லூரி வீதி.* | *தபாற்கந்தோர் வீதி,* |
| | *சாவகச்சேரி.* |

அனுமதிகளை 08.10.2011 இற்கு முன்னதாக உடன் பெற்றுக்கொள்ளவும்.
*இயக்குநர்கள்.*

---

## தேவை

சுகாதார உதவியாளராகப் பயிற்சி பெற்று, வேலை செய்ய விரும்புபவர்கள் எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும். வன்னியில் இருந்து யாழ். திரும்பிய கஷ்ட நிலையில் உள்ள பெண் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நேரில் வரவும்.

பணிப்பாளர்,
**சென்ரல் நேசிங் ஹோம்**
350, பலாலி வீதி, திருநெல்வேலி.

---

## பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும்
இரும்பகம் ஒன்றுக்குப்
பணியாளர் தேவை.
தொடர்பு:
0778575158

---

## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

**சரஸ்வதி பூசை நன்னாளில்
ஆரம்பமாகின்றன**

### A/L DAY CLASS

- பொருளியல் – S.வரதராஜன்
- கணக்கீடு – B.முகுந்தன்
- வணிகக் கல்வி – V.முரளி

05.10.2011 – புதன் 7.30 AM

**இதேநாளில் ஆரம்பமாகின்றது**
**கலைப்பிரிவு** புதன் 8 AM

- நீங்கள் நன்கு அறிந்த எமது வழமையான பிரபல்யம் பெற்ற ஆசிரியர் குழுவினால்
- உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

---

## காந்தி ஜெயந்தி தின நிகழ்வு

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தால் 143 ஆவது காந்தி ஜெயந்தி தின நிகழ்வுகள் இன்று முற்பகல் 10 மணிக்கு 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையின் தலைவர் கா.கார்த்திகேசு தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலையின் உளவள துணையாளர் நா.நவராஜ் முழுமையாக வாழ்தல் எனும் தலைப்பிலும், யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் ந.சிவகரன் ''அகிம்சை தத்துவம் ஒரு நோக்கு'' எனும் தலைப்பிலும் உரையாற்றுவர். (ஒ-313)

---

## காணி, வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்திக்கு அருகில் மெயின் வீதியில் பாதை அமைந்த 6 ¼ பரப்புடைய காணியும் (1 3/4, 1 1/2, 1, 2 பரப்புத் துண்டுகளாகவோ) மற்றும் பிறவுண் வீதி, 1ஆம் ஒழுங்கையில் 2 பரப்புக் காணியும், சுண்டுக்குளி காட்டுக் கந்தோர் ஒழுங்கையில் 3 1/4 பரப்புக் காணியில் 6 அறைகள், குளியலறைகளுடன் சகல வசதிகளுடன் அமைந்த வீடும் உடன் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0778449687**

---

## வசாவிளான் ஞானவைரவர் ஆலய பொதுக்கூட்டம்-15.10.2011 சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு

மேற்படி கூட்டத்துக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரீன் அவர்கள் பிரதம விருந்தினராகவும், மற்றும் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் அவர்களும், கிராம அலுவலர் அனுரதன் அவர்களும், கலாசார உத்தியோகத்தர் அகிலன் அவர்களும் சிறப்பு விருந்தினராக வருகைதர உள்ளனர் என்பதையும் குறிப்பிட வேண்டுகிறேன்

மேலும் பொதுக் கூட்டத்துக்கு, வைரவப் பெருமானின் வைகாசி மடையில் பங்குபற்றும் அடியார்கள் அனைவரும் சமுகமளிக்குமாறும் கேட் டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வசாவிளான் மத்திய மகாவித்தியாலய வகுப்பறை மண்டபத்திலே நடைபெறும் என்பதனை வசாவிளான் பொது மக்களுக்குத் தெரியப் படுத்த வேண்டும்.

நன்றி.

தலைவர்,
மூ.விநாயகமூர்த்தி

செயலாளர்,
ப.உமையவேள்

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



### கனகசபை மகேஸ்வரி (மணி)

*தோற்றம்*
*28 * 04 * 1935*

*மறைவு*
*02 * 09 * 2011*

நாள்கள் பல சென்றாலும்
உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு அகலாது

தகவல்:
ந.உதயஸ்ரீ (பெரியவன்)
உகந்தை இல்லம்,
அம்மன் றோட்,
கொக்குவில் கிழக்கு.

என்றும் உங்கள் நினைவுடன்,
மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், பெறாமக்கள்.

---

## அந்திரான் என்னும் காணி விற்பனைக்கு தடை அறிவித்தல்

பொலிகண்டி, கந்தவனம் கல்யாண வேலவசுவாமி கோயிலுக்குச் சொந்தமான உடுப்பிட்டி, கோயிற்பற்று, கரணவாய் சோழங்கன் குறிச்சியில் உள்ள அந்திரான் / வறளான் நி.பர 75 ஐக் கொண்டதும் 2009–10–11 ஆம் திகதி அன்று 880 ஆம் இலக்க நில அளவைப் படமூலம் அளந்து விந்தாரிக்கப்பட்டதின் படி நில.பர 68 குளி 12.0 ஐக் கொண்ட ஆதனமாகும்.

இது மூன்று சந்ததிக்கு மேலாய் கோயிலின் ஆட்சியில் உள்ளது. இவ்வாதனம் என்னால் குத்தகைக்கு, குத்தகை ஒப்பந்த உறுதி ஆவணம் மூலம் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாதனத்தைச் சிலர் கைமாற்றம் செய்வதற்கும் அறுதி எழுதுவதற்கும் முயல்வதாக அறிகின்றேன்.

இவ்வாறான செல்லுபடியற்ற கைமாற்றங்கள் எவற்றையும் செய்ய வேண்டாம் என்றும் இது ஒரு கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி கோயில் ஆதனம் என்றும் அறியத் தருகின்றேன்.

கிழக்கு – ஒழுங்கை
வடக்கு – V.சின்னத்தம்பிக்கும் திருநாவுக்கரசுவின் உரிமைக்காரருக்கு மேற்குறித்த கோயிலின் ஆதனமும்.
மேற்கு – திருகோணன் சிவலிங்கத்துக்கும் மறுபேருக்கும்
தெற்கு – S.கந்தசாமியின் உரிமைக்காரருக்குரிய ஆதனம்.

இப்படிக்கு,
பரம்பரை ஆதீனகர்த்தாவும், உரித்தாளரும்.
"செவாலியர்"
திருமதி சிவயோகநாயகி இராமநாதன்

கந்தவனம்,
பொலிகண்டி கிழக்கு,
வடமராட்சி.

---



HERO CYCLES
KENTON

## ஹீரோ, கெண்டன் காட்சியறை

சிறியோர் முதல் பெரியோர் வரையானஅனைவரினதும்
சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள்

பலவர்ணங்களில்
புதிய லேடீஸ் சைக்கிள்



மற்றும் புதிய லேடீஸ் பைக் என்பனவற்றை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்
சிறுவர்களின் மின்சார மீள்நிரப்புக் (RECHARCHABLE & REMOTE) கார்களை மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரிஜினல் ஹீரோ
லேடீஸ் சைக்கிள்களும்
ஆண்கள் சைக்கிள்களும்
பெற்றுக்கொள்ளலாம்.

ஹீரோ, கெண்டன் விநியோகத்தர்கள்
ஸ்ரார் ரேடர்ஸ்
இல.258, 260, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.

தொ.பே.: 021 4921672





(49)

## அரசு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் நாளைய தினம் அடுத்த சுற்றுப் பேச்சு நடக்கும் என்று கடந்த பேச்சின் பின்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் உள்ளூராட்சித் தேர்தலைக் காரணம்காட்டி அரசு இப்போது பேச்சைப் பின்போட்டுள்ளது.

''பேச்சு ஒத்திவைக்கப்பட்டதாக இதுவரை உத்தியோகபூர்வ அறிவிப்பு ஏதும் எமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், அது ஒத்தி வைக்கப்படுவதற்கான சாத்தியங்களே அதிகம் உள்ளன'' என்றார் சம்பந்தன். (உ-15)

## தொம்பே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. எனினும் பதற்றம் தணியவில்லை.

இதனை அடுத்து கொழும்பில் இருந்து சென்ற விசேட பொலிஸ் குழு ஒன்று, தொம்பே பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரி மற்றும் நான்கு பொலிஸாரைக் கைது செய்து அழைத்து வந்தனர்.

பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் என்றோ பொலிஸாரைத் தாக்க முயன்றவர்கள் என்றோ எவரும் கைது செய்யப்படவில்லை. (உ)

## சிறுவருக்கென....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலர்கள், வெளிநாடுகளின் தூதுவர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நாடு முழுவதும் இருந்து தேர்வு செய்யப்பட்ட 100 சிறுவர்களும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (உ)

## மாணவிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் (2011 ஆம் ஆண்டு) அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி தனுஷா 3.10 மீற்றர் உயரத்தைக் கடந்து புதிய சாதனை படைத்துள்ளார். தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ள இவர் 21 வயதுப் பிரிவு பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் 149 சென்றிமீற்றர் உயரம் பாய்ந்து இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் தனதாக்கிக் கொண்டார்.

19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தலில் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி எஸ்.தனுஷா 2.81 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து புரிந்த சாதனையை ஒரு வருடத்தின் பின்னர் (2011ஆம் ஆண்டு) அதே கல்லூரி மாணவியான பவித்திரா 3 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனை படைத்து தங்கப்பதக்கதைப் பெற்றுள்ளார்.

21 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி காவேரி 2.90 மீற்றர் உயரம் பாய்ந்து இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவன் லவணன் 3.71 மீற்றர் உயரம் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் நிகழ்வில் குளமங்கால் ஆர்.சி. வித்தியாலய மாணவன் அன்ரனி பிரசாந்த் 3.71 மீற்றர் உயரம் பாய்ந்து இரண்டாம் இடத்தைப் பிடித்து வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் நிகழ்வில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவன் றொசானன் 3.65 மீற்றர் உயரம் பாய்ந்து மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைத் தனதாக்கிக் கொண்டார்.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட் எறிதல் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் பானுப்பிரியன் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கம் பெற்றுள்ளார்.

17 வயதுப் பிரிவு பெண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் மாதகல் சென்.ஜோசப் வித்தியாலய மாணவி அனற் 1 நிமிடம் 10.61 செக்கனில் ஓடி முடித்து வர்ண விருதைப் பெற்றுள்ளார். (ஒ-23)

பச்சிலைப்பள்ளி, பளை, புலோப்பளை, அறத்தியம்பதி

**திருவருள் மிகு அறத்திக் கன்னகா பரமேஸ்வரி அம்பாள் திருக்கோயில்**

நாளை [03.10.2011] திங்கட்கிழமை காலை மண்டலாபிஷேக பூர்த்தியும், நவோத்தர சகஸ்ர [1009] சங்காபிஷேகமும், பரிவார மூர்த்திகளுக்கு அஷ்டோத்தர சத சங்காபிஷேகமும் [109] நடைபெற்று மண்டலாபிஷேகத்தினைப் பூர்த்தி செய்வதற்கு எல்லாம் வல்ல அகிலபுவன மாதாவாகிய அம்பிகையின் திருவருள் கை கூடியுள்ளது. எனவே அம்பிகை அடியார்கள் சங்காபிஷேக ஆராதனைகளிற் கலந்து கொண்டும், தரிசித்தும், திருத் தொண்டுகள் பல புரிந்தும் அம்பிகையின் திருவருளுக்குப் பாத்திரராகி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

**குறிப்பு:-** சங்காபிஷேகத்தினைத் தொடர்ந்து பி.ப 4.30 மணியளவில் திருவூஞ்சல் இடம்பெற்றுத் திருவீதியுலா நடைபெறும்.

சங்காபிஷேக பிரதம குரு
''ஈசான சிவாச்சாரியார்''
ஆலயக்குருக்கள் சிவஸ்ரீ .நடராஜா பிரபாகரக் குருக்கள்,
சங்காபிஷேக உபயம்
மு.இ.செல்லத்துரை குடும்பம் V.M.T (கனடா)
இ.இராசேந்திரம்.

## கனடா மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான நம்பகமான அனைத்துலக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று கனடா வலியுறுத்தி வருவது தொடர்பிலேயே கொழும்பின் சீற்றம் இப்படி வெளிப்பட்டுள்ளது.

ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றிய கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட், இலங்கை விவகாரத்தில் ஐ.நா. காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டிலும் இலங்கை விவகாரத்தை கனடா பிரச்சினையாக்கும் என்று கருதப்படுகிறது. இந்த மாதப் பிற்பகுதியில் ஆஸ்திரேலியாவில் நடக்க இருக்கும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கூட்டத் தொடரில் இரு நாடுகளுக்கும் இடையில் காரசாரமான வாதங்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையிலேயே தமிழர்களின் வாக்குகளுக்காக இலங்கையுடனான இராஜதந்திர உறவை இழக்கவும் கனடா தயாராகி விட்டது என்று இலங்கை குற்றஞ்சாட்டியுள்ளது.

அதேவேளை, சிறிலங்காவுக்கு எதிரான கனடாவின் நடவடிக்கைகள் கொழும்பை பெரிதும் கவலை கொள்ள வைத்துள்ளதாகவும், இதுதொடர்பாக ஐ.நாவுக்கான சிறிலங்காவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்ன ஆழ்ந்த கவலையை வெளியிட்டார் எனவும், கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ)

## விடுவிக்கப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்படைக்கப்படுவார்கள் என்றார் அவர்.

புனர்வாழ்வு நிலையங்களில் பயற்சி பெற்றுள்ளவர்களுக்குச் சட்ட ஆவணங்கள் மருத்துவச் சான்றிதழ் உள்ளிட்டவற்றை வழங்கவேண்டி இருப்பதாகவும் இரண்டு தினங்களில் இந்தச் சான்றிதழ்கள் உரிய அதிகாரிகளினால் தயார் செய்யப்பட்டு விடுதலை செய்யப்படவுள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு விடும் என்றும் அவர் கூறினார். (உ)

**விற்பனையாகின்றது**

ஆசிரியர் தின அன்பளிப்பு பொருள்கள்
TECHARS DAY Gift மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம். T.P. 021 222 9881

**வீடு வாடகைக்குத் தேவை**

சிறிய குடும்பம் ஒன்றுக்கு பிறவுண் வீதி, பலாலி வீதி, யாழ். நகரை அண்டிய பகுதிகளில் வசதியான வீடு தேவை. தொடர்பு: 0774301054

**வீடு வாடகைக்கு**

166/3, நாவலர் வீதியில் 8 அறைகளைக் கொண்ட மோல்மாடி வீடு வாடகைக்குண்டு. (அண்ணளவாக 2400 சதுர அடி) நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0750408060

**விற்பனைக்கு**

LA-xxxx இலக்கம் உடைய 250 கன்டர் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0778575158, 0772543158

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

சம்பளம் நேரில்
பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்பு: 0772377466

**தளபாடம் தேவை**

தனியார் கல்வி நிலையத்துக்குரிய வாங்கு, மேசைகள் தேவை. விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். 0774696695

## மின்கம்பம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றது. இதில் இதே இடத்தைச் சேர்ந்த ஜெயானந்தம் கஜஜீவன் (வயது-22) என்ற இளைஞரே மரணமானவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

குறித்த பிரதேசத்தில் மின்சார சபையினால் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஊழியர்கள் திருத்தப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். போதிய வெளிச்சம் இல்லாததால் 'ரோச் லைட்' வெளிச்சத்திலேயே திருத்த வேலைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது மின்கம்பத்தைத் தூக்கி நிறுத்தப் பணியாளர்கள் போதாத காரணத்தால் அந்தப் பகுதியைச் சேர்ந்த பிரஸ்தாப இளைஞரை ஊழியர்கள் உதவிக்கு அழைத்துள்ளனர். தொடர்ந்து மின்கம்பத்தைத் தூக்கி நிறுத்த முயன்றுள்ளனர். அவ்வேளை மின்கம்பம் திடீரெனச் சரிந்து வீழ்ந்தது. அதில் அந்த இளைஞர் சிக்கி நசியுண்டு பலியானார்.

இளைஞனின் சடலம் நேற்றிரவு சங்கானை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக இறந்த இளைஞனின் உறவினரும், வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினருமான செல்வகுமார் தகவல் தருகையில்,

''மின்சார சபையினர் பாதுகாப்பான முறையில் தமது பணிகளை மேற்கொள்வதில்லை. இதனால்தான் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இது கண்டிக்கப்பட வேண்டிய விடயம்'' - என்றார். (ஒ-15-323)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் கனகரத்தினம்

சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கனகரத்தினம் நேற்று (01.10.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கனகநாயகியின் அன்புக் கணவரும் பவானி, பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ,மனோகரன், பிரபாலினி ஆகியோரின் பிரியமிகு மாமனும் துஷாயினி, யதுசாயினி ஆகியோரின் அன்பு பேரனும் அமரர் இராசரத்தினம்,அமரர் பொன்னுத்துரை ,அமரர் தங்கராசா, நவரத்தினம்(தியாகு-திருகோணமலை) அமரர் யோகேஸ்வரி, சிவம்(புளியங்கூடல்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2011) ஞாயிறு பி.பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு.
க.பார்த்தீபன்(மகன்), செ.மனோகரன்(மருமகன்).

### செல்லமுத்து சின்னத்தங்கம்

இடைக்காடு ,அச்சுவேலியைப் பிறப் பிடமாகவும் மாநம்பன் தோட்டம், கெருடாவில் தெற்கு, தொண்டமனாற்றை வதிவிடமாகவும் கொண்ட செல்லமுத்து சின்னத்தங்கம் நேற்று (01.10.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா-தெய்வானை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற செல்லமுத்துவின் மனைவியும் பாக்கியம், பார்வதி,காலஞ் சென்றவர்களான இரத்தினம், கந்தசாமி ஆகியோரின் சகோதரியும் செல்வராணி, கிருஸ்ணமூர்த்தி ஆகியோரின் அன்புத்தாயும் இராமச்சந்திரன்பவானி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் , சதீஸ்குமாரன் சந்திரிக்கா, ராஜ்குமரன்,திவானா , நிசானா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் (02.10.2011) ஞாயிறு முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காட்டுப் புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மாநம்பன் தோட்டம், கெருடாவில் தெற்கு,தொண்டமனாறு.
பொ.இராமச்சந்திரன் (மருமகன்)

### நாகலிங்கம் சிவபாதம்



பெரியவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவபாதம் நேற்று (01.10.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு- மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், குணாகரன், கிரிகரன், ஜீவாகரன், ஜெயந்தி, கஜந்தி, சுபாஷ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், குணாளினி, தமிழ்ப்பிரியா, சுகந்தினி, நிமல்ராஜ், ரவீந்திரன் ஆகி யோரின் அன்பு மாமனும், துஷாந், சர்மினி, தனுயா, கோவிகன், பானுஷா, லோஷனா, விரஷனா, கிருஷனா, ரோகனன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற மகாலிங்கம், காலஞ்சென்ற துரைராசா மற்றும் வைகுந்தவாசகம், சிவலிங்கம், சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் பெரியவிளான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளாவெளி றோட்,
பெரியவிளான், இளவாலை.
தகவல்: குடும்பத்தினர்.

**Higher Education Institution seeks outstation partners**

Based in Colombo, we represent leading UK universities and conduct their Degree and MBA programmes in Sri Lanka. We are looking for partners in outstation areas to merge with us and offer these higher education programmes in their respective areas. Previous experience in conducting such programmes will not be essential.

You should meet the following criteria:

- Have suitable premises for conducting classes
- Financial resources to set up and support the institution
- Able to produce suitable references

Please Call: 0771097997

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1979 அத்தம் 3 ஆம் பாதம் 8 இல் செவ்வாய் கிரகபவம் 73,Doctor மணமகனுக்கு மணமகள் தேவை.

0773236302, 0773604401

**விற்பனை அல்லது வாடகை**

சாவகச்சேரி பிரதேச செயலகம் முன் பாக கண்டி வீதியில் உள்ள மூன்று மாடி கொண்ட கட்டடத் தொகுதி உள்ளது.

தொடர்பு: 0777177592

**German swiss மொழிகள்**

தமிழ் மொழிபெயர்ப்புடனும் Audo book விளக்கத்துடனும் Germany இல் இருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது. அடுத்த வகுப்புகள் ஆரம்பமாக உள்ளன.

தொடர்புக்கு:
10, Palaly Road, Jaffna.
T.P: 0771604823

**கடைத் தொகுதி வாடகைக்கு**

K.K.S வீதி கொக்குவில் சந்தியில் இரு கடைத் தொகுதிகள் வாடகைக் குண்டு. விஸ்தீரணம் 10' X 30', 20' X 20'

தொடர்புகளுக்கு -0770366241

**காணி விற்பனைக்குண்டு**

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட 30 பரப் புக் காணி விற்பனைக்குண்டு. நீள, அகல பக்கங்களை இரு பிரதான வீதியின் முகப்பாகக் கொண்டது.

தொடர்புக்கு: 0777582996


**வீடு விற்பனைக்கு**

அல்வாய் தெற்கு, தெரு மூடி மடத்தடிச் சந்தியில் வீதிக்கருகில் உள்ள வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு.

தரகர் தேவையில்லை.

தொடர்பு:
0778084017

**ரூபா 50,000/- க்கு மேல் மாத வருமானம் பெற இன்றே முதலீடு செய்யுங்கள்**



**ஐஸ் கிறீம் இயந்திரம்**

கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிறீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்கலேட்
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

BRAND NEW

Price Rs.99,000/- upwards

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(MEMBER OF PLUSS INT.)
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
தமிழில் தொடர்புகொள்ள (யோகேஸ்)
Hotlines: 077 391 8870, 077 1066902

**உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை**

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், புடைவைகள், CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL

* மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு)
* கடல் உணவுகள், மருந்துப் பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
* வெளி நாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

மற்றும் ஒரு சேவை
01/10/2011 இல் இருந்து
லண்டன் சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு 1kg - 400/=
கனடாவிற்கு 1kg - 500/=
(PICKUP SERVICE)

DHL கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. 650/= ரூபாவிலிருந்து.

**திருமுருகன்கொம்நெற்**

(வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற DHL முகவர்)



Head Office.
259, K.K.s Road, Jaffna.
* No.18, main Road, Nelliyadi.
* No.05, Thirumurugan, Main Road, Kilinochchi.
* No.46, Adijapatham Veethy, Thirunelvely.
* TCN Express
2B, Nelsen place, Colombo 06. Hot Line - 021 2227835

**உள்நாட்டு வெளிநாட்டு துரித கடிதங்கள் பொதிகள் பரிமாற்ற சேவை**

Our Agents DHL aramex SriLankan Cargo ups

மஹாராஜா Food நிறுவனத்தினர் யாழ்.நகரில்...!

உங்கள் வெளிநாட்டில் உள்ள உறவுகளுக்கு பொருள்களையும் ஆவணங்களையும் குறைந்த செலவில் பாதுகாப்பாகவும் விரைவாகவும் உத்தரவாதத்துடனும் அனுப்பி உறவை வலுப்படுத்த நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்.



உங்கள் வெளிநாட்டு உள்நாட்டு உறவுகள் அனுப்பும் பொதிகளை எமது யாழ்.கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

G.T.V Enterprises (Pvt) Ltd.
ஜீ.ரி.வி என்ரபிறைஸ்சஸ் (பிறைவேற்) லிமிட்.
DHL முகவர்

11Kg இற்கு அதிகமான பொதிகளிற்கு விசேட கட்டண சலுகை

உள்நாட்டிற்கான பொதிகள், கடிதங்கள் நாட்டின் எப்பாகத்திலும் விநியோகிக்கப்படும்.

யாழ்ப்பாணம்:- #225, Kasthuriyar Road, Jaffna. T.P: 0212224338.
#272, K.K.S. Road, Jaffna. T.P:0212224825.
கொழும்பு: #18/3,Dr.E.A Cooray Mawatha, Wellawatte. T.P: 0112360926, 0112259849.

**U.S. GRANITE, MARBLE & TILE WORKERS**
**(மாபிள் வேலைகள்)**

நவீன முறையில், பல டிசைன்களில், உங்கள் இல்லங்களுக்கு மாபிள் பதித்தல், பாத்ரூம் பிட்டிங், பிளமிங் வேலைகள் நியாயமான கட்டணத்தில் செய்து தரப்படும்.

T.P: 0755433245
0724294285
081 - 5786042

**After A/L?** Government Schol.

**CIMA-UK**
Batch I : Sat 7.30-2PM
Batch II : Sun 2-5 PM
Batch III : Mon - Fri 8.30 AM - 2 PM

**Engineering-USA**
Software / Network
Batch I : Sat & Sun 10 - 12PM
Batch ii : Mon- Fri 8 AM -10 AM

**BIT** University of Colombo-ucsc
Batch i : Sat & Sun 8 - 12PM
Batch II : Sat & Sun 2 - 6PM
Batch iii : Mon- Thu 4.30-5.30 PM

**Multimedia_USA**
FIT O/L or A/L தகைமை இன்றி பல்கலைகழக அனுமதிக்கு

After A/L கற்கை நெறி ஒன்றைப் பயிலும் மாணவர்கள் BCS - UK, IELTS, TOEFL, CISCO-CCNA Oracle Java, ICDL, கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.

MCS
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction
www.mcsitcampus.org

Diploma Courses.. Free5 Course fee* *MsOffice, AutoCAD, *Web Designing *Hardware *Accounting *DTP *English

தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம். உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிர்த்துங்கள்

**உங்கள் பொறியியல் கனவை நனவாக்கும்...**

**City & Guilds**

சர்வதேச அங்கீகாரம் பெற்ற
**Engineering Qualifications**

- Civil Engineering
- Quantity Surveying
- Electrical & Electronics
- Motor Vehicle
- Mechanical

SIPL JOB NETWORK | LEARNING PLUS | WORK PLACE LEARNING



Chartered Engineer ஆகவும், Engineering Council - UK உறுப்பினராகவும் குறுகிய வழி.

அனுபவம், தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள் குழாம்.

இலகு தவணைக் கட்டண முறை.

City & Guilds மூலம் பரிந்துரைக்கப்பட்ட பாட விதிகளுக்கு உட்பட்டு பிரயோக முறையில் (Practicals) கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம்.

மேலதிக விபரங்களைப் பெற உங்கள் [Name] [Address] [Course] போன்ற விபரங்களை 0777 780 139 க்கு SMS செய்யுங்கள்
அல்லது
021 4 66 66 99

SCOT

SKILLS COLLEGE OF TECHNOLOGY
SKILLS INTERNATIONAL (PVT) LTD.
Jaffna Branch
No. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : jaffna@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk

தொழில்நுட்பக் கல்வியின் முன்னோடி Colombo | Kandy | Jaffna

TVEC Reg. no.: P01/0414

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.